துளிர் விடும்

2015

Thalir

# துளிர்

தமிழின் தனித்துவம் காப்போம்!

மலர் - 7
ஆடி - புரட்டாசி



இந்து சமயத்தின் மூலமொழி



பழந்தமிழ் இலக்கியம் போற்றும் குடும்ப விழுமியங்கள்



ராதிகா சிற்சபைஈசன் நேர்காணல்




அழகிய அமோலைட் கனேடிய மாணிக்கக் கற்கள்



நட்சத்திரம் ஒன்றின் இறப்பு




விலை: $.2.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீடுகளில் முக்கிய முதலீடு வீடு

என்னூடாக வாங்கும் வீடுகளுக்கு ஒரு வருட
## உத்தரவாதம்







வீடு வாங்க விற்க அழையுங்கள்

## சங்கர் மாணிக்கம்

# 416.453.6666

## உங்களுக்குத் தெரியுமா?

வீட்டு உரிமையாளர்கள் பெரிதளவு பணத்தைச் சேமிக்கின்றார்கள்

| வீணாகும் உங்கள் பணத்தை சேமியுங்கள் | Condo | Townhouse | Bungalow | Detached |
|---|---|---|---|---|
| House Amount | Start form $100,000 | Start form $200,000 | Start form $300,000 | Start form $350,000 |
| Down Payment | $5,000 | $10,000 | $15,000 | $17,500 |
| Loan Amount | $95,000 | $190,000 | $285,000 | $332,500 |
| Mortgage Payment | $420 | $840 | $1261 | $1472 |
| Property Tax | $100 | $200 | $225 | $250 |
| Condo Maintenance Fee | $500 | $200 | - | - |
| Utilities | - | $200 | $300 | $300 |
| Total Payment | $1020 | $1640 | $1786 | $2022 |
| Room Rent Income | $300 | $400 | - | - |
| Basement Rent Income | - | - | $700 | $800 |
| TOTAL | $720 | $1240 | $1086 | $1222 |

Down Payment 5%

உங்களுக்காக வீடு விற்க வாங்க தகுதியான **Real Esate Agent** ஐ தெரிவு செய்யுங்கள்

## About Shankar Manickam...

- Full Time Realtor
- Top 5% Sales Rep in Canada
- Highest award winner - Chairman 2011
- Working 7 days a week 9am to 9pm
- Home inspector
- Former Mortgage Advisor

**Home Life/Future** Realty Inc., Brokerage* **905.201.9977** Cell: **416.453.6666**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REFINANCE TO LOWER RATES & SAVE 75%

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @2.9% | 1,498.02 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line Of Credit | 16,000 @6.5% | 566.67 | 0.00 |
| Line Of Credit2 | 12,500 @7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @24% | 150.00 | 0.00 |
| | | | |
| New Mortgage Payment | 386,500 @2.5% | | 1,524.55 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,014.20** | **1,524.55** |

**MONTHLY SAVING → $2,489.65**

VERICO®
MORTGAGE BROKERS NETWORK

KIRUBA
THANABALASINGHAM
Mortgage Agent
LIC#: M12002440

ULTIMATE MORTGAGE & FINANCIAL SOLUTIONS
LIC#: 11995
305-5200 Finch Ave East, Scarborough, ON. M1S 4Z5

416.298.2100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாண்டு சமூக இலக்கிய தமிழ் சஞ்சிகை


## Thalir

Chief Editor
Sivamohan Sivalingam

Sub Editors
Nanthini Mohan
Moorthy Sellathurai

Managing Editor
Prof. E. Balasundaram
Dr. Paul Joseph

Media Cordinator
Dr. Paulraj Pandian
G digital photography Gopu

Advisors
Shankar Manikkam
Shan Thayaparan
Rudy Ruththran
Thava Elayathamby
Arul Chellaia
P.Rankanathan
S.Krishna Gopal
K.Rameshkumar
V.Chandran

Design & Artwork
Thalir Design

Advertisements
S.Kavitha, S.Mohan
S.Pushpan, S.Suresh



43 Andover Cresent, Scarborough, ON.
M1E 2X2 Tel: 647 657 0910,
647 345 3022 | Fax: 647 345 3022
Email: thalir.thalir@yahoo.ca


## தளிரில் மலர்வது.


திருக்குறள் ..... 03
இந்து சமயத்தின் மூலமொழி..... 04
சங்க கால வரலாறு ..... 06
வெரோனிக்காவின் முக்காடு ..... 12
மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள் ..... 20
சிரிப்பு - எமது ஆக்கத்தன்மைக்கான ஒரு ஆற்றல்..... 24
பண்டைய தமிழ்ப் பெண்களின் தேசப்பற்று..... 28
தமிழரின் தொன்மை ஆவணம் தொல்காப்பியம்..... 30
பழந்தமிழ் இலக்கியம் போற்றும் குடும்ப விழுமியங்கள்..... 34
தமிழ் வேட்ப்பாளர்களுக்கே ..... 39
ராதிகா சிற்சபைஈசனின் நேர்காணல் ..... 40
பேராசை பெரு நட்டம் ..... 44
அரிதான அழகான அமோலைட் ..... 50
சமைப்போம்! சுவைப்போம்! ..... 52
விரல்கள்..... 54
மூலிகைகளின் மருத்துவம்..... 59
கவித்தளிர் ..... 60
நட்சத்திரம் ஒன்றின் இறப்பு..... 62
தளிரில் படர்ந்த நிகழ்வுகள் ..... 67
சிரி... சிரி... சிரி... ..... 72
அறிவியல் குழப்பங்கள்..... 75
கம்பராமாயணம் - ஒரு நோக்கு ..... 76
பூந்தளிர்..... 78
தனிமரம் தோப்பாகாது... தமிழ் பழமொழி ..... 85
சிறிலங்காவை அனைத்துலக..... 86
சுபாஸ் சந்திர போஸ்..... 88


Disclaimer:- All rights reserved the opinion/views expressed by the contributors are their own and do not reflect those of the publisher. The Publisher assumes no responsibility of any kind of publication.

Published by: Thalir Publication,
Member of National Ethinic Press Media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் தியாகத் தீபத்தின் நினைவலைகளுடன்...



தமிழ் இனத்துக்கும், மொழிக்கும் உரம் ஊட்டிய உறுதிமிக்க அஹிம்சாவாதி தியாகத் தீபனின் இருபத்தி எட்டாம் ஆண்டு நினைவஞ்சலியுடன் துளிர்க்கின்றது காலாண்டு தளிர் இதழ். தன் இனத்தின் விடுதலை வேண்டி, தன்மானத்துடன் ஆயிரம் கனவுகளை நெஞ்சினில் சுமந்து உண்ணாவிரதம் இருந்து, இறுதி மூச்சு வரை ஒரு சொட்டு நீர் கூட அருந்தாது தான் கொண்ட கொள்கையின் மீது உறுதி கொண்டு தன் உயிரையே தமிழினத்தின் விடிவிற்காக தியாகம் செய்த திடம் கொண்ட தியாகி தீபன். நினைவலை களுடனும்...

இலங்கை அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு வல்லரசுகளும் ஆதரவளித்து வந்த வேளையில் உள்நாட்டு, வெளிநாட்டு தமிழர்கள் ஒன்றிணைந்து தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதையும், அப்பாவி தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்படுவதையும் தடுத்து நிறுத்துமாறு ஒரே குரலில் ஐ.நா.சபையில் குரல் எழுப்பி னார்கள். அவர்களது குரல் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாக உதாசீனம் செய்யப்பட்ட போதிலும் 'அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற நம்பிக்கையுடன் தமது எதிர்ப்பினை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். கனடா வாழ் தமிழ் மக்களும் இந்நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டு வருவதனை நாமறிவோம்.

பல்லின மக்களையும் ஓரினத்தவர்களாகக் கருதி, மதித்து பாரபட்சமின்றி ஆட்சி செய்து வரும் உண்மையான ஜனநாயக நாடான கனடாவில் விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலிலும் முன்னரை விட இம்முறை அதிகளவில் ஆறு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். புதிய ஜனநாயகக் கட்சி (என்.டி.பி.), பழமைப் பாதுகாப்பு கட்சி (கொன்சவேற்றிவ்), சுதந்திரக் கட்சி (லிபரல்), கிரீன் பார்ட்டி ஆகிய நான்கு கட்சிகளினதும் சார்பில் நம்மவர்கள் போட்டியிடுகின்றனர். எக்கட்சி வெற்றி ஈட்டி ஆட்சிக்கு வந்தாலும் இங்கு உண்மையான ஜனநாயக ஆட்சி தான் நிலவும். எனவே எக்கட்சி என்ற பேதமின்றி எம்மின வேட்பாளர்கள் வெற்றியீட்ட வேண்டும் என்பதனை கருத்திற் கொண்டு அந்தந்த தேர்தல் தொகுதிகளில் வாழும் தமிழ் வாக்காளர்கள் அனைவரும் ஒரே முகமாக தமிழ் வேட்பாளர்களுக்கே தமது பொன்னான வாக்குகளை வழங்கி அவர்களை வெற்றி வாகை சூடச் செய்தல் அவசியம்.

ஒற்றுமையே எம்மினத்தின் பலம்! ஒற்றுமை நீங்கின் நம்மனைவர்க்கும் தாழ்வு! என்பதனை மறந்து விடாது நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தமிழினத்தின் குரலாக துளிர்க்கும் 'தளிர்' சஞ்சிகை.

நன்றிகளுடன் 'தளிர்' பிரதம ஆசிரியர்

**சிவமோகன் சிவலிங்கம்**

**editor.thalir@yahoo.ca | (647) 657 0910**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

அதிகாரம் / **Chapter / Adhigaram:** நீத்தார் பெருமை, பால் / **Section / Paal:** அறத்துப்பால் / **Virtue / Araththuppaal 1,** இயல் / **Chapter Group / Iyal:** பாயிரவியல் / **Prologue / Paayiraviyal**

உலகப் பொதுமறையாம் திருக்குறளை உங்கள் அனைவருக்கும் விளங்கும்படி ஆங்கிலத்திலும், தமிழிலும் இங்கு தந்துள்ளோம். இது எமது தமிழ் மொழியில் திருவள்ளுவரால் ஆக்கப்பெற்ற உலகம் வியக்கும் ஒரு நூல். எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய பல கருத்துக்களை உள்ளடக்கியதும், பெரிய விடயத்தை இரண்டே வரிகளில் அழகு தமிழில் எழுதப்பட்டதுமான ஒரு பொக்கிஷம்... எல்லாத் தமிழர்களும் அறிந்திருக்கவேண்டிய ஒரு நீதி நூல்.

### குறள் 36

அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

**விளக்கம்:** முதுமையில் செய்யலாம் என எண்ணாமல் இப்போதே அறத்தைச் செய்க; அந்த அறம் நாம் அழியும் போது தான் அழியாமல் நமக்கு துணை ஆகும்.

**Couplet 36**

Do deeds of virtue now Say not, 'Tomorrow we'll be wise'; Thus, when thou diest, shalt thou find a help that never dies.

**Explanation**

Defer not virtue to another day; receive her now; and at the dying hour she will be your undying friend

**Transliteration**

Andrarivaam Ennaadhu Aranjeyka Matradhu
Pondrungaal Pondraath Thunai

### குறள் 37

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை

**விளக்கம்:** அறத்தைச் செய்வதால் வரும் பயன் இது என்று நூல்களைக் கொண்டு மெய்ப்பிக்க வேண்டியது இல்லை. பல்லக்கைத் தூக்கிச் செல் பவனையும் அதில் பயணிப்பவனையும் கண்ட அளவில் பயனை அறியலாம்.

**Couplet 37**

Needs not in words to dwell on virtue's fruits: compare, The man in litter borne with them that toiling bear

**Explanation**

The fruit of virtue need not be described in books; it may be inferred from seeing the bearer of a palanquin and the rider therein

**Transliteration**

Araththaaru Ithuvena Ventaa Sivikai
Poruththaanotu Oorndhaan Itai

### குறள் 38

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்

**விளக்கம்:** அறத்தை செய்யாது விட்ட நாள் இல்லை என்று சொல்லும்படி ஒருவன் அறம் செய்தால், அச்செயலே, அவன் திரும்பப் பிறக்கும் வழியை அடைக்கும் கல் ஆகும்.

**Couplet 38**

If no day passing idly, good to do each day you toil,
A stone it will be to block the way of future days of moil

**Explanation**

If one allows no day to pass without some good being done, his conduct will be a stone to block up the passage to other births

**Transliteration**

Veezhnaal Pataaamai Nandraatrin Aqdhoruvan
Vaazhnaal Vazhiyataikkum Kal

### குறள் 39

அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல

**விளக்கம்:** அறத்துடன் வருவதே இன்பம்; பிற வழிகளில் வருவன துன்பமே; புகழும் ஆகா



**Couplet 39**

What from virtue floweth, yieldeth dear delight;
All else extern, is void of glory's light

**Explanation**

Only that pleasure which flows from domestic virtue is pleasure; all else is not pleasure, and it is without praise

**Transliteration**

Araththaan Varuvadhe Inpam Mar Rel-laam, Puraththa Pukazhum Ila

### குறள் 40

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி

**விளக்கம்:** ஒருவன் செய்யத்தக்கதுஅறமே; விட்டுவிடத் தக்கவை தீய செயல் களே.

**Couplet 40**

'Virtue' sums the things that should be done; 'Vice' sums the things that man should shun

**Explanation**

That is virtue which each ought to do, and that is vice, which each should shun

**Transliteration**

Seyarpaala Thorum Arane Oruvarku
Uyarpaala Thorum Pazhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தின் மூல மொழி

# சமஸ்கிருதமா? ஆதித்திராவிடமா?

இந்து சமய தத்துவங்களை விளக்குகின்ற பல்வேறு இந்திய மொழிகளில் தமிழில்தான் இந்து தெய்வப் பெயர்களின் உட்கருத்தைச் சிறப்பாக விளக்க முடியும். தமிழ் மொழி மூலம் தெளிவாகும் விளக்கங்கள் இந்து சமயத்தின் மூலமொழி ஆதி திராவிடம் என்பதை எடுத்துக் காட்ட ஆதாரமாக அமைகின்றன.

உதாரணமாக பிரமன், சிவபெருமான் என்ற ஆண் தெய்வத்தின் பெயர்களை "படைக்கும் ஆண்" அல்லது "பெறும் ஆண்" (பிரமன்) உயிர் (சிவ்) பெறும் ஆண்" என்று தமிழில் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.



## திராவிடரின் ஞானக்கடவுள் கணபதி

**Dr.J.T.சேவியர்,** M.B.B.S(Cey) F.R.C.S (Eng),
(சத்திர சிகிச்சை நிபுணர், தமிழ் ஆய்வாளர்)

ஆதித்திராவிட மொழியில் ஒரு தெய்வத்தை பல பெயர் கொண்டு அழைத்தார்கள். ஆதித்திராவிட சமய நூல்கள் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கப்பட்டபொழுது பல மாற்றங்கள் அடைந்தன. ஒரு தெய்வத்தைக் குறித்த பல பெயர்கள் அல்லது பட்டங்கள் பல தெய்வங்களைப் படைத்தன.

அழகிற்கும் தமிழ் அறிவிற்கும் தந்தை என முருகக் கடவுள் கருதப்பட்டார். முற்காலத்தில் திராவிடர் இவரை இலக்கிய கணித விஞ்ஞான கடவுள் எனக் கொண்டார்கள். ஆதித் திராவிட மொழியில் "எழுத்து" என்ற கருத்தைத் தரும் பல சொற்கள் இருந்தன. உச்சரிப்பு வேற்றுமையால் உண்டாகிய எழுத்து என்ற கருத்தைத் தரும் சொற்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமாறு:- எழு இழ (இல), இழி (இலி)இல், எழி (எலி) இழே (இலே). இச்சொற்கள் தமிழ் இலக்கண அமைப்பில் வேர்ச் சொற்களாகப் பிற்காலத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. எழுத்து, இலக்கியம், இலிபி, நெடில், குறில், இலேகனம், இலக்கணம் ஆகிய சொற்கள் மேற்கூறிய வேர்ச் சொற்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும்.




அறிவின் கடவுளாகக் கொள்ளப் பட்ட முருகனின் மிகப்பழமையான பட்டங்கள் இழ-வன், கணிதன் என்பனவாகும். இழவன் கணிதன் என்பன முறையே எழுத்துக்கடவுள், கணிதக்கடவுள் எனப் பொருள்படும்.

பிற்காலத்தில் கணிதன் கணித-சாமி என்ற பட்டங்கள் கந்தன், கந்த சாமி எனத் திரிபடைந்தன. இழவன் என்பதனை இளம் கடவுள் என்னும் பொருள் கொடுக்கும் குமரன் என சமஸ்கிருத மொழி பெயர்ப்பில் குறிப்பிட்டார்கள். குமரன் பிற்காலத் தமிழ்மொழி பெயர்ப்பில் முருகன் ஆனான். கணிதக் கடவுளான முருகனின் கணி-ஈசா ஆகிய பட்டம் காலப்போக்கில் கணேசா, கானத்தின் தலைவனான கணபதியாக மாறி கானத்தின் தலைவனான யானை முகத்தானை - கான-ஈசனை (கணேசனை) உருவாக்கி விட்டது.

ஆதித்திராவிடத்தில் எழுத்துக்கடவுள் என்ற கருத்தைத் தரும் பட்டங்கள் ஆகிய எலி-ஈசா எல், எலி அலி-ஈசா, அலி என்பவற்றை செமித்திய இனத்தவர்கள் தமது மொழியில் உள்வாங்கி தமது தெய்வங்களை எல், எலி, அலி போன்ற பெயர்களைக் கொண்டு அழைத்தார்கள். விவிலிய தீர்க்கதரிசிகளின் பெயர்களான எலிஏசா-எலிஜா எலிசபெத் (எலி-ஈசா-பதி) என்பன திராவிட எழுத்துக் கடவுளின் பட்டங்களின் திரிபுகளாகக் காணப்படுகின்றன.

முருகனை மனித உருவில் ஒரு இளம் போர் வீரனாக பிற்கால ஆரியர் கொண்டார்கள். முருகனின் எலிஈசா, கணிஈசா ஆகிய பண்டைக்கால பட்டங்களை சேர்த்து திராவிட சித்திர எழுத்து முறையில் எழுதும்பொழுது எலியின் படமும், யானையின் படமும் பாவிக்கப்பட்டன. யானை முகக்கடவுளான கணபதிக்கு எலி வாகனம் இம் முறையில்தான் உரு வாயிற்று. இத்தகைய விளக்கத்தைத் தமிழ் மொழியிலன்றி இந்து சமயத்தை விளக்குகின்ற சமஸ்கிருதம் போன்ற வேறு மொழிகளில் பெற முடியாது. ஆதித்திராவிட சித்திர எழுத்து அடிப்படையில் பெறக்கூடிய இவ்விளக்கம் இந்து சமயத்தின் மூல மொழி ஆதித்திராவிடம் என்பதை காண்பிக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்க கால வரலாறு

வித்துவான்.
க. ஞானரெத்தினம்

தமிழிலக்கியத்தின் தோற்றம் பற்றித் திட்டவட்டமான தொடர்பை அறிய முடியாதிருந்தாலும் தமிழகத்துடன் யவன தேசத்தினர் வாணிபம் செய்து வந்த பண்டைக் காலத்திலே பிறநாட்டு நல்லறிஞர் எழுதி வைத்த குறிப்புக் களாலும் வடமொழி நூல்கள் சிலவற்றாலும், பிற வரலாற் றுக் குறிப்புகளாலுமே தமிழ் மக்கள் பண்டைக் காலத்தில் சிறந்த பண்பாடுடையவர்களாய் வாழ்ந்தனர் என அறியக் கூடியதாக உள்ளது.

முன்னொரு காலத்தில் தமிழ் வழங்கிய பல நாடுகள் குமரிமுனைக்குத் தெற்கே பலகாத தூரம் பரந்து கிடந்தன. காலத்திற்குக் காலம் ஏற்பட்ட பல கடல்கோள்கள் காரணமாக அவையாவும் அழிந்து போயின. வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரிமுனையையும், எல்லையா கக் கொண்டு விளங்கிய நிலப்பரப்பே சங்க காலத்தில் விளங்கிய தமிழ்நாட்டின் எல்லைகளாகும்.

கி.பி. முதல், முதல் மூன்று நூற்றாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியைச் சங்க காலம் என்பர். அக்காலத்திலே சேர, சோழ, பாண்டியரென்னும் முடியுடை மூவேந்தர் மூவரும், பாரி, காரி போன்ற குறுநில மன்னர் பலரும் வேங்கடம், குமரி என்னும் எல்லைகளுக்குட்பட்ட நாட்டை அறநெறியினின்றும் வழுவாது ஆண்டு வந் தனர். இவர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு செல் வம் மிகுந்து வளம் பெற்று, கலைகள் யாவும் ஓங்கி வளர்ந்து புகழ் பெற்றிருந்தது. இதனை அறிந்த அயல்நாட்டினர் பலர் தமிழ்நாட்டை நாடி வரலாயினர். பிற நாட்டு வாணிபம் விருத்தியடையத் தொடங்கவே தமிழ்நாட்டில் முசிறி, தொண்டி, கொற்கை, புகார் போன்ற துறைமுகப்பட்டினங்கள் வளம் பெற்றோங்கின.

தமிழ்நாட்டின் இத்தகைய சிறப்புகளுக்குக் காரணம் அற நெறி பிறழாது ஆட்சி செய்த மன்னரின் பேரியக்கமும், நாடு நல்வாழ்வடைவதற்கு உயிரையும் உவந்தளித்த வீர வாழ்க்கையும், அறிவுடைய ஆன்றோரைப் போற்றிச் சீரிய வாழ்க்கை வாழ்ந்த தமிழர் தம் பண்பாடும் என்று இன்னோரன்ன பலவுமே காரணமாய் அமைந்திருந்தன எனக் கூறலாம். தமிழ்மொழி வளர்ந்து வருவதற்கும், அம்மொழியைச் செம்மையாய் வருவதற்கு முதற்சங் கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என்னும் மூன்று சங்கங் கள் (முச்சங்கங்கள்) வரன் முறையே பாண்டிய நாட்டி லிருந்து தமிழ் மொழியை வளர்த்து வந்தன. அவை முறையே தென்மதுரை, கபாடபுரம், மதுரை என்னும் இடங் களிலிருந்து இயங்கின.

பண்டைக்காலத்தில் பாண்டியநாடு குமரிமுனைக்குத் தெற்கே பலகாத தூரம் பரந்து விரிந்து கிடந்தது என்று கூறப்படுகின்றது. அந்நிலப்பரப்பிலேதான் பாண்டியரின் தலைநகராகிய தென் மதுரை அமைக்கப்பட்டிருந்தது. முன் னொரு காலத்தில் அந்நிலப்பரப்பில் ஒருபகுதியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் மதுரையும் கடல் கொள்ளப்படவே அதற்கு வடக்கிலிருந்து நிலப்பரப்பிலே கபாடபுரம் என்னும் நகரைப் பாண்டியர் அமைத்து அங்கிருந்து தமது நாட்டை ஆண்டு வந்தனர். பின்னொரு காலத்தில் அந்நகரிலிருந்த நிலப்பரப்பையும் கடல் கொள்ள, அவர்கள் (பாண்டியர்) குமரிமுனைக்கு வடக்கே சென்று, இப்போதுள்ள மதுரையை அமைத்து அதன் கண் இருந்து ஆட்சி புரிந்து வந்தனர்.

பாண்டியர் தென் மதுரையில் இருந்து ஆட்சி புரிந்த காலத்திலே தமிழ் மொழியை வளர்ப்பதற்கு அந்நகரில் நிறுவிய தமிழ்ச்சங்கம் முதற்சங்கம் என்றும் அவர்கள் கபாடபுரத்திலிருந்து ஆண்டபோது நிறுவிய சங்கம் இடைச்சங்கம் என்றும் இப்போதுள்ள மதுரையில் பாண்டியர் இருந்த காலத்தில் நிறுவிய சங்கம் கடைச்சங்கம் எனவும் அழைக்கப்பட்டன. இந்த மூன்று சங்கங்களிலும் முதற்சங்கத்தில் அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர்களும் இடைச்சங்கத்தில் தொல்காப்பியர், வள்ளுவர்க் காப்பியன் கடைச்சங்கத்தில் கபிலர், பரணர், நக்கீரர் போன்ற புலவர்களும் வாழ்ந்து பல நூல்களை இயற்றினார்கள்.

முதற்சங்கத்தில் முதுநாரை, முதுகுருகு இடைச்சங்கத்தில் வெண்டாழி வியாழமாலை அகவல் என்று இறையனாரகப் பொருளுரையிற் குறிக்கப்பட்டுள்ளது. அகத்தியர் என்பவர் தமிழ்நாட்டிலிருந்து தமிழ்மொழியை வளர்த்து வந்த பேரறிஞர்களுள் இவர் தலைசிறந்த ஒருவராய்த் திகழ்ந்தார். இவர் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழையும் திரிபறக் கற்றுணர்ந்து அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கண நூலொன்றை இயற்றினார். இந்நூல் உரையும் பாட்டுமென இருவகைப்படும்.

**பாட்டு: இசையோடும், தாளத்தோடும் கூடியவிடத்து இசைத் தமிழ் என்றுணரப்படும்.**

**நாடகத்தமிழ்: உரையும், பாட்டும் அபிநயத்தோடு கூடியவிடத்து நாடகத்தமிழ் எனப்படும்.**

இவரின் மாணவர்கள் தொல்காப்பியர், அதங்கோட்டாசிரியர், காக்கை பாடினியர் போன்ற பன்னிரெண்டு மாணவர்கள் ஆவர். இவரின் மாணவர்கள் தொல்காப்பியம், வாய்ப்பியம் அவிநயம் காக்கை பாடினியம், பன்னிருவரும் சேர்ந்து பன்னிரு படலம் என்னும் இலக்கண நூல் ஆகிய நூல்களை இயற்றினர். இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் இறையனாரகப் பொருள் என்னும் இலக்கண நூலும், எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்னும் இலக்கிய நூல்களுமேயாகும். இனி நாம் சங்க காலச் செய்யுள் பற்றியும், பொருள் பற்றியும் அறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

சங்க காலத்தில் ஐஞ்ஞூறுக்கு மேற்பட்ட புலவர்கள் தமிழ்நாட்டின் பல இடங்களிலுமிருந்து பல நூல்களையும், பல தனிச் செய்யுட்களையும் இயற்றினர். அவற்றுட் பல கால வேகத்தில் அழிந்து போயின. பேணி வைக்கப்பட்ட பாக்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்னும் நூல்களாகத் தொகுத்தனர். அவை மேற்கணக்கு நூல்கள் என்றும் கூறப்படும். கணக்கு என்னும் சொல் இலக்கிய நூல்களைக் குறிக்கும். இந்த மேற்கணக்கு பல்லவர் காலத்தில் தான் தொகுக்கப்பட்டன என்பர் ஒரு பகுதியினர்.

தொகை நூல்கள் எட்டாகப் பகுக்கப்பட்டுள்ளன. 1. அகநானூறு 2. புறநானூறு 3. நற்றிணை நானூறு 4. ஐங்குறுநூறு 5. திற்றுப் பத்து 6. பரிபாடல் 7. குறுந்தொகை 8. கலித்தொகை என்பனவாகும்.

நெடும் பாட்டு பத்தாகப் பகுக்கப்பட்டுள்ளது. 1. திருமுருகாற்றுப்படை 2. பொருநராற்றுப்படை 3. சிறுபாணாற்றுப்படை 4. பெரும்பாணாற்றுப்படை 5. முல்லைப்பாட்டு 6. மதுரைக் காஞ்சி 7. நெடுநல்வாடை 8. குறிஞ்சிப்பாட்டு 9. பட்டினப் பாலை 10. மலைபடுகடாம். இவற்றோடு சிலப்பதிகாரம், மணி மேகலை, திருக்குறள் ஆகிய நூல்களையும் சங்க காலத்தன என்பர் ஒரு சாரார். இவை சங்க மருவிய காலத்துன என்பவர் மற்றொரு சாரார். ஆராய்ச்சியாளர் எவ்வாறு கூறினும் இவற்றுள் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்னும் நூல்களிலுள்ள செய்யுட்களிற் பெரும்பாலானவை சங்க காலத்தவை என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர்.

தொகை நூல்கள் எட்டனுள் புறநானூறு பதிற்றுப் பத்து பரிபாடல் என்னும் மூன்று நூல்களும் புறத்தினை கூறுவனவாகும். பத்துப் பாட்டிலுள்ள குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SHAN THAYAPARAN

Sales Representative

**Dir: 416.567.7675**

**Bus: 416.321.2228**

## Buy or Sell...
## Call us first and Compare




**SHAN'S**

**Home Team**

**www.shan123.com**

Re/Max Vision Realty Inc. Brokerage

INDEPENDENTLY OWNED & OPERATED

Not intend to solicit property currently listed for sale or individuals under contract

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட்டு பட்டினப்பாலை என்பன மூன்றும் அகத்திணைப் பாடல்கள், ஏனைய ஏழும் புறத்திணைப் பாடல்களாகும்.

### சங்க காலச் செய்யுளின் பொருள் மரபு

பொருள் மரபு அக்கால மக்களின் வாழ்க்கைமுறையை ஆதாரமாகக் கொண்டது. சங்கப் புலவர்கள் தாம் இயற்றிய செய்யுட்களுக்கு மக்கள் வாழ்க்கையையே பொருளாகக் கொண்டு அமைத்தபோது அவற்றை அகத்தினை, புறத் தினை என இரண்டாக வகுத்து அமைத்தனர்.

அகத்தினை என்பது காதலொழுக்கமாகும். அது புணர்தல், பிரிதல் போன்ற பல பிரிவுகளையுடையது. காதலனுக்கும், காதலிக்குமிடையேயுள்ள காதலொழுக்கம் பற்றிக் கூறும் போது, ஒருவர் பெயரைச் சுட்டியும் சுட்டாம லும் புலவன் கூறுவதுண்டு. பாக்களுள் அகத்தினைக்குரி யவை அகத்திணைக்குரியவையாகும். சுட்டி ஒருவர் பெயர் கொள்ளும் போது, காதற்பாக்களையும் போர் முதலிய பிற ஒழுக்கங்களைக் கூறும் பாக்களையும் புறத்திணையுள் அடக்கினர்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றினுள் இன்பம் அகத்திணையின் பாற்பட, ஏனையவை புறத்திணையின் பாற்படும். சங்க கால புறத்திணைச் செய்யுட்களுட் பலவகைப் புறவொழுக்கங்கள் கூறப்பட்டுள்ளதெனினும் அவற்றுட் போரும், வீரமுமே சிறப்பாக எடுத்துக் கூறப் பட்டுள்ளன. செய்யுள் வழக்கில் மட்டுமன்றி, உலக வழக்கி லும் சங்க கால மக்கள் தூய காதலொழுக்கத்தையும், அறத் தின்றும் வழுவாத வீர வாழ்க்கையையும் சிறப்பாகப் போற்றி வந்தனர் என்பது அக்கால நூல்கள் வாயிலாக அறியக் கிடைக்கின்றது. காதலும், போரும் சங்க காலச் செய்யுட்களில் காணப்படுவது போல் வேறெக்காலச் செய்யுட்களிலும் பாராட்டப்படவில்லை.

திணை மரபுகள் பற்றி நாம் பார்க்குமிடத்து அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிய வேண்டியது அவசியம். மலைப் பிரதேசம் (குறிஞ்சி) காட்டுப் பிரதேசம் (முல்லை) நீர் வளம், நிலவளம் நிறைந்த வயற்பிரதேசம் (மருதம்) வரண்ட நிலப்பிரதேசம் (பாலை) கடற்கரைப் பிரதேசம் (நெய்தல்) என ஐவகையான இயற்கைப் பிரிவுகளைக் கொண்டது. அவர்களது வதிவிடங்களும், தமிழ்நாடும்.

தமிழ்நாட்டு மக்கள் இத்தகைய நிலத்தின் பிரிவுகளை குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருதநிலம், பாலை நிலம், நெய்தல் நிலம் என்னும் பெயர் கொண்டு அழைத் தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை நெய்தல் என்னுந்தாவரங்கள் முறையே அந்தந்த நிலங்களிற் சிறப் பாகக் காணப்பட்டமையால் அவற்றின் பெயரால் அந் நிலங்களும் பெயர் பெற்றன. பண்டைக்காலத்தில் மக்கட் குழுவினைக் குறித்து வழங்கப்பட்ட திணையெனும் சொல் நாளடைவில் மக்கள் ஒழுக்கத்தைக் குறிப்பதாயிற்று. அத னால் குறிஞ்சித்திணை முல்லைத்திணை முதலிய சொற் றொடர்கள் செய்யுள் வழக்கில் அந்தந்த நிலங்களுக்குரிய சிறப்புடைக் காதலொழுக்கங்களைக் குறிக்கலாயின. அந்தந்த நிலங்களுக்குரிய போரொழுக்கங்கள் மக்கள் போருக்குச் செல்லும் போது, சூடிச் சென்ற வெட்சி, வஞ்சி முதலிய பூக்களாற் பெயர் பெறலாயின.

அகத்திணை என்னும் ஒழுக்கத்தை புணர்தல், இருத்தல், இரங்கல், பிரிதல், ஊடல் என்னும் பிரிவில் அன்பினைந் திணையென்று தூய காதலொழுக்கங்களாகச் சிறப்பித்துக்



A1 Studio
Rudy Ruthran
Director
Direct : 416.587.5583
Email : rudy@ruthran.com
www.a1photovideo.com
HOMELIFE
HomeLife/GTA Realty Inc., Brokerage
5215 Finch Ave. E#203 Toronto, ON MIS 0C2
Bus. : 416.321.6969 Fax : 416.321.6963
GTA Square Mail, Unit. # 103-5215 Finch Ave E.
Scarborough, ON MIS 0C2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டது. இவை உலக வழக்கில் எல்லா நில மக்களி டையேயும் காணப்பட்ட ஒழுக்கங்களெனிலும், குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களில் வாழ்கின்ற மக்களுள் எந்நில மக்களுக்கு, எவ்வொழுக்கம் சிறந்து நின்றதோ அதனை அந்நிலத்திற்கு உரியதாகக் கொண்டு சங்கப் புலவர்கள் செய்யுட் செய்தனர். அதனால் அம்முறை பற்றி குறிஞ்சி நிலத்திற்குப் புணர்தலும், பாலைக்குப் பிரிதலும், முல் லைக்கு இருத்தலும், மருதத்திற்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும் சிறப்பாக உரிய ஒழுக்கங்களாகச் சங்கச் செய் யுட்களில் அமைந்துள்ளன.

மேற்கூறியவாறு ஐவகைக் காதலொழுக்கங்களும் தத் தமக்கு உரியனவாகக் கூறப்பட்ட நிலங்களில் வராது உலக வழக்கு நோக்கி சிறுபான்மை மயங்கி வருதலும் உண்டு. குறிஞ்சி முதலிய நிலங்களுக்குப் புணர்தல் முதலிய ஒழுக்கங்கள் உரியனவென்பது முற்காலத்து இலக்கண நூல்களாலும், அவற்றிற்கு எழுந்த உரைகளாலும் திணை மயக்கம் என்று கூறப்படுகின்றது. ஐவகை ஒழுக்கங்களும், ஐவகை நிலங்களுக்கும் உரியனவாகக் கொள்ளப்பட்ட காரணங்கள் பற்றி அறிய வேண்டியது உகந்ததாகும். மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் தம் உணவுக்கு வேட்டையாடுதல், திணை விதைத்தல் முத லிய தொழில்களைச் செய்து வந்தனர். திணை விளை யும் காலத்தில் அதனை அந்நிலத்து இளம் பெண்கள் பகற்பொழுதிற் திணைப் புனங்காத்து நிற்க ஆடவர் வேட்டையாடச் செல்லுதல் வழக்காகும். இது வழக்காறாய் இருந்தது.

வேட்டை மேல் மனங்கொண்ட காளையரும் திணைப் புனம் காத்து நின்ற இளம்கன்னியரும் ஒருவரை ஒருவர் திணைப் புனத்திற்கருகிலுள்ள சோலையில் கண்டு, காதல் கொள்ளு தற்கும், பின்னர் அக்காதற் பயிரை வளர்ப்பதற்கும் பல வச திகள் குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கையில் காணப்பட்டன. அதனால் நம் முன்னோர் போற்றிய காதல் நாடகத்தின் ஆரம்பக் காட்சிக்குப் பொருந்துமிடம் அந்நிலமே என்பதை உணர்ந்து சங்க காலப் புலவர்கள் புணர்தல் என்னும் ஒழுக்கத்தை குறிஞ்சி நிலத்திற்கு உரிய தொரு காதல் ஒழுக்கமாகக் கொண்டனர். அப்புணர்தல் என்னும் ஒழுக்கம் இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பகற்குறி, இரவுக் குறி எனப் பல திறப் படும். தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, நற்றாப் முதலிய பாத்திரங்கள் குறிஞ்சித்திணைச் செய்யுட்களில் வருதலுண்டு. தலைவி தோழி முதலான கன்னியர்கள் திணைப்புனற் காவற் காலங்களில் அச்சூழலிலே செவிலித் தாயின் பொறுப்பில் விடப்பட்டிருப்பர். அக்காவல் ஒழியும் வரை அக்கன்னியர்க்கு அவளே தாயாக விளங்குவதால் அவளைச் செவிலித்தாய் எனக் கூறுவதுண்டு. அக்காலப் பகுதியில் இளமை உணர் வில் தலைவியிடத்து அரும்பும் காதலொழுக்கத்தைத் தோழி அறிதலும், அறிந்து அக்காதற் பயிரை வளர்த் தற்குத் துணை புரிதலும், அவ்வொழுக்கம் கால ஓட்டத்தில் ஆம்பலும், அலருமாகி பிறர்க்குப் புலனா கும் காலத்தில் தோழி அதனைச் செவிலித்தாய்க்குத் தெரியச் செய்து அறத்தொடு நிற்றலும், பிறவும் திணைப் புகை காவற்காலங்களில் நிகழ்வனவாகும்.

OPTIMART
கண்பரிசோதனை | EYE EXAM
தமிழ் மக்களின் நன்மை கருதி தமிழர் நிர்வாகத்தில் மூன்று இடங்களில் சேவையாற்றுகிறார்கள்
(416) 266-3389
3150 Eglington Ave. E. #6
(Eglinton & Markham)
Scarborough, ON. M1J 2H2
(416) 297-9903
3351 Markham Road
(Markham & Steeles)
Toronto, ON. M1X 0A6
(416) 690-4649
294 Main St. (@ Danforth)
#2, Professional Bldg.,
Toroto, ON. M4C 4X5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெரோனிக்காவின் முக்காடு

- ராஜ்சிவா

பகுதி 3

'வெரோனிக்காவின் முக்காடு' என்னும் சிறு தொடரின் மூன்றாம் பகுதி இது. முதல் இரண்டு பகுதி படிக்காதவர்கள் அதைப் படித்துவிட்டு இதைப் படிக்கவும்.

தொடர்கிறது.....

நாஸாவினரால் விண்வெளியிலிருந்து பூமியை நோக்கி எடுக்கப்படும் புகைப்படங்களை ஆராய்வதற்கென்று உருவாக்கப்பட்ட கருவிதான் 'VP8 இமேஜ் அனலைஸர்' (VP8 Image Analyzer) என்பதாகும். மேலே இருந்து எடுக்கப்பட்ட படங்களில், பூமியின் நிலப்பரப்பின் உயர்வு, தாழ்ச்சி என்பவற்றை இந்தக் கருவி கணித்துச் சொல்லும். இந்தக் கருவியில் ஒரு சாதாரண மனிதனின் புகைப்படமொன்றை (2D) வைத்து ஆராய்வோமானால், அந்தப் புகைப்படத்தில் இருக்கும் மனித உருவம் சிதைந்து காணப்படும். அதே நேரம், VP8 இல் ஒரு முப் பரிமாணப் படமொன்றை (3D) வைத்துப் பார்த்தால், அந்தப் படத்தில் உள்ள உருவம், முப்பரிமாணத் தோற றத்துடன், மேலெழுந்த வடிவத்தில் காணப்படும். நாம் முப்பரிமாணப்படமொன்றை, அதற்குரிய கண்ணாடியை அணிந்துகொண்டு பார்க்கும்போது தெரியும் உருவம் போல அது இருக்கும். இந்த VP8 கருவியில் டூரின் துணியில் தெரிந்த உருவத்தைப் புகைப் படமாக எடுத் ததை வைத்துப் பார்ப்பதற்கு முடிவு செய்தார்கள். அதில் அந்தப் படத்தை வைத்துப் பார்க்கும் போதும், சிதைந்து போன உருவம் தெரியும் என்றுதான் நினைத் திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு அதிர்ச்சியொன்று காத்திருந்தது. அந்தப் படத்தை VP8 கருவியில் வைத்துப் பார்த்தபோது, அதில் தெரிந்த இயேசுநாதர் என்று கருதப்பட்ட அந்த உருவம் எந்தச் சிதைவும் இல்லாமல், முப்பரிமாண வடிவத்தில் முழுமையான மேலெழும்பிய முகத்துடன் அங்கு காணப்பட்டது. இப்படியொரு அதிசயத்தை அவர்கள் இதற்கு முன்னர் கண்டதேயில்லை.

நெகட்டிவான எதிர்மறைப் படம் டூரின் துணியில் இருந்ததை 'செகண்டோ பியா' எடுத்த புகைப்படத்தின் மூலம் தெரிந்து கொண்டபோது எவ்வளவு ஆச்சரிய மடைந்தார்களோ, அதைவிட அதிகளவு ஆச்சரியம், அந்தப் படம் முப்பரிமாணத் தோற்றத்தின் தகவல்களைக் கொண்டிருக்கின்றது என்ற போதும் ஏற்பட்டது.

டூரின் துணியில் காணப்பட்ட சில அதீதத் தன்மைகள், அது இயேசுநாதருடையதுதான் என்று பலர் எந்த மறுப்பும் இல்லாமல் நம்பிவிடுவதற்குக் காரணமாக இருந்தன. குறிப்பாகத் துணியில் இருந்த உருவம் மனிதனால் வரையப்பட்ட உருவமல்ல என்பதும், அது எதிர்மறை உருவமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது என்பதும், அத்து டன் அது முப்பரிமாணத் தோற்றத்திற்கான தகவல்களைக் கொண்டிருந்தது என்பதும், அதற்கு ஒரு அமானுஷ்யத் தன்மையை ஏற்படுத்தியிருந்தது. விஞ்ஞானம் வளர்ந்து, கணணிகளின் ஆதிக்கம் பெருகிவிட்ட இன்றைய கால கட்டத்தில், இதுபோல ஒரு உருவத்தை மனிதனால் ஒரு துணியில் உருவாக்கியிருக்க முடியலாம். ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், இப்படியொன்றை மனிதனால் உருவாக்கியிருக்க முடியவே முடியாது என்று பலர் நினைத்திருந்தனர்.

அதனால், இது மனிதனைத் தாண்டிய ஒரு அதிசயச் சக்தியொன்றினாலேயே நடைபெற்றிருக்க வேண்டும் என்று அவர்கள் நம்புவதில் ஆச்சரியமில்லை. ஆனால், என்னதான் முடிவுகள் நம்பிக்கையாளர்களுக்குச் சாதக மாக வந்தாலும், அங்கும் பல மழுப்பலான ஓட்டைகள் இருந்ததை, எதிர்ப்பவர்கள் சுலபமாகக் கண்டு கொண் டார்கள். எந்த உருவம், அமானுஷ்யமான சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Introducing the
# All New 2016 Honda HRV

## Come for a Test Drive Today !!



EXL NAVI Model

**$22,518** plus HST

***All Remaining 2015 Model Clear Out.***
***Come Early For Your Best Selection.***



Shan Sarvananthan
*Sales & Leasing Consultant*
Cell 416-720-1184

HONDA
**Formula Honda**
*Where You're Treated like Family.*

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555






Rajah Tharmalingam
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றினால் அந்தத் துணியில் பதிவாகியது என்று நினைத்தார்களோ, அந்த உருவத்தின் அமைப்பே அது உண்மையானதல்ல என்று மறுப்பதற்கும் வாய்ப்புகளை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தது.

இப்போது நான் சொல்லப் போவதை நன்றாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். டூரின் துணியில் காணப்பட்ட உருவத்தின் அமைப்பை நீங்கள் படத்தில் பார்த்தீர்களல்லவா? அது ஒரு மனிதனின் முகத்தை அப்படியே வரைந்தது போலக் காட்சி தருகிறதல்லவா? அது எப்படி உருவாகியது என்று நமக்குச் சொல்லப்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு, மரணமடைந்த பின்னர், மூன்று நாட்களுக்கு அந்தத் துணி அவர் உடலில் போர்த்தப்பட்டிருந்தது எனவும், முகத்தின் மேல் அது மூடிக் கட்டப்பட்டது எனவும்



பைபிளில் சொல்லப்பட்டிருந்தது அல்லவா? "இயேசுநாதரின் முகத்தின் மேல், மூன்று நாட்களாக அந்தத் துணி இருந்ததால்தான், அவரது முகம் அதில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது" என்றுதானே நாம் நம்புகிறோம். அப்படியிருக்கும் பட்சத்தில், இதைச் சரியாகச் சிந்தித்துப் பாருங்கள். இயேசுநாதரின் முகம், காதிலிருந்து மூக்கு நுனிவரை மேல் நோக்கியபடி முப்பரிமாணத் தோற்றத்தில் உயர்ந்தல்லவா காணப்படும். அப்படிக் காணப்படும் முகத்தில் ஒரு துணியை நாம் போர்த்தினால், ஒரு காதுக்கும், மற்றக் காதுக்கும் இடையேயுள்ள இடைவெளி, போர்த்திய நிலையில் இருக்கும்போது அகலம் குறைந்ததாகவும், அந்தத் துணியை எடுத்து விரிக்கும்போது காதுகளுக்கிடையில் இருக்கும் இடைவெளி அதிகமாகவும் அல்லவா இருக்கும்? நான் சொல்வது புரியவில்லையா? சரி, இதை இப்படிப் பாருங்கள். இரண்டடி அகலமுள்ள சதுரத் துணியொன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதை உங்கள் முகத்தின் மேல் அப்படியே போட்டு மூடுங்கள். அது முகத்தில் இருக்கும் நிலையில், உங்கள் காதுகள் இருக்கும் இடங்களை அந்தத் துணியில் அடையாளமிடுங்கள். அப்படியே, உங்கள் கன்னங்கள் இரண்டையும் அடையாளமிடுங்கள். தொடர்ந்து, மூக்கு, நெற்றி, தாடை ஆகியவற்றையும் அடையாளமிடுங்கள். முடிந்ததா? இப்போது துணியை முகத்திலிருந்து எடுத்து விரித்துப் பாருங்கள். உங்கள் நிஜ முகத்தின் அகலத்தை விட, துணியில் இருக்கும் அடையாளங்கள் அதிக இடைவெளிகளில் காணப்படும். அது ஒரு கார்ட்டூன் மனிதனின் முகம்போலக் காட்சி தரும். உங்கள் முகத்தின் முப்பரிமாணத் தோற்றத்தினூடாக அந்தத் துணி போர்த்தப்பட்டுப் பின்னர் விரிக்கப்பட்டதுதான், அதற்குக் காரணம். முகம் அகலமாக இருக்க வேண்டும் என்று நான் சொல்லியிருந்தது இப்போதும் புரியாதவர்கள், குழந்தைகளை ஏமாற்றுவதற்கு நாம் அணியும் ரப்பரினால் செய்யப்பட்ட மெல்லிய முகமூடியை வெட்டி விரித்துப் பார்க்கும்போது, என்ன தோற்றம் வரும் என்று சிந்தித்துப் பாருங்கள். முடியாதவர்கள், அதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் படத்தைப் பார்த்துப் புரிந்து கொள்ளுங்கள். இப்போது அநேகமாகப் புரிந்திருக்கும் என்றே நம்புகிறேன். அதனால் நாம் இப்போது டூரின் துணிக்கு வரலாம். டூரின் துணியிலிருக்கும் உருவமும் இயேசுநாதரைப் போர்த்தியதால் ஏற்பட்டது என்றால், அதுவும் அகலமான முக அமைப்பைத்தான் கொண்டிருக்க வேண்டும்? ஆனால், டூரின் துணியில் உள்ள உருவம், படம் ஒன்றை வரைந்ததுபோல அல்லவா காணப்படுகிறது. அந்தத் துணி ஒரு உடலில் போர்த்தப்பட்டிருந்திருக்கலாம். அதனால் இரத்தத் திட்டுகள் அதில் பதிந்திருக்கலாம். ஆனால், முகம் பதிய வேண்டுமானால், அகலமாகத்தானே பதிந்திருக்க வேண்டும்? அப்படி இல்லாமல், மனிதன் ஒருவனை நேரில் பார்க்கும்போது தெரியும் அதே முக அமைப்பில் எப்படிப் பதிந்திருக்க முடியும்? இப்போது, அந்த உருவம் யாராலோ வரையப்பட்டிருக்க வேண்டும் என்ற சந்தேகம் எழுகிறதல்லவா?

டூரின் துணியில் உள்ள உருவம் இயேசுநாதரின் முகத்தில் படிந்திருப்பதால் பதிவாகியது என்பதில் பெரும் சந்தேகம் உருவாகினாலும், அதுவரை செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அனைத்தும் அது வரையப்பட்ட உருவமல்ல என்றே முடிவுக்குக் கொண்டு வந்திருந்தன. நிச்சயம் அது வரையப்பட்டிருக்க வேண்டும் என்று ஒருபுறம் முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருக்கையில், அது வரையப்படவில்லை என்ற முடிவுகளும் கிடைத்திருந்தன. இது ஒரு பெருங் குழப்பமாகவே உருவெடுத்தது. இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில், 'துணியில் காணப்பட்ட இரத்தத் திட்டுகள் என்ன சொல்கின்றன?' என்ற கேள்வியும் எஞ்சி நின்றது. இரத்தத்தை ஆராய்வதற்கு முன்னரே அது பல சந்தேகங்களைக் கிளப்பியிருந்தது. அந்தச் சந்தேகங்களுக்குக் காரணம், துணியில் காணப்பட்ட அந்த இரத்தத் திட்டுகள் மனிதனின் இரத்தத் திட்டுகள்போல இல்லாமல், சிறிது மாற்றத்துடன் காணப்பட்டதுதான். சாதாரணமாகக் காலம் செல்லச் செல்ல மனிதனின் இரத்தம் சிவப்பு நிறத்தை இழந்து மஞ்சள் நிறமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAMY & SONS

## Wholesalers & Retailers

*Textiles, Jewellery, Gift Items & Fancy Goods, Express Money Transfer, Pawn Broker, Party Item Rental Etc.*

☑ வரவேற்பு
☑ விலை
☑ தரம்

☑ தெரிவு
☑ நம்பிக்கை
☑ நாணயம்

**21வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதிரடி மலிவு விற்பனை**

**குறைந்த விலையில் நிறைந்த சேவை**

- மங்கள விழாக்களுக்கான புதிய டிசைன் சாறி வகைகள் சுடிதார் வகைகள் (அனார்கலி, பட்டேலா, மசாகலி, etc.)
- லங்கா சூட், சிறுவர் சிறுமியர் ஆடவர்களுக்கான ஆடைவகைகள்,
- பரதநாட்டிய உடைகள், பரதநாட்டிய ஆபரணங்கள், (f)பான்சி நகைகள் ஆண்கள், பெண்களுக்குரிய கைகடிகார வகைகள்
- கலை சம்பந்தப்பட்ட வாத்திய கருவிகள்(சுருதிப்பெட்டி, வயலின், மிருதங்கம், தபேலா)
- அன்பளிப்புப் பொருட்கள் (மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)
- கதிரைகள், குத்துவிளக்கு, நடராஜர் சிலை, பாவை விளக்கு,
- மணமகனுக்குரிய சூட் வகை, தலைப்பாகை போன்றவைகள் வாடகைக்கும், விற்பனைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.
- தரமான 22 கரட் தங்க நகைகள் விற்பனைக்கும்
- துரித பணமாற்றுச் சேவை (இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மற்றும்
- ஐரோப்பிய நாடுகளுக்கான நம்பிக்கை நிறைந்த சேவை) சமையலறைப் பாத்திரங்கள், றைஸ் குக்கர், ரொட்டி மேக்கர், பிரஷர் குக்கர், அடுக்குச் சட்டி, ஸ்ரீமர், etc.
- சுமித், (Sumeet, C.S.A. Approved) 5 வருட கால வாரண்டி(Warrenty) யுடன் Preethy (பீரித்தி) Bajaj(பஜாஜ்), திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.









## Samy & Sons Pawn Broker Govt. Licensed








அரச அங்கீகாரம் பெற்ற
தங்க நகை அடைவு மாடம்
துரித பணமாற்று சேவை
வெளிநாட்டு நாணயமாற்று

**Tel: 416-298-1598 Fax: 416-298-2849**

**1884 B Kennedy Road (at Ellesmere)**
**Scarborough, Ontario M1P 2L8**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறும். மேலும் காலம் சென்றால், அது மண்ணிறத்தை அடையும். அதன் பின்னர் அது கருப் பாக மாறும். ஆனால், டூரின் துணியில் காணப்பட்ட இரத்தத் திட்டுக்களில் சில, அப்போதும் சிவப்பு நிறமாகவே காணப்பட்டன. மனித இரத்தமாக இருந்தால், அது நிச்சயம் நிறம் மாறியிருக்க வேண்டும். டூரின் துணியில் இருந்த இரத்தம் சிவப்பாக இருந்ததை, மக்கள் இரண்டு விதங்களில் பார்க்க ஆரம்பித்தனர். அது இயேசுநாதரின் இரத்தம் என்று நம்பியவர்கள், 'இயேசுவின் பரிசுத்த இரத்தம் என்பதாலேயே நிறம் மாறாமல், சிவப்பு நிறத் தில் இப்போதும் காணப்படுகிறது' என்று சொல்லி அதிசயப்பட்டார்கள். ஆனால், அது இயேசுவினுடையது அல்ல என்று மறுப்பவர்களோ, 'இது சிவப்பு நிறத்தில் இப்போதும் இருப்பதால் மனித இரத்தமாக இருப்பதற்குச் சாத்தியமேயில்லை. நிச்சயம் இது சிவப்பு மையினால் வரையப்பட்டிருக்க வேண்டும்' என்று கருதினார்கள். இந்தச் சந்தேகங்களைத் தீர்த்துவிட வேண்டுமென்பதால்,




துணியில் இருந்த இரத்தத்தின் மாதிரியைப் பரிசோதனை செய்வதென்ற முடிவுக்கு வந்தார்கள். துணியில் இருந்த இரத்தத்திட்டு சுரண்டப்பட்டுப் பரிசோ தனைக்கு அனுப்பப்பட்டது. "சிவப்பு மையா? இல்லை இயேசுவின் இரத்தமா?" என்று ஆவலுடன் காத்திருந்த மக்களுக்குப் பதிலும் கிடைத்தது.

சந்தேகமே இல்லாமல், டூரின் துணியில் காணப்படுவது ஒரு மனிதனின் இரத்தம்தான் என்று பரிசோதனையின் முடிவு தெரிவித்தது. அத்துடன் இன்னுமொரு ஆச்சரிய மும் அதில் இருந்தது. அதாவது அந்த இரத்தம் 'AB' வகையைச் சேர்ந்தது என்று சொல்லப்பட்டது. அதன் அர்த்தம், அந்த டூரின் துணியில் இருக்கும் இரத்தம் இயேசுநாதருடையது தான் என்ற முடிவுக்கு நாம் வருவோமானால், இயேசுநாதருக்கு 'AB' வகையைச் சேர்ந்த இரத்தம் உடலில் ஓடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். இது இரத்த வகைகளில் மிகவும் அரிய வகையானது என்பது உண்மைதான் ('AB' வகை இரத்தம் உள்ளவர்கள் இதனால் கொஞ்சம் பெருமையும் பட்டுக் கொள்ளலாம்). துணியில் இருந்தது மை அல்ல இரத்தம்தான் என்ற முடிவு நம்பிக்கையாளர்களுக்குப் பெரிய நிம்மதியைக் கொடுத்தது. அதுமட்டும் இரத்தம் இல்லை, மைதான் என்ற முடிவு வந்திருக்கும் பட்சத் தில், ஒட்டுமொத்த நம்பிக்கையும் அடியோடு தகர்ந்து போயிருக்கும். அந்த இரத்தம் பெரும்பாலான மக்க ளுக்கு இருக்கும் 'A', 'B' வகை இரத்தம் இல்லாமல், 'AB' என்னும் அரிய வகையில் இருந்தது நம்பிக்கை யாளர்களின் வாதத்துக்குப் பலம் சேர்க்கும் வகையில் இருந்தது. "பார்த்தீர்களா? அது இயேசுவின் இரத்தம் என்பதால்தான் AB என்னும் அரிய வகையான இரத்தமாக இருக்கிறது" என்று சொல்ல ஆரம்பித்தார்கள். ஆனால் அதற்கும் சில உயிரியல் ஆராய்ச்சியாளர்களின் கூற்று முட்டுக்கட்டையிட்டது. இரத்தமானது காலம் செல்லச் செல்ல அதிலிருக்கும் பிளாஸ்மாக் கலங்களின் ஆண்டிபாடியை (Antibody) இழக்கத் தொடங்கும். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் முழுமையாக அங்கே ஆண்டிபாடிகள் அழிந்து போயிருக்கும். எந்த இரத்த வகையில் பிளாஸ்மாக் கலங்களில் ஆண்டிபாடி இருக்காதோ, அதையே 'AB' வகை இரத்தம் என்று வரையறுக்கிறார்கள். டூரின் துணியில் இருந்த இரத்தம் 'A' வகை இரத்தமாகவோ அல்லது 'B' வகை இரத்தமாகவோ இருந்திருந்தாலும், அவை பல நூற்றாண்டுகளின் பின்னர் தங்கள் ஆண்டிபாடியை இழந்திருக்கும். அவற்றைப் பரி சோதனை செய்யும்போது, 'AB' வகை இரத்தம் என்றே நாம் முடிவுக்கு வருவோம் என்று உயிரியல் ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர். அது அப்படியில்லை என்று மறுப்பவர்களும் உண்டு.

இப்போது வேறு வகையில் ஒரு வாதம் முன் வைக்கப்பட்டது. ஒரு சாதாரண மனிதனுக்கு, உடல் கலங்களில், 23 சோடிக் குரோமோசோம்கள் (Chro-mosome) உண்டு. அதாவது, மொத்தமாக 46 குரோ மோசோம்கள் காணப்படும். மனிதன் கருவில் உரு வாகும்போது, தாயிடமிருந்து 23 குரோமோ சோம் களும், தந்தையிடமிருந்து 23 குரோமோசோம்களும் பெற்றிருப்பான். 22 சோடிக் குரோமொசோம்களுடன், 23வது சோடியில் ஆணென்றால் X,Y குரோமோசோம் களும், பெண்ணென்றால் X,X குரோமொசோம்களும் சோடியாகச் சேர்ந்திருக்கும். இயேசுநாதர் மனிதனாகப் பிறந்தாலும், அவர் தகப்பன் இல்லாமல் தாயின் கர்ப் பத்தில் மட்டுமே உருவாகியவர் என்றே பைபிள் கூறு கின்றது. அதையே கிருஸ்தவர்களும் நம்புகின்றனர். ஒருவர் தகப்பன் இல்லாமல், தாயின் கர்ப்பத்தில் மட்டுமே உருவாகியிருக்க வேண்டுமென்றால், அவருக்குத் தாயின் வழி வந்த 23 குரோமோசோம்களே கிடைத்திருக்கும். எஞ்சிய 23 குரோமோசோம்களும் எப்படி அவருக்குக் கிடைத்தன? என்ற கேள்வி இங்கு முன்வைக்கப்பட்டது. இந்தக் கேள்வி குறிப்பாக இங்கே முன்வைக்கப்பட்டதன் காரணம், டூரின் துணியில் காணப்பட்ட இரத்தம், மனித வகையைச் சார்ந்த AB வகை என்பதால்தான். "கடவுளின் படைப்பில் எந்தவிதமான அதிசயங்களும் நடக்கலாம்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி!

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Term Life Insurance / Mortgage Insurance** | | | | | | | | | | | | | |
| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T10 | 16 | 12 | 16 | 13 | 16 | 15 | 21 | 19 | 28 | 33 | 37 | 29 |
| 500K | T10 | 30 | 19 | 30 | 21 | 30 | 25 | 39 | 31 | 57 | 41 | 84 | 60 |
| 1000K | T10 | 50 | 32 | 53 | 35 | 54 | 45 | 70 | 53 | 106 | 74 | 160 | 110 |
| 200K | T20 | 17 | 15 | 20 | 16 | 21 | 17 | 29 | 22 | 44 | 31 | 70 | 49 |
| 500K | T20 | 39 | 28 | 41 | 28 | 44 | 34 | 58 | 44 | 94 | 64 | 153 | 102 |
| 1000K | T20 | 68 | 46 | 70 | 50 | 80 | 62 | 110 | 80 | 180 | 120 | 299 | 198 |
| **Permanent Life Insurance - Premium Never Change** | | | | | | | | | | | | | |
| 200K | WL | 81 | 71 | 98 | 89 | 121 | 105 | 150 | 131 | 196 | 166 | 233 | 200 |
| 500K | WL | 188 | 164 | 232 | 201 | 289 | 251 | 364 | 313 | 476 | 401 | 590 | 488 |
| 1000K | WL | 363 | 310 | 450 | 387 | 566 | 484 | 712 | 606 | 935 | 791 | 1129 | 965 |
| **Critical Illness Insurance - 100% Money Back at Age 65** | | | | | | | | | | | | | |
| 50K | T75 | 44 | 42 | 56 | 51 | 67 | 62 | 87 | 82 | 117 | 110 | 171 | 148 |
| 100K | T75 | 76 | 72 | 96 | 88 | 118 | 107 | 152 | 140 | 205 | 195 | 312 | 258 |

We have a plan pay only 10 Years But Coverage Until Your Life

- **Life Insurance**
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- RRSP - Start from $25
- RESP - Start from $25
- Non Medical Insurance
- Travel Insurance
- Super Visa Medical Coverage

**Thana Manickavasagar**
Broker
Cell : 416-728-5772
Off : 416-519-3896
Fax : 647-547-8147



100% Tax FREE Money


## Your Referrals Will be Rewarded

E-mail : thana7@gmail.com Web : www.thana.ca
*80 Nashdene Road, Unit D218, Scarborough, ON, M1V 5E4*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கூற்று இந்தச் சந்தேகத்திற்கான பதிலாக இங்கு சொல்லப்பட்டது. ஆனாலும் டூரின் துணியில் இருந்த இரத்தத்தில் உள்ள குரோமோசோம்கள் என்ன சொல்கின்றன? என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. காரணம் இரத்தம் பல நூற்றாண்டுகள் ஆன பழைய இரத்தமாக இருந்ததால், அதிலுள்ள குரோமோசோம்களும் அழிந்துவிட்டிருந்தன. இது மிகப்பெரியதொரு விவாதத்தை இல்லாமல் செய்திருந்தது.

டூரின் துணி இயேசு நாதருடையதுதான் என்று ஒரு சாராரும், இல்லையென்று மறு சாராரும் தங்கள் பக்கச் சார்பாகத் தொடர்ச்சியாக விளக்கங்களைக் கொடுக்க ஆரம்பித்தனர். கார்பன் தேதிப் பரிசோதனை செய்ததில் தப்பு இருக்கிறது என்ற முடிவுக்கு வந்த நிலையில், அதுவே தங்களுக்குச் சார்பான நிலைப்பாடு என்று நம்புபவர்கள் அமைதியாக இருந்து கொண்டார்கள். ஆனால் மேலும் ஒரு கார்பன் தேதிப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என்று மற்றவர்கள் விரும்பினார்கள். ஆனால், அதற்குக் கத்தோலிக்க மதபீடம் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டது. டூரின் துணியின் மேலுமொரு பகுதியை வெட்டியெடுக்க அது சம்மதிக்கவில்லை. இந்த நிலையில் இத்தாலியைச் சேர்ந்த புரொபசர் 'லூயிஜி கார்லாசெல்லி' (Luigi Garlaschelli) என்பவர் டூரின் துணியைப் போலவே அச்சு அசலாக ஒரு துணியை, அதில் உள்ள உருவங்களுடன் உருவாக்கிக் காட்டினார். அதாவது டூரின் துணி இயேசு நாதரின் உருவத்தைக் கொண்டதல்ல என்றும், அதைச் சில நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்த யாரோதான் உருவாக்கியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். தான் எப்படி இதை உருவாக்கியிருக்கிறேனோ, அதேபோல அவர்களும் உருவாக்கியிருக்கிறார்கள் என்று அவர் கூறினார். அவர் உருவாக்கிய துணியைப் பார்த்தவர்கள் அதை நம்பவேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள். அதேபோல, டாக்டர் 'எமிலி கிரெய்க்' (Dr.Emily Craig) என்பவரும் டூரின் துணியில் உள்ள உருவத்தை எப்படி பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரைந்திருப்பார்கள் என்று வரைந்து காட்டினார். இவர்களது இந்த நடவடிக்கைகளால், டூரின் துணி இயேசுநாதருடையதுதான் என்னும் நம்பிக்கை பலமிழக்கத் தொடங்கியது. கார்பன் தூசுகளையும், வேறுசில பதார்த்தங்களையும் கொண்டு துணியில் எமிலியால் வரையப்பட்ட படத்தை, நாஸாவின் 'VP8 அனலைசர்' கருவியின் மூலம் பரிசோதனை செய்தபோது, அதிலும் முப்பரிமாணத் தோற்றம் தெரிந்தது. இது அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. துணியில் உள்ள உருவத்தைப் பரிசோதித்தபோது, அது மையினால் வரையப்பட்ட எந்த அடையாளத்தையும் கொண்டிருக்கவில்லை. எனவே, எமிலி எப்படி இந்த உருவத்தை வரைந்தாரோ, அதுபோலச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த யாரோ ஒரு ஓவியர் இந்த டூரின் துணியையும் வரைந்திருக்கலாம் என்ற சந்தேகம் உருவாகியது. ஆனால், அந்த அளவுக்குப் புத்திசாலியும், கெட்டித்தனமும் உள்ள ஓவியர் இருந்திருக்க முடியுமா? என்ற கேள்வியும் அப்போது எழுந்தது.



இந்த ஆச்சரியங்களுக்கெல்லாம் விடைதரும் அளவுக்கு அதிபுத்திசாலியாகவும், மிகுந்த திறமைசாலியாகவும் ஒரு ஓவியர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துதான் இருக்கிறார். அவரின் திறமைகளை அறிய முயற்சித்தால் நாம் வியப்பின் எல்லைக்கே சென்று விடுவோம். அவரால் உருவாக்கப்பட்ட பல மர்மங்களை இன்றுகூட விடுவிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். டூரின் துணியின் மர்மத்துக்குப் பின்னாலும் அவர்தான் இருந்தார் என்று திடமாக நம்புகின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அவர் யாரென்று தெரிந்தால், நீங்களும் அதை நம்ப ஆரம்பிப்பீர்கள். சமீபத்தில் கூட இயேசுநாதரை மையமாக வைத்து எழுதப்பட்ட பிரபலமான, வில்லங்கமான நாவலொன்றிற்கு இவரது பெயரே சூட்டப்பட்டிருந்தது. அந்த ஓவியர் வரைந்த ஓவியங்களின் மர்ம முடிச்சுகளை வைத்து 'டான் பிரௌன்' (Dan Brown) எழுதிய 'டாவின்சி கோட்' (The Da Vinci Code) என்னும் நாவல் உலகப் பிரசித்திபெற்றது.

டூரின் துணிக்கு மூல காரணமாகக் கருதப்படுபவர் வேறு யாருமல்ல. பிரசித்தி பெற்ற மொனோலிசா ஓவியத்தைப் படைத்த 'லியனார்டோ டாவின்சி' என்னும் ஓவியர்தான் அவர். அவர்தான் டூரின் துணிக்கான காரணமாக இருப்பவர் என்று சந்தேகிப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணங்கள் ஒவ்வொன்றையும் நாம் தெரிந்து கொள்ளும்போது அசந்து போய்விடுவோம். அந்த அளவுக்கு ஆச்சரியமானவை அவை. அந்த ஆச்சரியங்கள் ஒவ்வொன்றையும் அடுத்த இதழ்களில் நாம் பார்க்கலாம்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள்!!

பாகம் 4

## அன்புடன், அகணி சுரேஸ்

பீக் பிற்னெஸ் டிராக்கர் (Peak Fitness Tracker) எனப்படும் பீக் உடல்நிலைத் தடமறியும் கருவி பேசிஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவான புதிய கருவி. இது நாள் முழுவதும் இதயத்துடிப்பைக் கண்காணிக்க வல்லது. பேசிஸ் நிறுவனத்தின் முன்னைய தயாரிப்பான பேசிஸ் பி1 பிற்னெஸ் டிராக்கர் (B1 Fitness Tracker) இதயத்துடிப்பைக் கண்காணிக்கும் திறனைக் கொண்டிருந்தாலும் புதிய கருவி வலுக்கூடிய சென்சர்களைக் கொண்டு இருதயப்பட்டி (Chest Strap) அணியாது உடற்பயிற்சி செய்யும் பொழுதும் இதயத்துடிப்பைக் கண்காணிக்கக் கூடியது என்ற வகையில் முன்னைய தயாரிப்பை விட மேம்பட்டதாகக் கருதப்படுகின்றது.




சம்சாங் (Samsung) நிறுவனத்தின் கியர் பிட் (Gear Fit), அப்பிள் நிறுவனத்தின் Fitbit Charge HR போன்றவையும் இதுபோன்ற தன்மை கொண்ட புதிய கருவிகளாகும். பி 1 பிற் னெஸ் டிராக்கர் கருவி ஒருவர் தூங்கும் பொழுது தன்னிச்சையாகத் தானும் தூக்க நிலைக்குச் (Sleeping Mode) செல்லக் கூடியது. ஒருவர் நடத்தல், ஓடுதல், சைக்கிள் ஓட்டுதல் அதனைத் தன்னிச்சையாகக் கண்டுபிடித்து எவ்வளவு நேரம் அவ்வாறான உடற்பயிற்சிகளைச் செய்கின்றார்கள், எவ்வளவு கலோரி எரிக்கப்படுகின்றது போன்ற தகவல்களைக் காட்டும் தன்மை கொண்டது. இந்தக் கருவியில் உள்ள குறைபாடாக நடத்தல், ஓடுதல் செய்யும் பொழுது தூரங்களைக் காட்டாது இருத்தல், எச்சரிக்கைச் சத்தம் எழுப்பாது இருத்தல், தகவல்களைச் சமூக வலைத்தளங்களில் பதியும் வசதி இல்லாமை போன்றவற்றை விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

எதிர்காலத்தில் உருவாகும் கருவிகள் இத்தகைய குறைபாடுகளையும் நீக்கும் தன்மை கொண்டவையாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்தக் கருவி தொடுதிரை (Touch Screen) கொண்டது என்பது முக்கியமானது. எந்தப் பட்டன்களையும் (Buttons) இந்தக் கருவி கொண்டிராது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திரையில் நேரம் தொடர்ச்சியாகக் காட்டப்படுவதால் எந்த பட்டன்களையும் அழுத்தி நேரத்தைப் பார்க்க வேண்டியதில்லை. இரவு நேரத்தில் தொடுதிரையின் வலப்பக்கத்தைத் தொடும் பொழுது வெளிச்சம் ஏற்பட்டுத் தெளிவாகக் காட்டப்படும். இந்தக் கருவியின் ரெஸ்ற் பெல்ற் (wrist belt) சிலிக்கன் மூலம் உருவாக்கப்பட்டதால் மென்மையானதாயும், வசதியானதாயும் இருக்கும்.

இது வெள்ளையும் சாம்பல் நிறம் கொண்டதாயும், கறுப்பு, வெள்ளி நிறம் கொண்டதாயும் இருக்கும். இது நீர்புக வழி அளிக்காத பாதுகாப்புக் கொண்டதால் நீச்சல் செய்யும் பொழுதும் அணிந்திருக்கும் வசதியைக் கொடுக்கின்றது. இந்தக்கருவியை யுஎஸ்பி யூடாக கணினியுடன் இணைத்து சார்ஜ் செய்து கொள்ளலாம். இதன் உள்ளே உள்ள மின்கலம் சார்ஜ் செய்ததும் நான்கு நாட்கள் நிலைத்து நிற்கக் கூடியது. இந்தக் கருவி எச்சரிக்கைச் சத்தம் எழுப்ப முடியாமல் இருப்பது ஆச்சரியமாக இருந்தாலும் அதிரக் கூடியது (Vibrate) என்பதால் எதிர்காலத்தில் இதனுள் உள்ள மென்பொருட்களை மாற்றி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிறாம்ரன் மாநகரில் புதிதாக ஒரு தமிழர் உணவகம்

# குட்லக்

# NOW OPEN!

DINE IN, TAKEOUT AND CATERING





## WEEKEND BUFFET ($6.95 + TAX)

**We can host any parties up to 60 people at good Luck restaurant we can cater all of your party needs up to 15,000 people.**



### Hours of operation

Tuesday - Sunday 11am -10 pm
Monday - Closed

**905 450 1616**

**124 KENNEDY ROAD SOUTH, UNIT # 2, BRAMPTON, ON L6W 3E7**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமைப்பதன் மூலம் எச்சரிக்கைச் சத்தம் எழுப்பக் கூடியதாக மாற்றலாம் என்று கருதப்படுகின்றது. இந்தக் கருவியை இயங்க வைப்பதற்குரிய அப்ஸ் (apps) எனப்படும் மென்பொருள் வடிவத்தை ஐஓஎஸ் (ios) அல்லது அன்ரோய்ட் (Android) போன்ற இயங்குதளங்களில் இருந்து தரவிறக்கம் செய்ய வேண்டியுள்ளது. இந்தக் கருவி சாதாரணமாக நேரத்தைக் காட்டிக் கொண்டிருக்கும். இதன் தொடுதிரையைத் தட்டும்பொழுது நாளின் திகதியைக் காட்டும். தொடுதிரையின் இடது புறத்தைத் தொடும் பொழுது தற்போதைய உடற்பயிற்சியையும், மேலும் தொட்டு இழுக்கும் பொழுது இதயத்துடிப்பு விபரத்தையும், எரிக்கப்படும் கலோரி விபரங்களையும் இந்தக் கருவி காட்டுகின்றது. இந்தக் கருவி கையில் இறுக்கமாகக் கட்டப்பட்டிருத்தல் அவசியம். இந்தக் கருவி நாம் சுகத்துடன் இருப்பதற்கு வேண்டிய ஊக்கத்தை அளிக்கின்றது. முதன் முதலாக 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சந்தைக்கு வந்த உடல்நிலை தடமறியும் கருவிகள் பல்வேறு முன்னேற்றங்களுடன் புதிய பெயர்களில் வெளிவந்த வண்ணம் இருந்தன.




தளிர் வாசகர்களே!. இந்த இதழில் கணினித்துறையின் வளர்ச்சியால் உருவாகும் உடல்நிலைத் தடமறியும் கருவி ஒன்றினைப் பற்றி ஆராய்ந்தோம். இது ஒரு சிறிய கருவியாக இருந்தாலும் ஒருவரின் உடற்பயிற்சியை ஊக்கப்படுத்தி உடல்நலம் பேண உதவும் ஒரு கருவி என்பதாலும் அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்களில் ஒன்றாக அடைவதாலும் இந்தக்கருவி பற்றி இந்த இதழில் இடம் பெறும் 'மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள்' தொடர் கட்டுரையின் பகுதி 4 இல் ஆராய்ந்து கொண்டோம். இவ்வாறான விடயங்களைத் தெரிந்து கொள்வதோடு, நிறைந்த பயன்பாடு தரும் ஆரோக்கியமான முயற்சிகள் மூலம் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாகவேண்டும். நமது எதிர்காலச் சந்ததியினரும் புதிய கண்டுபிடிப்புக்களில் அதிகமான நாட்டத்தைச் செலுத்த வேண்டும் என்ற விருப்போடும் இந்த இதழிற்கான இந்தக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன். இந்தக் கட்டுரைத் தொடர் பற்றிய உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மீண்டும் சில செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம். நன்றி. வணக்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**KAMALI** SHANMUGALINGAM
Sales Representative

Cell. **647-864-1051**

Off Phone. **905-201-9977**

Off Fax. 905-201-9229

realtor.kamalishan@gmail.com

*Independently owned & operated*

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive,Suite 205
Markham, ON. L3S 4N8
www.homelifefuture.ca
*Independently owned & operated*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு:



## எமது ஆக்கத்தன்மைக்கான ஒரு ஆற்றல்

- சிந்தனைப் பூக்கள்
எஸ்.பத்மநாதன்

சிரிப்பு என்பது மனித குலத்திற்கு கிடைத்த அருங் கொடையாகும். சிரிக்கக்கூடிய ஒரேயொரு உயிரினமாக இதுவரை அறியப்பட்டது மனித இனம் மட்டுமே. சிரிப்பை ஒரு வரப்பிரசாதமாக கொண்டுள்ள நாம் பதவி, அந்தஸ்து, அதிகாரம், பெருமை, விரக்தி போன்ற ஏதேதோ நினைப்புகளால் எமது முகத்தை இறுக்கிக் கொள்கிறோம். பிஞ்சு குழந்தையாக இருந்த வேளை பெற்றிருந்த குதூகல உணர்வை படிப்படியாக தொலைத்து விட்டு வறட்சியை மட்டுமே முகம் முழுக்க நிரப்பிக் கொள்கிறோம்.

சிரிப்பு என்பது மூளையின் குறிப்பிட்ட செயல்பாட்டினால் ஏற்படும் மனஎழுச்சியால் உருவாகின்றது.



மருத்துவரீதியாக செய்யப்பட்ட ஆய்வுகளில் உடலுக்கு மிகச் சிறந்த மருந்து; உள்ளத்திற்கு ஏற்படும் ஆற்றல்; வாழ்வு மாற்ற அனுபவம்; மகிழ்ச்சியின் வெளிப்பாடு என்பவற்றிற்கு உதவுவதாக முடிவுகள் ஏற்பட்டுள்ளன. ஏனையவர்களுடன் இடைத்தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கும் உதவுகிறது. உளவியல், உயிரியல் ரீதியில் மனித உடலினை நிண்ம நிலை (Gelotology) க்கு கொண்டு செல்லவும் வழிவகுக்கிறது.


ஒவ்வொரு குழந்தையும் ஒரு நாளில் 300 தடவைகள் சிரிக்கின்றரெனவும் முதியோர்கள் சராசரியாக 20 தடவைகளே சிரிக்கின்றனர் எனவும் அறியப்பட்டுள்ளது. குழந்தைகள் 17 நாட்களில் புன்னகை புரிய முயற்சி செய்கிறார்கள் எனவும் 4 மாதங்களிலே முழுமையாக சிரிக்கின்றனர் எனவும் அறியப்பட்டுள்ளது. சிரிப்பு பற்றிய ஆராய்ச்சியாளர் Robert Provine, "ஒவ்வொருவரிடமும் உள்ள இயக்கமே சிரிப்பு எனவும், ஒரு சர்வதேச மனித சொல்லாட்சியே இது" எனவும் கூறுகிறார். ஆயிரக்கணக்கான மொழிகள், உரையாடல்கள் இருந்தாலும் எல்லோரும் சிரிப்பாலேயே பேசுகின்றனர் எனவும் கூறுகிறார்.

பேசுவதற்கு முன்பே சிரிப்பு மூலம் குழந்தைகள் பேச ஆரம்பிக்கின்றன. குருடாக, செவிடாக பிறந்தாலும் சிரிப்பு மட்டும் வந்துவிடுகிறது. மரபுரீதியாக வரும் சிரிப்பு உள்ளார்ந்த சில நன்மைகளைப் பெற்றிருக்கின்றது. சிரிப்பு மையம் மூளையிலே உள்ளது. எனினும், Mesialtha amus, Hypothalamus, Subthalams என்பவற்றின் இயக்கமே சிரிப்பாக வெளிவருகிறது.

கிரேக்க நாட்டில் வாழ்ந்த ஹெரடோட்டஸ் (Herodotus) என்ற தத்துவஞானி அப்பாவிகள், பார்க்கின்சன் நோய் உள்ளவர்கள், பைத்தியங்கள், முரண் மூளையுள்ளவர்கள் தேவையற்ற முறையில் சிரிப்பதாக கூறியுள்ளார். எனினும், மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் "சிரிப்பு ஒரு மாமருந்து" என்ற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

நவீன ஆராய்ச்சியாளர் Hobbes என்பவர் "திடீர் என ஏற்படும் மகிழ்ச்சியால் பலர் சிரிக்கின்றனர்" என்று கூறியுள்ளார். Bergson என்பவர் "நுண்ணறிவு நட வடிக்கையால் நகைச்சுவைக்காக சிரிப்பு ஏற்படுகின்றது" என்கிறார். மனிதர்களே சிரிக்கின்றனர் என கூறப்பட்டாலும் அண்மைய ஆய்வுகளில் பிராணிகள் சில வேளைகளில் சிரிப்பதுபோல முயற்சிக்கின்றன என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகளும் வெளி வந்துள்ளன.

டாக்டர் பிரையன் கரோல் (Brian Caroll) என்பவர் "சிம்பன்சிஸ் கொரில்லா, உறாங் உட்டாங் போன்ற குரங்குகள் ஒன்றையொன்று பிடித்து, உராயச் செய்து, தங்கள் மகிழ்ச்சியை வெளிக் காட்ட பற்களை வெளிக்காட்டி சிரிக்க முயல்கின்றன" என கூறியுள்ளார்.

எலிகள் கூட மக்களுக்கு தெரியாமல் குரலெழுப்புகின்றன; அவை ஒன்றுடனொன்று சண்டையிடுகின்றன என கூறுகின்றனர். நாய்கள் கூட Sonograph என்ற முறையில் குரலெழுப்புகின்றன. குரைக்கின்றன, விளையாடுகின்றன, புரள்கின்றன, ஓடி மகிழ்கின்றன, தங்கள் வாய் மூலம் ஏதோ கூற முயல்கின்றன, வாலை ஆட்டி மரியாதை செய்கின்றன. இவை எல்லாமே மனவெழுச்சி சார்ந்த மகிழ்ச்சி செய்திகளாகும். மனிதர் போன்று வாய்விட்டு ஹோ... ஹோ... என்று சிரிக்க முடியவில்லை எனினும், சிரிக்க முயல்கின்றன. இதுவே மனிதனுக்கும் பிராணிக்கும் உள்ள வேறுபாடாகும்.

ஆங்கிலத்தில் ஒரு மேற்கோள் உள்ளது. சோப் உடலுக்கானது, சிரிப்பு உயிருக்கானது (Soap is to body; Laughter is to the Soul) என்பதே அதுவாகும். சிரிப்பு பற்றிய நூற்றுக்கணக்கான மேற்கோள்கள் வந்துள்ளன. சிரிப்பு என்பது மிக வலுவான மருந்து. (Laughter is a Strong Medicine) சிரிப்பு என்பது மனஎழுச்சிக்கும் சமூக நன்மைக்குமானது; சிரிப்பு நகைச்சுவையுணர்வை கூட்டுவது; முழு உடலையும் ஓய்வு பெற வைக்கிறது. நோய் எதிர்ப்பு தன்மையை கூட்டுகிறது. இதயத்தினை பாதுகாக்கிறது, Priceless Medicine, Free, Easy to Use என பல நன்மைகள் உள்ளன.

சிரிப்பினால் ஏற்படக்கூடிய மருத்துவப் பயன்கள் பலவாகும். முக்கியமாக உடல்வலியைப் போக்குவதில் பயன்படுகிறது; தொழிலில் உள்ள திறன்களை கூட்டுகிறது; மனஎழுச்சி சார்ந்து மக்களை இணைக்கின்றது, பிராண வாயுவை அதிகரிக்க செய்து இதயத்திற்கும் மூளைக்கும் வலுவை கூட்டுகிறது. இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் தன் மையை அதிகரித்து சமன் செய்கிறது. இரத்தம் செல்லுகின்ற உட்சுவர்களையும் அகச்சுவர்களையும் (Endotheliu) என்பதி னையும் வலிமையாக்குகின்றது.

உடல் இரசாயன கூறுகளிலும் பல நன்மைகள் ஏற்படுகின்றன. அத்துடன் வலுவுள்ள எதிர்ப்பு சக்தியை கூட்டுகிறது. நாம் ஹா... ஹா... ஹோ... ஹோ... என்று சிரிக்கும்போது தொண்டையிலுள்ள பேச்சுக்குரிய திசுக்கள் வலுவாகின்றன. அமெரிக்காவிலுள்ள மேரிலன்ட் பல்கலைக் கழகத்தில் மைக்கல் மில்லர் என்ற நிபுணர் 20 ஆரோக்கியமுள்ளவர்களை தெரிவு செய்து சோதனையிட்ட வேளையில் அவர்களுக்கு இதயம் சம்பந்தமான நோய்கள் குறைவடைந்தமையையும் விசேடமான சில ஓமோன்கள் சுரக்கப்பட்டிருப்பதனையும் அறிந்துள்ளனார். நைற்றிக் ஓக்சைட் (Nitric Oxcide) நாடிகளின் சுவர்களை பலமாக்கியிருந்தன. அவர் 30 நிமிடம் தேகப் பயிற்சியை கிழமைக்கு மூன்று தடவையும் 15 நிமிடங்கள் வாய் விட்டு சிரிப்பது மூன்று தடவையும் செய்வது நல்லது என்கிறார். பல மருத்துவர்கள் சிரிப்பினை ஒரு சர்வரோக நிவாரணியாகவே கருதுகின்றனர்.

சமூகரீதியிலும் சிரிப்பு என்பது மிகவும் அவசியமான தொன்று. பல தொடர்புகளை ஏற்படுத்தி வலுவூட்டுவதில் சிரிப்பு முக்கியமாகும். ஒவ்வொருவரையும் நாம் எண்ணும் போது அவர்களது சிரிப்பு முகமே முதலில் வரும். கன்னங்கள் குழி விழ புன்னகைப்பவர்கள், கலகல என சிரிப்பவர்கள், ஹோ ஹோ என்று வாய்விட்டு சிரிப்பவர்கள் கண்ணீர் வர சிரிப்பவர்கள், ஓடி ஓடி சிரிப்பவர்கள் என பலவகையினர் உள்ளனர்.

முன்னாள் இந்திய பிரதமராகவிருந்த நரசிம்ம ராவ் சிரிப்பதில் மட்டும் சிக்கனமானவர். அவரது சிரிப்புடன் கூடிய புகைப்படங்களை காண முடியாது. தற்போதுள்ள மன்மோகன் சிங் கூட சிரிக்க மறந்த தலைவர் தான்.



எவ்வித செலவும் இல்லாத சிரிப்பை இவர்கள் கொள்ளாதது புரியாத புதிர்தான்!

பல்வேறு மனக்கோளாறுகள் உள்ளவர்களுக்கும் சிரிப்பே மருந்தாகி வருகிறது. ஒவ்வொருவரும் நகைச்சுவை துணுக்குகளை கூறும்போது சிரிப்பு செய்வது அவசியம். சிலர் நகைச்சுவை விளங்காது விட்டால் பேசாமல் இருப்பார்கள். எனவே, நகைச்சுவைகளை கூறுவதற்கும் விசேட ஆற்றல் வேண்டும். ஆனந்த விகடன், குமுதம் போன்ற பல சஞ்சிகைகளில் நிறையவே நகைச்சுவை துணுக்குகள் வருகின்றன. பல கார்டூன்களும் சிரிப்பூட்டுபவை. பலர் இதனை படித்து விட்டு தனியாக இருந்து சிரிப்பவர்களும் உள்ளனர். சினிமாவில் கூட நகைச்சுவை காட்சிகளின் போது நாம் விழுந்து விழுந்து சிரிக்கிறோம். எல்லோரையும் சிரிக்க வைக்க நல்ல தர முள்ள நகைச்சுவைகளே தேவை. மறைந்த நகைச்சுவை கலைஞர் கலைவாணரும் மதுரமும் தம்பதிகளாக பலரை சிரிக்க வைத்து பாடியுள்ளனர். அகங்கார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, ஏளன சிரிப்பு, நமுட்டுச் சிரிப்பு, சங்கீத சிரிப்பு என பலவற்றை அதில் பாடிக் காண்பித்தார். தொடர்ந்து தங்கவேலு, நாகேஷ், வடிவேலு, கவுண்டமணி, விவேக், சந்தானம் என பட்டியல் நீளுகிறது. சினிமாக் களின் முக்கிய தரமே இக்காட்சிகள் தான் என்ற நிலைக்கு வந்துள்ளோம். இது பயம், பதட்ட உணர்வு என்பவற்றினை போக்கி அனைவரையும் மகிழ்விக்க உதவுகிறது.

மக்களை சிரிப்பூட்டுவதற்காக பல நாடுகள் செய்து வரும் முயற்சிகளை பல. பல நகைச்சுவையாளர்கள் தொலைக்காட்சிகளில் தோன்றி மூச்சுவிடாது பேசித் தள்ளு கிறார்கள். சார்லி சாப்ளின் ஆங்கில திரையுலகில் சிறந்த நகைச்சுவை நடிகராக இன்றுவரை நினைவில் வாழ்பவர். இப்படியான சிறந்த கலைஞர்களை பல அரங்குகளிலும் முன்னிறுத்தி வருகின்றனர். சினிமா பார்ப்பது போல் நகைச் சுவை அரங்குகளுக்கு மட்டும் செல்பவர்கள் பலர்.

சோக காட்சிகளையும், பாலியல் வல்லுறவு, பழி வாங்கல், வாலிப காதல் நம்பவே முடியாத சண்டை காட்சி களில் நாம் ஊறிப்போவதால் சோகப்பாடல்களையும், சோகப் படங்களையும் பார்க்க விரும்புகின்றோம். நேர் மறைச் சிந்தனை (Positive Thinking) எப்போது எமக்கு வருமோ தெரியவில்லை.

மும்பாய் நகரில் வாழ்ந்த டாக்டர் மடான் கட்டாரியா (Madan Kataria) என்பவர் 1995, 13ம் திகதி ஒரு சிரிப் போர் கழகத்தினை உருவாக்கினார். இது முழு உலகிற்கும் ஒரு ஆரம்ப நிகழ்வு போலாயிற்று. சிலருடன் தொடங்கிய இக்கழகம் இன்று 6000 பேர்களை உள்ளடக்கியுள்ளது. இப்படி 60 நாடுகளில் இச்சிரிப்பு ச ங்கங்கள் ஏற்பட்டுள்ளன. சில பாட சாலைகளிலும் சிரிப்பு வகுப்புக்கள் இடம் பெற்று வருகின்றன. இந்திய மண்ணில் உருவாகிய சிரிப்புக் கழகம் சிரிப்பு யோகாவையும் உருவாக்க உதவியது எனலாம். தொடர்ந்து சிரிப்புக்கான பல போட்டிகளும் இடம் பெற்று வருகின்றன. 'The Great Indian Laughter Challenge' என்ற நிகழ்ச்சி மூலம் போட்டிகள் இடம் பெறுகின்றன. இங்கு பல்வேறு மனக்கோளாறுகள் உள்ள முதியோர்கள் செல்கின்றனர். நீங்களே சிரியுங்கள், எப்போதும் முடிந்த அளவுக்கு சிரியுங்கள், மலிவான மருந்தான சிரிப்பை செய்யுங்கள், இதன் மூலம் நண்பர்களை உருவாக்குங்கள். வீட்டில் சூரியன் உதிப்பது போல் சிரியுங்கள். உலகளவில் சிந்தியுங்கள். உங்கள் அளவில் சிரியுங்கள். முகத்திலிருந்து பனியை அகற்றி சூரிய சிரிப்பை ஏற்படுத்துங்கள். உண்மையான சிரிப்பை செய்யுங்கள் என்ற பல தத்துவவாதிகளின் போதனைகள் இங்கு இடம் பெற்று வருகின்றன. நல்லதொரு சிரிப்பு நீண்ட தொரு நித்திரையும் மிகச் சிறந்த இரு நோய் நிவாரணிகள் (A Good Laugh and A Long Sleep are Two Best Cures) என்று ஐரிஷ் நாட்டு பழமொழி இதுபற்றி கூறியுள்ளது.

சிரிப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன. நல்ல மகிழ்ச்சியை ஏற்படுத்தும் தொலைக்காட்சிகளை பார்த்தல், நகைச்சுவையாளர் சங்கத்தில் இணைதல், நகைச்சுவை நூல்களை படித்தல், நகைச்சுவை துணுக்குகளை பகிர்தல், மகிழ்ச்சியுள்ள நண்பர்களுடன் சேர்தல், சிறிய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுதல், செல்லப் பிராணி களுடன் கொஞ்சி மகிழ்தல், சில இசைகளுடன் சேர்ந்து பாடுதல் என்பவற்றினை பின்பற்ற முடியும்.

தற்போதுள்ள சூழ்நிலையில் சிரிப்பு யோகா (Laughter Yoga) மிகவும் பிரச்சித்தமாகி வருகிறது. இங்கு மூச்சு பயிற்சியும், சிரிப்பு பயிற்சியும் சேர்ந்து நிகழ்கிறது. ஒரு அறையில் பாடிக் கொண்டே ஆடுவது, இடையிடையே வாய்விட்டு சிரிப்பது, சோடியாக சேர்ந்து எதிரும் புதிருமாக நின்று சிரிப்பது போன்ற பல முறைகள் உள்ளன. இன்று சிறைக் கைதிகளுக்கு கூட சிரிப்பு வகுப்புகள் நடைபெறுகின்றன. தற்போதைய ஆய்வுப்படி புற்றுநோய், ஆஸ்துமா, மூட்டு வலி என்பவற்றிற்கு கூட சிரிப்பு உத வுகிறது. எதுவித செலவும் அற்ற, உடன் விளைவினை ஏற்படுத்தக்கூடிய அருமையான மருந்தான சிரிப்பினை என்றும் செய்ய வேண்டியுள்ளது. பணம் வரும் என வாசல் களில் சிரிக்கும் புத்தர் (Laughing Budha) இருப்பார், அதில் சில சில்லறைகளும் இருக்கும். வீடுகளின் உரிமையாளரோ தாடி வளர்த்து சோகத்தில் மிதப்பார். உண்மையில் எமது ஆக்கத்தன்மைக்கான ஆற்றல் சிரிப்புக்குள் புதைந்து கிடக்கிறது.

**************





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டையத் தமிழ் பெண்களின் தேசப்பற்று

## புஷ்பா கிறிஸ்டி

செந்நீர் ஆறாய் ஓட களத்திலே தன் மகன் மாண்டிருந்த கோலம் காண ஒரு பெண் செல்வாளாயின் மறம் வாய்ந்த உள்ளத்தில் உள்ள உணர்வு வியப்பாகத் தெரியும். நரம்பு புடைத்து வெளியே தெரிகிறது. உடம்பு வற்றி உருக்குலைந்துள்ளது. வயது முதிர்ந்த ஒரு தாய். அவளது மகன் போரில் புறமுதுகு காட்டி மாண்டான் எனச் சிலர் வந்து இழிவாகச் சொல்கின்றனர். புறமுதுகு காட்டித் தன் மகன் இறந்தான் எனும் சொல் கேட்டு அப்படி அவன் மாண்டிருந்தால், அவனுக்கு பாலூட்டிய கொங்கைகளை வெட்டி எறிவேன் எனக் கூறியபடி சினத்துடன், கையில் வாள் ஏந்தியபடியே போர்க் களம் செல்கிறாள். கிடக்கும் உடலங்கங்களின் மத்தியில் தன் மகனின் உடலைத் தேடுகிறாள். அங்கே அவள் மகனின் உடல், நெஞ்சில் வேல் பாய்ந்து, நெஞ்சு சிதையுண்டு, இறந்து கிடக்கக் காண்கிறாள். அவனைப் பெற்ற போது, அடைந்த இன்பத்தை விட மிகவும் பேருவகை கொள்கிறாள். இதனைக் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்னும் புலவர் பெருமாட்டி பாடுகின்றார். உடல் தளர்ந்தாலும் உள்ளமும், உணர்வும் தளரா அவ்வீரத்தாயின் உணர்ச்சியைக் கண்டு, உள்ளம் உரமும் ஊக்கமும் அடைகின்றது...

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின் னென்று பலர்கூற
மணமர்க் குடைந்தன னாபி னுண்டவென்
முலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் தழுவவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனவோ (புறம் 278)

வெண்கொக்கையொத்த கூந்தலையுடைய தாய் ஒருத்தி தன் மகன் போரிலே இறந்தான் என்று செய்தியறிந்தாள். அவனது சாவு வீரச்சாவா என உடன் கேட்டறிந்தாள். நாட்டிற்காக எதிரிகளின் யானையுடன் போரிட்ட மறமகனின் வீரத்தின் திறம் எண்ணி, அவனை ஈன்ற பொழுதினும் பேருவகை கொண்டாள். அத்தாயின் உணர்வுகளைப் பின் வருமாறு பூங்கன் உத்தியார் பதிவு செய்கிறார்.

மீனுண் கொக்கின் றூவியன்ன
வானரைக் கூந்தள் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோங்கழை துயல்வரும் வெதிர்த்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே (புற. 277)

தனக்கிருந்த ஒரே மகனை நாட்டுக்காக ஈந்து துயர் மறந்து தாய்மண்ணைக் காக்கும் உயர் செயலினைக் உவந்து ஏற்கும் வீரத்தாய்மாரின் இதயத்துடிப்பில் நாற்றுப் பற்றின் உணர்வு ஊடுருவி உள்ளதனைக் காணலாம். காண உடல் நடுங்கும் போர்க்களத்தில் முதிர்ந்த மறக்குடிப் பெண் தன் மகன் களத்தில் வீரச்சாவடைந்தான் என்ற செய்தி கேட்டு அவனது விழுப்புண்களைக் காண வேண்டிச் செருக்களம் எங்கும் தேடுகிறாள். வீழ்ந்து கிடக்கும் பல உடல்களின் நடுவில் துழாவித் துழாவித் தேடி தன் மகனின் உடலைக் காண்கிறாள். சிதைந்திருக்கும் மகனின் உடலைக் கண்டெடுக்கிறாள். அத்தாய் அம் மாவீரனின் மாண்புகளை எண்ணி உவர்க்க அவளது ஓடாய் ஓட்டி வற்றிய முலையிலிருந்து பால் சுரந்தமையை வியந்து ஔவையார் கூறுகிறார்.

கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்புண்
வெந்துவாய் வடித்த வேறலைப் பெயரித்
தோடுகைத் தொழுதரு உத் துரந்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்பட்ட விலங்கி
இடைப்பட யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே (புறம் 295)

பாடல்களுக்கெல்லாம் தலையாயதாய் பாடலொன்று தமிழ் இலக்கியத்தில் உண்டெனில் அது பின்வரும் ஔவையாரின் பாடலே!

நாகத் தன்ன பாகார் மண்டிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவே யாயினுந் தம்மொடு செல்லா
வேற்றோ ராயினு நோற்றோரக் கொழியும்
ஏற்ற பார்ப்பார்க் கிரங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரறி தேறன் மாந்தி மகிழ்ச்சிறந்
திரவர்க் கருகல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவன் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப்.....
ஒன்றுபுரிந்தடங்கி.......
மத்தீப் புரையக் .......
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்
யானறி யளவையோ விதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினு மிம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்து மேந்தோன்றிப் பொலிகநுந் நாளே (புறம் 367)

தமிழ்ப் பற்றின் வலிமை என்பது, தமிழ் வேந்தர்களின், தமிழ் மக்களின் ஒற்றுமையே ஆகும். தமிழர்களின் ஒற்றுமையுணர்வு குன்றி, வேறுபட்டால், தமிழர்கள் வலுவிழந்தால் தமிழ்த்தாயகம், அயலவர்களால் கைப்பற்றப்பட்டுவிடும். தமிழரின் இறையாண்மை, வரலாறு, நாகரீகம், கலை, சமூகக் கட்டமைப்பு, சிதைந்து விடும் என தமிழுலகம் அறிந்திருக்கிறது.. அன்றைய தொல்காப்பியர் முதல் இன்றைய தமிழ் அறிஞர்களும் இதனை நன்கு அறிந்திருக்கின்றனர். அன்று தமிழர் பிரிந்ததினால் தான் கோசர், வடுகர், களப்பிரர், துலுக்கர், பரங்கியர், வெள்ளையர், சிங்களவர் என்று அயலினத்தவர், தமிழர்களின் இறையாண்மையைப் பறித்து, ஆட்சி கொண்டனர். தமிழர்களின் தலைவர்களின் ஒற்றுமையே அயலவர்களிடமிருந்து தமிழ்த்தாயகத்தைக் காத்திடும் பெரும் சக்தியாகும். அந்தச் சக்தியினைச் சிதையாமல் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும். தவறி நடந்தோமானால் வரலாறு எம்மை நிச்சயம் மன்னிக்காது. வீர ஆடவர்கள் எவ்வளவு வீர தீரம் நிறைந்தவர்களாய் இருப்பார்களோ அந்தளவுக்கு தாயகத்துக்குப் பெருமை கிடைக்கும். காடு, மலை, கடல், நாடு என்று பரந்து கிடக்கும் எம் பூமி அங்கு வாழும் வீரர்களினால் சிறப்படையும் என்கிறார் ஔவையார்...

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லவை வாழிய நிலனே (புறம் 187)

மேற்கண்ட பாடல்கள் பண்டைத் தமிழ்ப் பெண்களின் நாட் டுப் பற்றினையும் மறம் மிகுந்த தேசியச் சிந்தனையையும் விளக்குகின்றன. இப்பாடல்களை இயற்றியவர்கள் நல்லிசைப் பெண்டீரே. பல குடிகளைச் சேர்ந்த தமிழ்ப் பெண்டிரே. இதன் மூலம் தமிழ்ச் சமூகத்தின் பண்டைப் பெண்களின் வீர உணர்வுகளைப் புரிந்து கொள்ளலாம்.

(முற்றும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழரின் தொன்மை ஆவணம்

# தொல்காப்பியம்

பேராசிரியர். இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கனடா வளாகம்

தொல்காப்பியம் தமிழர் பண்பாட்டிற் காலத்தால் முந்தித் தோன்றிய இலக்கண நூலாக எமக்குக் கிடைத்துள்ளது. பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் 'தொல்காப்பியம் தமிழரின் உயிர் நூல்' என்பார். தொல் காப்பியத்தின் உள்ளடக்கம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாகவும், ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகவும் அமைந்து, 1602 சூத்திரங்களில் ஆக்கம் பெற்றுள்ளது. முதலிரு அதிகாரங்களும் தமிழ் மொழியின் இலக்கண இயல்பை வரையறை செய்து விளக்குகின்றன. பொருளதிகாரம் பண்டைத் தமிழரின் அகம், புறம் சார்ந்த முழுமையான வாழ்க்கை முறை களையும், அவற்றைப் பாடும் செய்யுட்களின் சிறப்பியல்பு களையும் முழுமையாக விளக்குகின்றது. அத்துடன் பண் டைத் தமிழரின் மொழி, வாழ்வியல், பண்பாட்டுக் கூறுகள் என்பனவற்றுக்கு இலக்கணம் கூறும் முழுமையான சமூகச் சிந்தனையுள்ள சமூகவியல் நூலாகவும் தொல்காப்பியம் அமைந்துள்ளது.

தொல்காப்பியர் காலத்தில் வடமொழியும் ஆரியர் பண்பாடும் தமிழகத்திற் சிறிது சிறிதாக இடம்பெறத் தொடங்கியதால், தமிழின் தனித் தன்மையையும், அதன் இலக்கணத்தையும் வகுத்துக் கூறும் வகையில், தமிழர் வாழ்வியலுக்குமுரிய இலக்கணமாகத் தொல்காப்பியம் இயற்றப்படுவதாயிற்று. தொல்காப்பியத்திற்கு இளம் பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் எழுதிய பழைய உரைகள் கிடைத்துள்ளதோடு, இருபதாம் நூற்றாண் டிலும் பலர் உரை எழுதியுள்ளனர். இவ்வுரைகளின் மூலம் தொல்காப்பியம் பெரு வழக்குப் பெற்று வருவதாயிற்று.



தொல்காப்பியம் எப்போது எழுதப்பட்டது என்பது இற்றை வரை ஆய்வுப் பொருளாகவே உள்ளது. பனம்பாரனாரின் பாயிரத்துடன் அதங்கோட்டாசான் தலைமையில் அரங்கேறிய தொல்காப்பியம், இடைச் சங்கம், கடைச்சங்கம் நிலவிய காலங்களில்இலக்கண நூலாக வழங்கிற்று. தொல்காப்பியருக்கு முன்னரே இலக்கண ஆசிரியர் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதற்குத் தொல்காப்பியமே சான்று. முதல் இலக்கண நூல் எனக் கருதப்பட்ட அகத்தியம் அழிந்த நிலையிலே தொல் காப்பியம் தோன்றிற்று. தமிழர் சமூகத்தின் வாழ்வியல் நடைமுறைகளைத் தொகுத்துத் தந்துள்ள வகையில் தொல்காப்பியம் தமிழியல் ஆய்வுக் களஞ்சியமாகவும் திகழ்கிறது. வடக்கே வடவேங்கடமும், தெற்கே குமரி யாறும் நிலைபெற்றிருந்த காலத்திலே தொல்காப்பியர் வாழ்ந்தார் என்றும், குமரி ஆற்றுக்குத் தெற்கே அமைந்தி ருந்த குறும்பனை நாடுகளில் தமிழ் திரிந்த மொழி வழங்கிற்றென்றும், குமரியாறு கடற்கோளால் அள்ளுண்டு செல்வதற்கு முன்பாகவே தொல்காப்பியம் எழுதப்பட்டது என்றும் உரையாசிரியர் கூறுவர்.

தொல்காப்பியத்தை வடமொழி இலக்கண நூல்களுட னும், அகத்தியரோடும் தொடர்புபடுத்தும் கதைகள் தொன்மங்கள் மட்டுமன்றித், தொல்காப்பியர் காலத்தைப் பின்தள்ளுவதற்கு வடமொழிச் சார்பாளர் மேற்கொண்ட முயற்சி என்றும் க. வெள்ளை வாரணர் குறிப்பிடுவர் (2008). தொல்காப்பியர் வடமொழியாளர் என்று நிறுவுவதிலும் வடமொழிப் பற்றாளர் கருத்தாக இருந்துவந்துள்ளனர். நச்சினார்க் கினியர் சிறப்பாய்வுரையிலே, தொல் காப்பியனார் அகத்திய முனிவரால் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டுவரப்பட்டவர் என்னுங் கட்டுக்கதை யினை எழுதினார். மேலும் தொல்காப்பியரை வடநாட்டு சமதக்கினியின் புதல்வரென்றும், அவர் திரண தூமாக்கினி என்னும் இயற்பெயருடையர் என்றும் குறிப்பிட்டுள்ளமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மக்கதை ஆகும். காப்பியன் என்பது பழந்தமிழ்க் குடிப்பெயர். ஆனால் வடமொழிச் சார்பாளர் ‘காப்பியன்’ என்பது வடமொழிக் காவ்ய கோத்திரத்திலிருந்து பிறந்த வடசொல் என்பர். ஒரு காலக்கட்டத்திற் பல்கலைக் கழகங் களிலே தமிழ், வரலாறு ஆகிய துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் திட்டமிட்டே பழந்தமிழ் இலக்கியங்களில் ஆரியப் பண்பாட்டின் சாயலை வலிந்து எழுதி வந்த மையை அவர்களின் நூல்வழிக் காணலாம்.


தொல்காப்பியத்திற்கு உரை எழுதியோர் தாம் சார்ந்த மதக் கருத்துக்களுக்கும் சமூகக் கோட்பாடுகளுக்கும் ஏற்ப உரை செய்தனர். குறிப்பாக நச்சினார்க்கினியர் ஆரியரது கோட்பாடுகளைத் தமிழ் மரபோடு கலந்து உரை செய்தமை தமிழர் பண்பாடு கூறும் தொல்காப்பியத்தின் சிறப்பைச் சிதைப்பதாகவுள்ளது. தொல்காப்பியர் ஓர் அறிவர்; சாதி மத உணர்வுகளுக்கு ஆட்படாதவர். ஆனால், ஆரியச் சார் பாளர் தம் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் விளக்கும் வகையிலான சூத்திரங்களை யாத்துத் தொல் காப்பியத்திற் சேர்த்துக் கொண்டதோடு, தொல்காப்பியரும் வடமொழியாளர் என்றும், வடநாட்டுக் குலத்தவர் என்றும் நிறுவுவதிற் பெரும் முயற்சியெடுத்து வந்துள்ளனர்.

முதற் சங்க ஆவணங்கள் கடற்கோளால் அழிந்தமை யால், இடைச்சங்க காலத்தில் எழுச்சிபெற்ற தமிழ்மொழி வழக்கை செம்மையுறச் செய்யும் வகையில் பலர் இலக்கண நூல்கள் இயற்றினர். அந்த இலக்கண நூல்களை நன்கு கற்றறிந்த தொல்காப்பியர் மொழியின் வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைமுறை, கலை வளர்ச்சி, இலக்கியச் சொல் நெறி என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, உலக வழக்கினையும் செய்யுள் வழக்கினையும் அடிப்படையாக வைத்து, தமிழ் மொழிக்கு முழுமையான இலக்கணம் செய்தார்.

தொல்காப்பியர் காலம் கி.மு. 700 க்கு முற்பட்டது எனப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், சி.இலக்குவனார் முதலியோர் ஒத்த கருத்துரைப்பர். தொல் காப்பியர் காலம் பற்றிய ஆராய்ச்சியானது, தமிழர் வரலாறு பற்றிய ஆய்வுடன் தொடர்புடையதாதலால், மொழிவல்லுநர், இலக்கிய வரலாற்று ஆய்வாளர், வரலாற்றாசிரியர், புதைபொருளாய்வாளர் அனைவரும் ஒன்றிணைந்து இப்பணியை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகிறது.

காலத்தாற் பழையனவாகக் கிடைத்துள்ள எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்கள் தொல்காப்பியர் காலத் திற்கு முற்பட்டவையாகும். ‘இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் உரைத்தல்’ என்பது மரபு. அவ்வகையிற் சங்க இலக்கிய காலம் கி.மு. 500 க்கு முற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ளுவதில் எவ்வித தடையுமில்லை. தொல் காப்பியர் காலம் பற்றி ஆராய்ந்தோர் தமிழர் பண்பாட்டு வரலாற்றுக் காலத்தையும் சங்க காலம், தொல்காப்பியர் காலம் என்பவற்றைப் பின்தள்ளுவதில் மிக்க அக்கறை காட்டியுள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

பேராசிரியர் அ. இராமசாமி (2012) தொல்காப்பி யம் இரண்டாம் தமிழ்ச் சங்க காலத்திலே (கி.மு.15,000) தோன்றியதாகக் குறிப்பிடுவர். பேராசிரியர் கே. நெடுஞ் செழியன், வேதத்திலுள்ள தொல்காப்பியச் செல்வாக்கை நிறுவி, தொல்காப்பியம் வேத காலத்திற்கும் முந்தி யது எனவும், சிந்து வெளி நாகரிகத்திலும்; தொல் காப்பியத்திலும் இடம்பெறும் தெய்வங்களை ஆராய்ந்து சிந்துவெளி நாகரிகத்தின் இறுதிக் காலக்கட்டத்தில் (கி.மு. 15,00) தொல்காப்பியம் தோன்றிற்று எனவும் அவர் கூறு வர். தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் ஒப்பிட்டு ஆய்வு செய்த பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்,தொல்காப்பியம் சங்க காலத்திற்கு முற்பட்டது என்பர். டாக்டர் சி. இலக்குவனார். கா.சுப்பிரமணியபிள்ளை, கு.வெ.பாலசுப்பிரமணியன் ஆகியோர் தொல்காப்பியர் காலத்தைக் கி.மு. 7ஆம் நூற் றாண்டுக்கு முற்பட்டது என நிறுவினர். இவர்களுக்கு மேலாக பேராசிரியர் க.வெள்ளைவாரணனார், கி.மு. 5320இல் தொல்காப்பியம் தோன்றிற்று எனவும், மறைமலையடிகள் கி.மு. 3500இல் தொல் காப்பியம் தோன்றியது எனவும் கூறுவர். டாக்டர் மா.இராச மாணிக்கனார் கி.மு. 400 ஆண்டு என்பர். இவ்வாறாக ஆய்வாளராற் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்ட போதிலும், தொல்காப்பியம் கூறும் எழுத்து, சொல், பொருள் இலக்கண விதிகளையும்,தொல்காப்பிப் பொருள மைதியையும், மொழியியல், மொழிவரலாறு, பண்பாட்டு வரலாறு முதலிய ஆய்வுத்துறைகளின் மூலம் ஒப்பிட்டு ஆழ்ந்து நோக்கும்போது தொல்காப்பியர் காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என உறுதியாகக் கூறலாம். தொல்காப்பியர் தனது காலத்திற்கு முன்னர் வழங்கிய இலக்கியங்களை நன்கறிந்தே இலக்கணம் படைத்தார். தொல்காப்பியர் அகத்துறைப் பாடல்கள் கலி,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாட்டு என்ற யாப்பில் இயற்றப்படும் என்றார். ஆனால் சங்ககால அகத்திணைப் பாடல்களிற் பெரும்பாலானவை அகவல், கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய யாப்பிற் பாடப்பட்டுள்ளன. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களுக்குக் கூறிய இலக்கண விதிகள் சங்க இலக்கியங்களில் முரண்படுவதோடு, அவை வட சொற்களாகவும் காணப்படுகின்றன. சங்கச் செய்யுட்களின் மொழிநடைக்கும் தொல்காப்பியர் கூறும் சில இலக்கண விதிகளுக்கும் சில முரண்பாடுகள் காணப்படுவதற்குக் கால இடைவெளியும் ஆரியப் பண்பாட்டு ஊடுருவலும் காரணங்களாகும்.

ஒரு காலத்தில் வழக்கிலிருந்த சொற்கள் பிற்பட்ட காலத்தில் வழக்கொழிந்துபோக, அவற்றுக்குப் பதிலாக புதுப்புதுச் சொற்கள் வழக்கில் தோன்றுதல் இயல்பாகும். அவ்வகையிலே தொல்காப்பியர் காலத்தில் வழக்கிலிருந்த 'அதோழி', 'இதோழி', 'உதோழி','எவன்தோழி' முதலான சொற்கள் சங்கச் செய்யுள்களில் இடம்பெற்றன. மொழியின் அமைப்பை எடுத்துக் கூறுவது இலக்கணம்; மக்கள் வாழ்க்கை நெறியை முறைப்படக்கூறி, நெறிப்படுத்திக் காட்டுவது இலக்கியம். சிலர் இலக்கியம், இலக்கணம் என்னும் சொற்கள்; வடமொழி எனக் கூறுவராயினும், இவை தமிழ்ச் சொற்களேயாம். வடமொழியில் சாகித்தியம், வியாகரணம் என்னும் சொற்கள் உள்ளமை காண்க.

தொல்காப்பியம் பொருளதிகாரத்திலே தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத பொருள் கூறும் சூத்திரங்கள் இடைச் செருகலாக உள்ளன. தொல்காப்பியத்தில் ஆரியரது எட்டு வகைத் திருமண முறைகள் குறித்துக் கூறியிருத்தல் வியப்பாகின்றது. தமிழரது திருமண மரபில் அன்பின் வழியில் காதல்வழிப்பட்ட திருமண வழக்காறுகளே பெரிதும் பின்பற்றப்பட்டன. ஆனால் தொல்காப்பியம் இடம்பெற்றுள்ள எண்வகைத் திருமணம், சமூகத்தில் மேலோர் கீழோர் என்ற பாகுபாடு, காதல் மற்றும் குடும்ப வாழ்க்கையிற் பிராமணரின் செயற்பாடுகள் குறித்த சூத்திரங்களும் இடைச்செருகல்களேயாகும்.

மொழி என்பது ஒலி வழிப்பட்டதாகும். எனவே முதலில் மொழிக்கு அடிப்படையான ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்களுக்குத் தனியாக ஓர் அதிகாரம் வகுத்துத் தொல்காப்பியர் எழுத்திலக்கணம் கூறினார். அதில் எழுத்தொலி, வரிவடிவம் என்பனவற்றுக்கு நன்கு விளக்கம் தந்துள்ளார். தொல்காப்பியர் மிக நுட்பமாக எழுத்தொலிகள் பிறக்கும் முறையை, 'உந்தி முதலா முந்துவளி தோன்றித் தலையினும் மிடற்றினும்...' என்ற சூத்திரத்திற் கூறியுள்ளார். தொல்காப்பியர் சில எழுத்துக்களுக்கு மட்டுமே வரிவடிவம் பற்றிக் குறிப்பிடுவதால், ஏனைய எழுத்துக்கள் மக்களிடையே நன்கு பயன்பாட்டிலிருந்தமை உணரப்படுகிறது. உலக மொழிகள் அனைத்திலும் அவற்றின் உச்சரிப்புப் பற்றிய நுணுக்கமான வரையறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆங்கிலத்தில் B H X Z ஆகிய எழுத்தொலிகள் மிகவும் நுணுக்கமாக உச்சரிக்கப்படுகின்றன. அதுபோன்றே தமிழில் ண ந ன ல ழ ள ற என்ற எழுத்துக்கள் மிகவும் நுணுக்கமான உச்சரிப்புடையவையாகும். தொல்காப்பியர் மிக நுட்பமான வகையில் எழுத்தொலிகள் பிறக்கும் முறையை 2500 ஆண்டுகளுக்கு முன்பாகவே கூறிவைத்திருப்பது என்பது, பண்டைத் தமிழரின் மொழியறிவின் திறத்தையும் தமிழர் பண்பாட்டின் மேம்பாட்டையும் வெளிப்படுத்துவதாகும்.

சொற்கள் மொழியிலே தனித்தும் தொடர்மொழியாகவும் அமையும் பாங்கினைச் சொல்லதிகாரம் விளக்குகிறது. மொழியின் ஆற்றல் எழுத்து வழக்கில் மட்டுமன்றி, பேச்சு வழக்கிலும் தங்கியுள்ளது. பேச்சு வழக்கில் சொற்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை மிக நுட்பமாக அவதானித்து, அவற்றின் இலக்கண மரபுகளையும் தொல்காப்பியர் பதிவுசெய்துள்ளார். சான்றாகப் பேச்சு வழக்கில் பன்மைச் சொல்லை ஒருமையில் வழங்குதல் இயல்பாகும். கண், காது, கால், கை முதலிய உடலுறுப்புக்கள் ஒருமையில் பேச்சுவழக்கில் வழங்குவது வழக்கம் என்பதால், தொல்காப்பியர் அதற்குச் சிறப்பு இலக்கண விதி கூறினார். 'இல்லை என்ற சொல்லை இல்லை ஆக்குவோம்' என்பது கவிதை. அம் மரபு தொல்காப்பியர் காலத்திலும் இருந்திருக்கிறது. நுகர்வோர் ஒருவர் கடை வியாபாரியிடம் குறிப்பிட்ட ஒருபொருள் 'உண்டோ' என விசாரிக்க, அப்பொருள் இல்லையெனின், அதனோடு தொடர்புடையதும், அதற்குப் பதிலாகப் பயன்படும் இன்னொரு பொருள் உண்டு எனக் கடைக்காரர் பதில் அளிப்பதும்' ஆகிய மரபையும் குறித்துத் (கிளவியாக்கம்:35) தொல்காப்பியர் இலக்கணம் வரைந்துள்ளார்.

தொல்காப்பியர், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகைச் சொற்களைக் குறிப்பிடுவர். செந்தமிழ் நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் பேசியமொழி செந்தமிழ் என்றார். ஆனால் அவர் செந்தமிழ் நாட்டின் எல்லைகள் பற்றிக் கூறவில்லை. ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களும், பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்லும் திரிசொல் என்றார். பொங்கர்நாடு, ஒளிநாடு முதலிய பன்னிரு நாடுகளில் வழங்கிய தமிழ்ச் சொற்களைத் திசைச்சொற்கள் என உரைகாரர் கூறுவர்.

வடசொல் என்பது வடமொழிக்குரிய சிறப்பு எழுத்துக்கள் இல்லாமலே தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவான எழுத்துக்களால் தற்சமம், தற்பவம் என ஆக்கம் பெற்று வழங்குவதாகும். அடுத்து, வடசொற்களைத் தமிழில் வழங்கும்போது வடமொழிக்குரிய எழுத்துக்களைத் தவிர்த்து, அவற்றுக்கு ஒலிப்பொருத்தமுடைய தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டுமென்றார் (தொல்.401). எ-டு: கண்டம், கங்கை, கடம் என்ற மூன்று வடமொழிச் சொற்களதும், முதல் எழுத்துக்கள் வடமொழிக்கே சிறப்பாக உரிய க வர்க்க (kha, ga, gha) எழுத்துக்களால் ஆனவை. ஆனால் தொல்காப்பியர் வடமொழிச் சிறப்பு எழுத்துக்கள் 12 க்குப் பதிலாக அவ்வொலிகளுக்கு நிகரான தமிழ் எழுத்தைப் பயன்படுத்துமாறு குறிப்பிடுவர்.

முதற் சங்க, இடைச் சங்க காலங்களிலே தமிழ் மொழியானது, தனித்தமிழ் வழக்கு உடையதாக இருந்திருக்க வேண்டும். நாகரிக வளர்ச்சியுடைய மக்கள் தன்னாட்டு எல்லைக்கு உட்பட்டவர்களாக வாழ்தல் இல்லை. அவர்கள் நாகரிக மக்கள் பலருடன் தொடர்புகொள்ளுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் களது வாழ்க்கையின் தேவையாகிறது. பண்டை நாள் முதல் தனித்தமிழ்ச் சொற்களோடு நிலைபெற்றிருந்த தமிழ்மொழியிலே திசைச் சொற்களும் வடசொற்களும் காலப்போக்கில் வந்து வழங்குதல் காலத்தின் தேவை யாயிற்று. தமிழ்மொழியில் ஏற்பட்ட மொழிக் கலப்பினை நன்கறிந்த தொல்காப்பியர் தமிழில் வழங்கும் சொற்களை நான்கு வகையாக வகுத்து இலக்கணம் கூற வேண்டிய தேவையை உணர்ந்திருந்தார் எனலாம்.

பண்டைத் தமிழ் மக்களின் பன்முகப்பட்ட வாழ்க்கை முறைகளைச் சித்திரிக்கும் செய்யுட்கள் பாடப்பட்டுள்ள பொருள் மரபு, செய்யுள் மரபு, மற்றும் தமிழர் பண் பாட்டு மரபுகள் என்பனவற்றைப் பொருளதிகாரம் தெளிவாகக் கூறுகின்றது. தொல்காப்பியர் மக்களது வாழ்க்கை முறையைக் காதல் > திருமணம் > குடும்ப வாழ்க்கை > பொருளீட்டல் எனப் பல்வேறு வாழ்வியல் நிலைகளாக வகுத்துக் கூறுவர். சங்கப் புலவர் மானுட அக ஒழுக்கங்களைப் பாடுவதற்குப் இயற்கைச் சூழல் களைக் களமாகக் கொண்டனர். காதல் வயப்பட்ட தலைவன், தலைவி, அவர்களுக்குத் துணையாகும் தோழன், தோழி, அவர்களை நெறிப்படுத்தும் செவிலித் தாய், நற்றாய், அறவோர், அந்தணர் முதலியோரைத் துணைப் பாத்திரங்களாகக் கொண்டு பாடப்பட்ட அகத் திணைச் செய்யுட்களுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். முதல், கரு, உரி என்ற மூன்றையும் கொண்ட வாய்ப்பாட்டின் அடிப்படையிற் பாடப்பட்டி ருப்பதைத் தொல்காப்பியர் உணர்ந்து, பழந்தமிழ் இலக்கிய வழியாகவும், முந்து நூல் இலக்கண வாயிலாகவும் தான றிந்த விடயங்களைத் தொகுத்து அகத்திணை இலக்க ணத்தை வகுத்துள்ளார். பொருளதிகாரத்திற் பண்டைத் தமிழரின் நாடகக்லை, மெய்பாடுகள், இலக்கிய உவமை, உள்ளுறை, இறைச்சிப் பொருள், மற்றும் செய்யுள் இயற் றும் யாப்பிலக்கணம், நாட்டுப்புற இலக்கிய வகைகள் என்பன பற்றியும் விரிவாக இலக்கணம் கூறியுள்ளார். பொருளதிகாரத்தின் சிறப்பை பேராசிரியர் மு. வரதராசனார் (1996: 63-64) வருமாறு குறிப்பிடுவது ஈண்டு நோக்கத் தக்கது: ‘ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழிலக்கியம் பற்றி இந்த அளவிற்கு ஆராய்ந்து எழுதியுள்ளது போற்றத் தக்கதாக உள்ளது. மேலைநாட்டார் இலக்கிய ஆராய்ச்சி க்கு அரிஸ்டாட்டிலின் நூலை அடிப்படையாகவும் தொடக்க மாகவும் கொண்டு பயன்பெறுவது போல், தமிழறிஞர் தொல்காப்பியத்தின் இந்த மூன்றாம் பகுதியை ஆராய்ந்து பயன் பெறுகிறார்கள்’.

தமிழர் தம் பழம்பெருமையையும், தமிழ்மொழிச் சிறப் பையும் தன்னகத்தே பதிவுசெய்து, தமிழரின் வரலாற்றுத் தொன்மையை நிலைநாட்டும் முழுமுதல் ஆவண நூலாகத் தொல்காப்பியம் விளங்குவதை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். உலகின் பல நாடுகளிலுள்ள அறிஞராலே தொல்காப்பியத்தின் தொன்மையும் பெருமையும் உணரப் பட்டுள்ளது. தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகளும் விரி வடைந்த நிலையில் ‘அனைத்துலகத் தொல்காப்பியம் மன்றம்’ தோற்றம் பெற்றுள்ளமை ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

பரிசுப் பொருட்களை அனுப்ப www.ssyarl.com என்னும் இணையதளத்தில் பதிவு செய்வதோடு பணத்தினையும் அதில் செலுத்திக் கொள்ளலாம். இது ஒரு Online Service




உங்கள் நிகழ்வுகளுக்கு பூங்கொத்துக்கள், கேக், சாக்லேட், பழங்கள், விளையாட்டு பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள் மற்றும் பல பரிசு பொருட்களை அனுப்ப நாடுங்கள்
1600க்கும் மேற்பட்ட பொருட்களை இலங்கையில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், வன்னி,
முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் பல இடங்களுக்கு 48 மணித்தியாலயத்துக்குள்
Home Delivery செய்கிறோம்.

www.ssyarl.com | TP & Viber: 647-863-6792 | Facebook: ssyarl

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பழந்தமிழ் இலக்கியம் போற்றும் குடும்ப விழுமியங்கள்

## கவிஞர். வி. கந்தவனம்

உலகெங்கிலும் குடும்ப விழுமியங்கள் வீழ்ச்சியடைந்து வரும் இக்காலத்தில், தமிழர்தம் பாரம்பரிய குடும்ப ஒழுக்கமுறைகளை அறியாதவருக்குத் தெரிய வைப்பதையும் மறந்தவருக்கு நினைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை. குடும்பம் என்பது இல் வாழ்க்கைக்குரியதென்றும் விழுமியம் என்பது சிறப்பான பயன்களைத் தரும் பண்பாட்டு ஒழுக்க முறை என்பதையும் கொண்டு இக்கட்டுரை வரையப்படுகிறது. விழுமியத்தின் சீர்மைகள் பலவாகும் என்பதனைக் இக்கட்டுரையின் முடிவில் வாசகர் உணர்வர்.

1. அன்புடைமை: குடும்பச் சிறப்புகளில் முதன்மையானது கணவனும் மனைவியும் ஒருவர்மீது ஒருவர் அன்புடையவராய் இருத்தல். அன்புடைமைக்கு அடையாளம் இருவரும் இணைபிரியாது வாழ்தல். இதனை அகவாழ்வு பேசும் எல்லா நூல்களும் மிகவும் வலி யுறுத்துவதைக் காண்கிறோம். குறுந்தொகையில் செவிலித்தாய் தலைவனும் தலைவியும் பிரிவின்றி ஒன்றாக வாழ் கின்றனர் என்று நற்றாயிடம் கூறுவதாக வரும் பாடல் இது:

கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி எருத்தின் தண்சிதர் உறைப்பப்
புதல்நீர் வாரும் பூநாறு புறவில்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.(1)

தலைவன் தலைவியைப் பிரியாது உறைகின்றான். எச்செயல் குறித்தும் பிரிந்து செல்வதில்லை. தற்செயலாக அரச பணி காரணமாக வெளியூர் செலினும் விரைவாகவே மீண்டு விடுவான் என்ற செய்தியை இப்பாடலின் பிற்பகுதி தெரிவிக்கின்றது.

நற்றிணையில் தலைவியே தரும் தகவல் இது:
நின்ற சொல்லர் நீடு தோன்(று) இனியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே.(2)

தோழீ! நம் காதலர் நின்று நிலைக்கும் வாய்மையுடையவர். நெடிதாக நினைந்து இன்புறத்தக்க இனிய பண்புகளை உடையவர். என்றைக்குமே என் தோள்களைப் பிரிவதை அறியாதவர் என்று பெருமையாகவே கூறும் தலைவியின் கூற்று இல்லற வாழ்க்கையின் சிறப்பு எப்பொழுதும் கணவனுடன் இணைபிரியாது இருத்தலே என்ற மரபு வழிவந்த எண்ணக் கருத்தைப் பிரதிபலிக்கின்றது.

**2. அறஞ் செய்தல்:** இல்லற வாழ்க்கையின் இன்றியமையாத நோக்கம் அறஞ் செய்தல். இல்லறம் என்ற சொல்லில் அறமும் கலந்திருப்பதைக் கவனித்தல் வேண்டும். அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை (3) என்ற வள்ளுவர் பெருமான் வாக்கு இல்வாழ்க்கையின் குறிக்கோளை நன்கு வலியுறுத்துகின்றது. துறந்தவர்க்கும் வறியவர்க்கும் இறந்தவர்க்கும் இல் வாழ்க்கை நடத்துபவர் துணையாக இருத்தல்வேண்டும். இறந்தவர்க்குத் துணை செய்தலாவது அவர்களுடைய பிள்ளைகள் மற்றும் அவர்களால் நன்மை பெற்றவர்களுக்கு உதவுதல்.

**3. பொருள் ஈட்டல்:** அறஞ் செய்வதற்குப் பொருள் வேண்டும். பொருளைத் தேடுதல் தலைவனின் கடமையெனக் கருதப்பட்டது. "ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லென' (4) பொருள் ஈட்டுதற்குரிய செயல்களிலே தலைவன் ஈடுபடுவான். அதாவது தொழில் ஒன்றை மேற்கொண்டு இல்லறத்துக்கு வேண்டிய வருவாய்க்கு வழிவகுப்பவன் கணவன். வருவாய்க்குத் தக்கவாறு குடும்பத்தை நடத்தும் பொறுப்பு மனைவிக்குரியதாக இருந்தது. மனைவி தொழில் பார்க்க வேண்டும் என்ற நிலை போற்றப்படவில்லை. சங்க இலக்கிய முறையிற் சொன்னால் மக்கள் வாழ்க்கை அக்காலத்தில் அக வாழ்க்கை புற வாழ்க்கையென இருவகைப்பட்டிருந்தது. அக வாழ்க்கைக்கு மனைவியும் புற வாழ்க்கைக்குக் கணவனும் உரியவர்களாகக் கருதப்பட்டனர்.

புறத்தே சென்று பொருள் தேடிவந்த கணவன், கொண்டுவந்த செல்வத்தைத் தன் மனைவியிடம் கொடுத்துக் கூறிய கூற்று ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. குடும்ப வாழ்க்கையின் விழுமியத்துக்குக் கிடைத்த நன்கொடைபோல் அமைந்த அப்பாடல் இது:

நின் நயந்து உறைந்தார்க்கும் நீ நயந்து
உறைந்தார்க்கும்
பன்மாண் கற்பின் நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேற் குமணன் நல்கிய வளனே.(5)

இந்தக் குடும்பத் தலைவர் ஒரு புலவர். பெருஞ்சித்திரனார் என்று பெயர். அவர் வள்ளல் குமணன் அளித்த பரிசுப் பொருள்களைத் தன் மனைவியிடம் கொடுத்து, "என் மனைக்கு உரியவளே! தொங்கும் பழங்களையுடைய பலா மரங்கள் செறிந்த முதிர மலையின் தலைவனாகிய சிறந்த வேற்படை தாங்கிய குமண வள்ளல் தந்த இச்செல்வத்தை, நின்னை விரும்பி வாழ்பவருக்கும் நீ விரும்பிப் பழகுகின்றவருக்கும் கற்பிற் சிறந்த நின்றன் உறவினருக்கும் என எல்லா வகையான சுற்றத்தவருக்கும் பசி தீருமாறு கொடுப்பாயாக! நின்னுடைய அன்பு குறித்து நினக்கு உதவிசெய்தவருக்கும் மற்றும் இன்னார் இனியார் என்று நோக்காது, என்னைக் கேட்க வேண்டும் என்றும் கருதாது, பிற்காலத்துக்கு உதவும் என்று சேர்த்து வைக்கவும் விரும்பாது நீ எல்லோருக்கும் இதனைக் கொடுத்து உதவுவாயாக!' என்று கூறுகின்றார்.

இந்தப் பாடல் உணர்த்தும் குடும்ப விழுமியங்களைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்:

குடும்பம் என்பது கருத்து ஒருமித்து வாழ்தல்.



GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham P.Eng
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Industrial Alliance RBC Royal Bank Assumption Life Desjardins Manulife Foresters



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் தாங்கிச்
சமத்துவ உரிமையுடன் இல்லறத்தை நடத்துதல்.
ஈதலுக்கே பொருள் ஈட்டுதல் வேண்டும்.
கொடுத்து எஞ்சியதே துய்த்தலுக்குரியது.
அறஞ் செய்வதற்கே இல்வாழ்க்கை.
அறஞ் செய்வதால் வரும் இன்பமே இன்பம்.
சுற்றத்தவர் பசியால் வாடுகையில் செல்வத்தை
வீட்டில் பதுக்கி வைத்தலாகாது.
பொருளைத் தேடுவது கணவனின் கடன்.
அதனைத் தக்கவாறு செலவு செய்தலும் வீட்டு
அலுவல்களை நிருவகித்தலும் மனைவியின்
பொறுப்பு.

4. விருந்தோம்பல்: வீட்டுக்கு வந்தவரை மலர்ந்த முகத்துடன் வரவேற்று இருக்கை அளித்து இன்சொற் பேசி விருந்தளித்து மகிழ்வித்தல் தமிழர் கண்ட இல்லற விழுமியங்களிற் சிறப்பாகப் போற்றப்படுவதொன்று.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு
என்பது வள்ளுவர் பெருமான் வாக்கு.(6)

5. இன்பம் துய்த்தல்: அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களில் மூன்றாவதாகப் பேசப்படுவது இன்பம். இல்லறம் முழுவதும் இழையோடு வது இன்பம் துய்த்தலுக்குரிய செயற்பாடுகள். உலகத்திலே பிறக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் இன்பம் அனுபவிப்பதையே இலக்காகக் கொண்டுள்ளனர். இன்பங் கள் யாவற்றிலும் சிறந்தது அறத்தால் வரும் இன்பம் எனத் தமிழர் கண்டனர். அறம் செய்வதற்குத் தகுந்த வாழ்க்கை இல்லற வாழ்க்கை என்றும் கருதினர்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது
என்றார் வள்ளுவர் பெருமான்.(7)

அவர் குறிப்பிடும் பயனுக்குள் இந்த இன்பமும் அடங் கும். அதாவது அன்பை வளர்த்து, அறத்தைப் புரிந்து இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பது பொருள். எனவே குடும்ப இன்பம் என்பதைப் பண்டைய தமிழர் வெறும் காம உணர்ச்சி இன்பமாகக் கருதவில்லை என்பது புலப்படும். அது அன்பாகிய மனைவியும் அறமாகிய



கணவனும் கலந்து அனுபவிக்கும் நல்வினைப் பயன் கரு திய இன்பம். இதுவே இல்லற இன்பத்துக்கான விளக்கமா கும்.

6. சீரிய ஒழுக்கம்: அன்பாகிய மனைவி தன்னையும் காத்துத் தற்கொண்டானையும் பேணிச் சொற்காத்துச் சோர்விலாது குடும்பத்தைக் கவனிப்பவள். அவள் கற்பெனும் திண்மை மிகுந்தவள். கற்பு எனப்படுவது "மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி' என்று இளம்பூரணரும்(8) "தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதொரு மேற்கோள்' என்று நச்சினார்க்கினியரும்(9) "சொற்றிறம்பாமை' என்று அவ்வையாரும்(10) விளக் குவர்.

கற்பொழுக்கம் குடும்ப விழுமியங்களுட் கண்ணெனப் போற்றப்பட்டது. அதனை "தீதிலா வடமீனின் திறத்து' (11) கண்ணகி பாத்திரத்தால் இளங்கோ அடிகள் சிலப்பதி காரத்தில் சிறப்புறக் காட்டிப்போந்தார். கற்பின் திறத்தைச் சிலப்பதிகாரம் காட்டியதுபோல் வேறெறுக் காப்பியமும் வலியுறுத்தவில்லை.

பொற்பு வழுதியுந்தன் பூவையரும் மாளிகையும்
விற்பொலியும் சேனையும்மா வேழமும் - கற்புண்ணத்
தீத்தரு வெங்கூடல் தெய்வக் கடவுளரும்
மாத்துவத் தான்மறைந்தார் மற்று

என வரும் பாடலில்(12) கற்பானது மதுரைமா நகரை உண்ண(எரிக்க) தெய்வங்களும் அதனைத் தடுக்கவொண் ணாது வெளியேறின என்று கூறிக் கற்புக்குப் பேராற்றல் உண்டு என்ற கருத்தை மிக அழுத்தமாவே பதிவு செய்கிறார் இளங்கோ அடிகள்.

தொடரும்...




உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்

போதுமான பாதுகாப்பே குடும்பத்தில் நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா? இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

Super Visa 100% Refund if Visa Denied

Call me for all kind of Life insurance need

திலீபன் இராமநாதன் BBM (Hons)
ஆயுள் காப்புறுதி முகவர்

Life100 INSURANCE & INVESTMENTS INC.

Thileepan Ramanathan
Insurance Advisor
Tel:647 381 8445

Life 100 Insurance & Investment Inc.
10 Milner Business Ct, Suite 208,
Scarborough, ON, M1B 3C6

Tel:647 381 8445
Off:4163212500
Fax: 416 646 9052
Email:itsthil@yahoo.ca
Web.life100.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர்கள் மத்தியில் வீர நடைபோட்டு வலம் வரும் தமிழன் வழிகாட்டியின் பிரதம ஆசிரியரும் ஆதவன் வெளியீட்டின் உரிமையாளருமான செந்தி செல்லையா அவர்கள் கனடிய **NDP** கட்சியின் பாராளுமன்ற வேட்பாளராக மார்க்கம் - தோன்கில் தொகுதியில் போட்டியிடுகிறார். எனவே இத்தொகுதிக்குள் வாழும் தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இவருக்கே வாக்களிப்போம்.

யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், பிரபல கிரிக்கெட் வீரருமான **Rev. M.K.** சாந்தி குமார் அவர்கள் கனடிய **NDP** கட்சியின் பாராளுமன்ற வேட்பாளராக ரூஜ்பார்க் தொகுதியில் போட்டியிடுகின்றார். எனவே உலக தமிழர்களின் குரலாக இத்தொகுதியில் வாழும் அனைத்து தமிழர்களும் ஒன்று திரண்டு வேற்றுமையின்றி வாக்களிக்களியுங்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிர் செய்திகள்

# அனைத்துலகத் தொல்காப்பியம் மன்றம்

தொல்காப்பியம் தமிழில் கிடைக்கும் பழந்தமிழ் இலக்கண நூலாகும். பண்டைத் தமிழ் மொழி, இலக்கியம், வாழ்க்கைமுறை, அரசியல், பண்பாடு முதலான பல்வேறு விடயங்களை விளக்கி இலக்கணம் கூறும் முதல் நூல் தொல்காப்பியமே. இந்நூல் தமிழினத்தின் தொன்மை அடையாளத்தை ஆவணப்படுத்தும் பெரும் செல்வம். அதனை அமைப்பு ரீதியாக உலகமயப்படுத்தி அதனூடாகத் தொல்காப்பியக் கல்வியைப் பரப்புதல், தமிழரின் பண்பாட்டுத் தொன்மையை உலகறியச் செய்தல் ஆகிய குறிக்கோள்களுடன் ‘அனைத் துலகத் தொல்காப்பியம் மன்றத்தின் தொடக்க விழா பாரிஸ் மாநகரில் 27.09.2015இல் நடைபெற்றது.



உலகளாவிய நிலையில் அறிஞர்கள் பலர் அதில் பங்கு பற்றினர். கனடாவில் இருந்து தளிர் சஞ்சிகையின் முகாமைத்துவ ஆசிரியர் (Managing Editor) பேராசிரியர் இ.பாலசுந்தரம் பங்குபற்றினார். தொல்காப்பிய மன்ற மூதறிஞர் குழுவிற் பேராசிரியர் பொற்கோ, பேராசிரியர் அகிலேசனார். பேராசிரியர் இ. பாலசுந்தரம், பேராசிரியர் சிவமணி, ஆகியோருடன் இலங்கை, சிங்கப்பூர், இலண்டன், தமிழ்நாடு, மலேசியா ஆகிய இடங்களிலுருந்தும் பல அறிஞர் இடம்பெறுகின்றனர்.

அனைத்துலகத் தொல்காப்பியம் மன்றத்தின் கனடாக் கிளை அங்குரார்ப்பணம் நவம்பர் 07 ஆந்திகதி ஸ்காபரோவில் இடம் பெறவுள்ளது. இதில் இணைந்து கொள்ள விரும்புவோர் பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்களுடன் (416 267 5255 அல்லது balasundarame@yahoo.com) ஆகிய இணைப்புக்களிலே தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


# இயேசு மாறாதவர் ஊழியங்கள் கிறிஸ்து தரிசன திருச்சபை

3500 மெக்னிக்கல் அவென்யு யூனிட் 8ஸ்கார்போரோ
(மார்க்கம் / மெக்னிக்கல் சந்திப்பு) M 1 V 4 C 7

**எமது ஆராதனை நேரங்கள்:**

பிரதி ஞாயிறு காலை 9 மணி - ஓய்வுநாள் ஆராதனை
பிரதி சனிக்கிழமை மாலை 6:30 மணிக்கு - வாலிபர்கள் ஜெபக் கூட்டம்
பிரதி திங்கள், புதன், வெள்ளி
காலை 11 மணிமுதல் மாலை 9 மணிவரை - மருத்துவமனை ஊழியம்
பிரதி வியாழன் மாலை 6:30 மணிக்கு - கல சபை வீட்டுக்கூட்டம்
பிரதி 2வது சனிக்கிழமை - உபவாச ஜெபம்
காலை 11 மணிமுதல் பிரதி கடைசி வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் - முழு இரவு ஜெபம்



வியாதி, துன்பம், கடன் தொல்லை, குடும்ப பிரச்சினைகளால் நெருக்கப்பட்டுள்ளீர்களா?
உங்கள் இளம் பிள்ளைகளால் துன்பமா? திருமண தடைகளா?
இயேசு ஒருவர்தான் உங்களை ஆசீர்வதிக்க வல்லவர்!

வாருங்கள்! நாம் ஒருமனப்பட்டு இயேசுவை நோக்கி ஜெபிப்போம்!!
இயேசு உங்களை விடுவித்து சமாதானம் அருளுவார்!!!

மேலதிக ஜெப தேவைகளுக்கு அழையுங்கள் : (647) 766-7770, (647) 273-3632, (416) 890-1307




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜ பார்வை...

# தமிழ் வேட்ப்பாளர்களுக்கே தமிழர்கள் வாக்களித்து வெற்றி பெறச்செய்வோம்








கனடாவில் ஒக்டோபர் மாதம் 19ம் திகதி நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலில் முதன் முறையாக 6 தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 2011ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் என்.டி.பி.கட்சியின் சார்பில் றூஜ் றிவர் தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி ஈட்டி கனடாவின் முதலாவது தமிழ் எம்.பி. என்ற பெருமையை நிலை நாட்டியவர் செல்வி றாதிகா சிற்சபைஈசன். கடந்த பொதுத் தேர்தலில் றூஜ்றிவர் தொகுதியில் போட்டியிட்ட இவர் இம்முறை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்காபுறோ வடக்கு தொகுதியில் என்.டி.பி. வேட்பாள ராகப் போட்டியிடுகின்றார். தற்போது றூஜ் றிவர் தொகுதியில் என்.டி.பி.கட்சி வேட்பாளராக சிறந்த சமூக சேவையாளரும், பிரபல கிரிக்கெட் விளையாட்டு வீரருமான திரு.காந்தரட்னம் சாந்தகுமாரும், லிபரல் கட்சி வேட்பாளராக சட்டத்தரணியுமான திரு.ஹரி ஆனந்த சங்கரியும் போட்டியிடுகின்றார்கள். ஸ்காபுறோ தென்மேற்கு தொகுதியில் கொன்சவேற்றிவ் கட்சியின் சார்பில் திரு.றொஷான் நல்லரெத்தினமும், என்.டி.பி.கட்சியின் சார்பில் தமிழன்வழிகாட்டியும், தமிழ் மக்களின் நல் மதிப்பை வென்ற திரு. செந்தி செல்லையா தோர்ண்கில் தொகுதியிலும் போட்டியிடுகின்றார்கள். மற்றும் பிரம்டன் மேற்குத் தொகுதியில் "கிறீன் பாட்டி" வேட்ப்பாளராக போட்டியிடும் மற்றுமொரு தமிழ் வேட்பாளர் கார்த்திகா கோபி நாத் இவர் யோர்க் பல்கலைக் கழகத்தில் பொதுத்துறை நிர்வாகத்தில் முதுமானி பட்டம் பெற்றவர். தற்போது நீதிமன்ற அரச ஊழியராகப் பணியாற்றி வருகிறார். அத்து டன் பொது நலப்பணிகளிலும் அதிக ஈடுபாடு கொண்டவராவார். எனவே அந்தந்தத் தொகுதியில் வாழும் தமிழ் வாக்காளர்கள் கட்சி பேதமின்றி தமிழ் வேட்பாளர்களுக்கே தமது வாக்குகளை வழங்கி வெற்றி ஈட்டச் செய்ய வேண்டியது தலையாய பணியாகும். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கில் நம் மனைவர்க்கும் தாழ்வு' என்ற பழமொழியை அர்த்த புஷ்டியாக யாவரும் கடைப்பிடித்து வந்தால் கனடா விலாவது தமிழனது ஒற்றுமையில் விடிவு ஏற்படும்.

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
MARANAM.COM
HEAVEN CARES
ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY
www.maranam.com, E-Mail: info@maranam.com

Call: Vilosan Sivatharman B.Eng,
Funeral Director
416-431-3600 Ext:1

Call: Christeen Seevaratnam
Funeral Counsellor
416-431-3600 Ext:2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய ஸ்காபுறோ வடக்குத் தொகுதியில் பல்லின மக்கள் பலத்த ஆதரவு!

**என்.டி.பி. வேட்பாளர் றாதிகா சிற்சபை ஈசன் அவர்கள் 'தளிர்' சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணல். நேர் கண்டவர் 'வீரகேசரி மூர்த்தி'**

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்காபுறோ றூஜ் றிவர் தொகுதியில் என்.டி.பி.கட்சியின் சார்பில் போட்டியிட்டு அதிகளவு வாக்குகளை பெற்று கனடாவின் முதலாவது தமிழ் எம்.பி.யாக வெற்றி வாகை சூடி தமிழினத்துக்கே பெருமை தேடித் தந்தவர் செல்வி றாதிகா சிற்சபைஈசன். அவரது தொகுதியில் இவ் வருடம் மாற்றம் செய்யப்பட்டு ஸ்காபுறோ றூஜ் றிவர் தொகுதி என்றும் ஸ்காபுறோ வடக்கு தொகுதி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் புதிய தொகுதியான ஸ்காபுறோ வடக்கில் போட்டியிடும் அவருக்கான ஆதரவு எவ்வாறு இருக்கின்றது என்பதனை அறியும் வகையில் 'தளிர்' சஞ்சிகையின் சார்பில் அவரை பேட்டி கண்டேன்.

ஸ்காபுறோ வடக்கு தொகுதியில் சீன இனத்தவர்களே அதிகளவில் இருப்பதாகக் கருதுகின்றேன். அப்படியானால் அத்தொகுதியில் உங்களுக்கான ஆதரவு எப்படி இருக்கின்றது? என்ற கேள்வியுடன் பேட்டியை ஆரம்பித்தேன்.

சீன இனத்தவர்கள் மாத்திரமல்ல அத்தொகுதியில் தமிழர்கள், பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள், மேற்கிந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், தென்னமெரிக்கர்கள் போன்ற பல்லின மக்கள் வாழுகின்றனர். மொத்தம் பத்தாயிரம் மக்கள் வாழ்கின்றனர். அவர்களுள் மூன்றில் இரண்டு வீதத்தினர் வாக்களிக்கத் தகுதி வாய்ந்தவர்கள். நான் ஏற்கனவே அவர்கள் மத்தியில் தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றேன். அங்கு வாழும் பல்லின மக்களும் எனக்கு பலத்த ஆதரவு அளிக்க முன்வந்துள்ளனர் என புன்னகையுடனும், பூரண நம்பிக்கையுடனும் பதில் அளித்தார் செல்வி றாதிகா.

இளவயதிலேயே கனடாவுக்கு வருகை தந்து இங்கேயே கல்வி கற்று பல்கலைக் கழகப் பட்டதாரியாகியதோடு தமிழ், ஆங்கிலம், பிரெஞ் ஆகிய மூன்று மொழிகளையும் சரளமாகப் பேசும் ஆற்றலும், செயல் திறனும் மிக்கவர் செல்வி றாதிகா. அதன் காரணமாக மிக்க ஆளுமை உடையவராகத் திகழ்ந்து வரும் அவரை தோற்கடிக்கச் செய்யும் வகையிலேயே கொன்சவேற்றிவ் அரசாங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தொகுதியான றூஜ் றிவர் தொகுதியை இரண்டாகப் பிரித்தது என்ற தகவல் பரவலாகப் பேசப்பட்டது. அது உண்மை தானா? என அவரிடம் கேட்டேன்

'அது உண்மை தான். எனது செல்வாக்கு மாத்திரமல்ல எமது கட்சியான என்.டி.பி.யின் செல்வாக்கும் தற்போது பெருமளவு அதிகரித்துள்ளது. அதனால் எமது கட்சி வேட்பாளர்களை தோற்கடிப்பது முடியாத காரியம் என்பதனை உணர்ந்தே தேர்தல் தொகுதியை பிரிக்கும் தந்திரம் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் எம்மை தோற்கடிக்க முடியாது' என மிக உறுதியுடன் கூறினார்.



உங்கள் உறுதியான நம்பிக்கையை நான் பாராட்டுகின்றேன். அதேவேளையில் இத்தேர்தலிலும் நீங்கள் வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

'உங்களது வாழ்த்துக்கு நன்றி. எமது தொகுதியில் வாழும் மக்கள் என்னை தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்தால் தமக்கு நன்மையே நடக்கும் என எதிர் பார்க்கின்றனர். அதே போன்று எமது என்.டி.பி. கட்சியும் மக்களுக்கு நல்லதையே செய்ய வேண்டுமென விரும்புகின்றது. நான் றூஜ் றிவர் தொகுதி எம்.பி.யாகத் தெரிவு செய்யப்பட்ட போது அத் தொகுதியில் வாழும் 140 ஆயிரம் மக்கள் நீண்ட காலமாக ஆதரவு ஏதுமில்லாது ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவதை உணர்ந்தேன். ஆனால் நான் எம்.பி.யாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் மக்களுக்கு அதிகளவு உதவிகளை செய்துள்ளேன். அவர்களது உறவினர்களின் குடிவரவு, நாடு கடத்தல் சம்பந்தமான பிரச்சினைகளில் தலையிட்டு உதவிகளை செய்துள்ளேன். மக்களை துன்புறுத்துவோரை நாம் சும்மா விட்டு வைக்கக் கூடாது. மக்களுடன் நாம் நேர்மையுடன் பழக வேண்டும், அவர்களுக்கான பிரச்சினைகளை தீர்த்து வைக்க உதவ வேண்டும் என்பது எனது கொள்கை' என்றார்.

உங்கள் தொகுதியைச் சேர்ந்த சிலர் நீங்கள் தமக்கு எதுவித உதவியையும் செய்யவில்லையென குறைப்பட்டுக் கொண்டதாக நான் அறிந்தேன். அதுபற்றி உங்கள் கருத்து என்ன?




BMO Bank of Montreal
BMO Bank of Montreal Greator Toronto Area

Great options for all your mortgage needs...
உங்கள் சகலவிதமான மோர்ட்கேஜ் தெரிவுகளுக்கும்...

- Lowest interest rates & best pre-payment options
- Pre - Approvals
- Renewals & Refinance
- Home equity Line of Credit



Thanusha Rajadurai
Mortgage Specialist
A part of BMO Financial group
Cell: 416-312-5047
Tel: 905-301-5160 Fax: 905-567-4799
Email: thanusharajadurai@bmo.com | web: bmo.com/ms/thanusharajadurai




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உண்மை தான். சிலர் என்னிடம் வந்து தமது வீட்டுக்கு போதுமான மின்சார வசதி இல்லை. வீட்டுக்கு அருகேயுள்ள பெரிய மரங்களினால் ஆபத்து ஏற்படும் அபாயம் இருக்கிறது. அதனை தறிப்பதற்கு உதவி செய்ய முடியுமா? என்றெல்லாம் கேட்டார்கள். அவற்றை செய்வதற்கு நான் என்ன மாநகர சபை அங்கத்தவரா? அல்லது மாகாண எம்.பி.யா? மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள குடிவரவு பிரச்சினைகள், நாடு கடத்தல் பிரச்சினைகள் சம்பந்தமாக என்னிடம் வந்தால் அதற்கு நான் உதவி செய்ய முடியும்.

சுவிஸில் கணவரினால் துன்புறுத்தப்பட்ட ஒரு பெண்மணி பிள்ளைகளுடன் 'விசிற்றேர்ஸ் விசா' வில் இங்கு கனடாவுக்கு வந்தார். அவரது வழக்கை விசாரித்த குடிவரவு அதிகாரிகள் அவரது விண்ணப்பத்தை ஏற்க மறுத்து நாடு கடத்துவதற்கு உத்தர விட்டனர்.

அப்பெண்மணி என்னை அணுகி உதவி கேட்ட போது நான் அவருக்கு உதவி செய்து நாடு கடத்தும் உத்தரவை ரத்து செய்து அப்பெண்மணி இங்கே வாழ்வதற்கு உதவி செய்தேன். இதே போன்று மேலும் பலருக்கு உதவிகளை செய்துள்ளேன். உங்களிடம் குறை கூறியவர்களது எண்ணிக்கையினை விட நான் உதவி செய்தோரின் பெரிய பட்டியலே என்னிடம் இருக்கின்றது.

தற்போது நான் ஸ்காபுறோ வடக்கு தொகுதியில் போட்டி இட்டாலும் றூஜ் றிவர் தொகுதியில் எமது கட்சியின் சார்பில் திரு.காந்தரட்னம் சாந்திகுமார் போட்டியிடுகின்றார். அவரும் சிறந்த பொது நல சேவையாளர். எமக்கு ஆதரவு தரும் வாக்காளப் பெரு மக்களின் குறைகளை தீர்த்து வைப்பது எமது கட்டாயக் கடமையாகும். வாக்காளர்கள் எமக்கு வாக்களிப்பதோடு மாத்திரம் நின்று விடாது எமது தேர்தல் செலவுகளுக்கு நிதி உதவியும் செய்யலாம். கணிசமான தொகையினை வழங்குவோர் அதன் ஒரு பகுதியை வருமான வரி மூலம் திரும்பப் பெறலாம்.



தற்போது கொன்சவேற்றிவ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் 11.25 டொலர் அடிப்படை சம்பளம் சாதாரண குடும்பத்தினரின் செலவுக்குப் போதுமானதல்ல. அத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும். அப்போது தான் மக்கள் சந்தோஷமாக வாழ முடியும். அவர்களுக்கு சிறந்த வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நோக்கம்.

கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்வதனால் பிள்ளைகளை பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் விட்டுச் செல்ல வேண்டும். ஆனால் அதற்கான கட்டணம் அதிகமாக இருப்பதனால் அதை அவர்களால் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் மனைவிமார் வேலைக்கு செல்லாது வீட்டிலிருந்து பிள்ளைகளை பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்களது வருமானம் குறைந்து நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே பிள்ளை பராமரிப்பு நிலைய கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.'

பொது மக்களின் பிரதிநிதிகளான நாம் பொது மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தான் எமது தலையாய பணி என சிரித்துக் கொண்டே கூறினார் செல்வி றாதிகா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசை பெருநட்டம்

த.சிவபாலு எம். ஏ.

மனித வாழ்வின் அடிப்படை இன்பம். இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு என்று ஒரு கவிஞன் பாடினான். ஆம் 'இன்பம்' என்னும் பதம் பல்வேறுபட்ட பரந்த அடிப்படையைக் கொண்டது. மனிதனால் என்றும் விரும்பப்படுவது இன்பம். சிற்றின்பத்தில் திழைத்து மாண்டு ஒழிகிறாரே என்றார் ஒரு சித்தர். ஆசை அறுபது நாள் மோகம் முப்பதுநாள் என்றும் ஆசைக்கு எல்லையை வரையறுத்தனர்.

இன்பியல் துன்பியல் இரண்டுமே மனித இனத்தின் தவிர்க்கமுடியாத இரு துருவங்கள். வட துருவமும் தென் துருவமும் ஒன்றை ஒன்று கவர்ந்திழுப்பதுபோன்று ஆசை, துன்பம் இரண்டும் ஒன்றை ஒன்று பற்றுக்கோடா கக் கொண்டுள்ளன. இன்பம், துன்பம் இரண்டுக்கும் நடுவே மனிதன் உழன்று படுகின்றான். மனித இனத்தின் துன்பத்திற்குக் காரணம் என்ன என்று ஆய்ந்தறிய முற்பட்ட ஞானிகளில் கௌதம புத்தர், யேசு, காந்தி, குருநானக், மொகமட் போன்ற ஆன்மீக வழி நின்று தேடி யவர்களும், மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாவோசேதுங் போன்ற உலகியல் இன்பத்திற்கான வழிகளைக் கண்டறிய முற்பட்டோரும் மனித நலனில் அக்கறை கொண்டு விடைகாண, வழிகாண முற்பட்டவர்களே.

ஆன்மீக வழி நின்று சமநிலை, (நிர்வாண நிலை) பேரின்ப நிலையைக் காண முற்பட்டவர்கள் மனித இனத் தின் அழிவுக்கு, துன்பத்திற்கெல்லாம் காரணம் ஆசை என வரையறுத்துக் கூறியுள்ளனர். ஆசையை அறுத்தால் மனிதனுக்குக் கிட்டுவது பேரின்பமாகத்தான் இருக்கும். சிற்றின்பத்திற்கு அடிமைப்பட்டு துக்கசாகரத்தில் துயன்றுழன்று மேலும் மேலும் பழி, பாவம், சூது, வஞ்சனை என பாவ மூட்டைகளைக் கட்டிக் கொள்ளும் மனிதனால் மீட்சியே பெறமுடியாத துக்க சாகரத்தில் ஆழ்ந்து விடுகின்றான் என்கின்றனர்.

ஆனால், உலகியல் வாழ்வில் இன்பத்தோடு இருப் பதற்கும் ஆசைக்கு எல்லை போட்டுத்தான் வைத்துள் ளனர் பொதுவுடமைவாதிகளாக பொருள்நிலை வாதத்தை முன்வைத்த அரசியல் ஞானிகள். நாட்டின் பொருட்கள் அனைத்தும் நாட்டு மக்கள் அனைவருக்கும் உடமை யானது. செல்வந்தன், ஏழை என்ற பேதத்திற்கே இடம் இல்லை என்கின்றனர். பண்டைய தமிழனின் சமுதாய அமைப்பு இதன் அடிப்படையிலே அமைந்திருந்தது என்பதற்கு பல சான்றுகள் உள. உலகப் பொதுமறையாம் திருக்குறள் உலக நீதியை, பொது உடமையை வலியுறுத் துகின்றது. ஆண்டான், அடிமை சமுதாய முறையைவிட அனைவருக்கும் சமத்துவம் தருகின்றார் மூதறிஞர் தமிழ் பாட்டி ஔவை 'சாதியிரண் டொழிய வேறில்லை சாற்றுங்கால் நீதி வழுவா நெறிமுறையில்...' பகுத்துண்டு பல்லுயில் ஓம்பும் மாண்பு புலப்படுகின்றது. அதற்கு ஒருபடி மேலாக சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளீர் நன்றும் தீதும் பிறர் தர வாரா...' என்று உலகமக்களே ஒன்றுபடுங்கள் என்ற அறைகூவலை எதிரொலித்தவர். மக்களிடம் பேதமற்ற ஒரே உலகைக் கண்டவர். இத்தகைய தமிழ்ச் சமூகம் இன்று அல்லல்பட்டு துன்பத்தில் ஆழ்ந்ததற்கு போட்டி, பொறாமை, ஆசை என்பனதான் காரணம் என்பது வெளிப்படை. சைவத்தின் அடிப்படையிலோ அன்றிப் பண்டைய தமிழ்ச் சமூக அடிப்படையிலோ சாதிபேதம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. திருமந்திரத்தில் திருமூலர் இதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# To Buy or Sell...

**HomeLife/Galaxy Real Estate Ltd.**
Independently owned & operated
**880 Ellesmere road, Suite 204**
**Toronto, ON MIP 2W6**

HOMELIFE
HIGHER STANDARDS

*Call Ravi for information on homes available in area of your choice..*

**Friendly, Confidential & Professional Service**





## RAVI THARMALINGAM

Sales Representative

**Dir: 416-319-7507**
**Bus: 416-284-5555**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே.
- திருமந்திரம் 2014

எப்படியோ தமிழகத்தில் வந்து புகுந்துகொண்ட சாதிய மைப்பு பொருளாதார அடிப்படையைக் கொண்டதாகவே பிரிக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படை. சாதிகள் அனைத்தும் தொழில்சார் பகுப்பாகவே அமைந்துள்ளன. புத்தனின் தேடல் ஆசையை அகற்றுவது மட்டுமல்ல உலகி யல் துன்பநிலைக்கு ஆப்பு வைக்கவேண்டும் என்பதே! அபேத நிலையை ஏற்படுத்தவேண்டும், ஆண்டான் அடிமைச் சமுதாய நிலை நலிவடைந்து அனைவரும் சமம் என்ற நிலை உருவாக வேண்டும் எனப் போதித்தார். இது இந்துமதம் காட்டிய வழி, இந்துமதத்தின் கொள்கையும் நிலையும் அதுவே. சாதி அமைப்பு முறையினைக் கட்டிக் காத்ததற்கான காரணிகளான நிலவுடைமையும், ஆலயங் களும் இதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். 18ம் 19ம் 20ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஞானிகள் சாதிபேதத்தை அறவே மறுதலித்துள்ளனர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஷர், சங்கரர், பட்டினத்தார், வள்ளலார், வைகுந்தசாமிகள், நாராயணகுரு, அய்யன் காளி, மகாதமாபூலே, ரெட்டைமலை சீனிவாசன், அயோத்திதாசன், தந்தை பெரியார், அம்பேத்கர், சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலாநந்தர் போன்றவர்கள் சாதியத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள். இந்திய மண்ணின் சாபக்கேடாக அமைந்துள்ளது சாதிய அமைப்பு முறை. திருமூலர், மூவர் முதலிகள், மணிவாசகர் யாரா வது சாதியத்தை ஆதரித்துள்ளார்களா என்றால் இல்லை என்ற முடிவுக்கு வரலாம். இறைவன் விடை கொடுத் தாலும் பூசாரி விடை கொடான் என்பதுதான் இன் றைய நிலையும். சாதிய அமைப்பைத் தகர்த்தெறிந்து ஆலயங்களில் இறைவழிபாட்டை அனைவரும் சமமா கப் பின்பற்றும் வழிகள் உருவாக்கப்படவேண்டும். அத னைத் தான் கண்ணப்ப வரலாறும், நந்தனார் வரலாறும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. கள்ளங் கபடமற்ற இறை அன்பு வேண்டில் வேறொன்றும் வேண்டேன் என்னம் அடியவர்க்கு வேண்டியதை ஈவான் எம்பிரான். என்பதனைத்தானே கண்ணப்பனின் வழி எமக்குத் தத்துவ மாக்கித் தந்துள்ளனர். யாருக்கும் அருள் கொடுக்காது நந்தனக்கு அருள்பாலித்ததன் தத்துவந்தான் என்ன? 'கங்கைவார் சடைக்கலந்தாரக் காண்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் தெய்வம் அல்லோம்' என்பது எமக்கு எதனை உணர்த்துகின்றது?

மனிதனிடம் உள்ள முன்னேற்றமின்மை, இழப்பு, உதவியற்ற தன்மை, இயலாமை போன்ற உணர்வுகளின் வெளிப்பாடாக காணப்படும் மனக் கிளர்ச்சி அல்லது உணர்ச்சி வேகம் துன்பத்தின் பண்புகளாகக் காணப்படு கின்றன. துன்பத்தில் உள்ளவர்கள் அடிக்கடி பேசாது அமைதியாகவும், தங்கள் உற்சாகத்தை இழந்தவர்களா கவும், சக்தியை இழந்தவர்களாகவும், எதிலும் பின் வாங்குபவர்களாகவும் காணப்படுவர். இது இன்பத்தின் எதிர் மறையாகக் கொள்ளப்படுகின்றது. The philosopher Baruch Spinoza defined sadness as the "transfer of a person from a large perfection to a smaller one." எனக்குறிப்பிட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது.

சமய தத்துவங்கள் அனைத்துமே இறைவழிபாட்டையும் பேரின்பத்தை அடையும் வழியையும் காட்டி நிற்கின்றன. பிரம்மாவின் புதல்வர்களான சனகர், சனாதனர், சனத் குமாரர், சனானந்தர் ஆகிய நால்வரையும் இறைவழி பாட்டின் மூலம் பேரின்பத்தை அடைவதற்கு நாரதர் புத்தி புகட்டியதாக மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகின்றது. அவ்விதமே மிருகண்டு முனிவர் கடுந்தவம் இருந்தபோது தேவலோகத்து அரசனான இந்திரன் பயந்து திருமாலிடம் முறையிட்டான். மிருகண்டு முனிவரோ பக்தி நிறைந்தவர். அவர் தனக்குக் கிடைக்கும் சக்தியைத் தவறான வழியில் உபயோகிக்க மாட்டான் எனத் தெரிந்து கொண்டார், எனினும் அவரின் தவத்தின் நோக்கத்தை அறிவதற்காக மிருகண்டு முனிவரின் முன் தோன்றி அவரிடம் உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் தருகின்றேன் என்றார். அவரோ எனக்குக் கேட்பதற்கு என்ன இருக்கின்றது. நீங்கள் எனது மகனாகப் பிறக்கவேண்டும் எனவேண்டிக் கொண்டதன் பயனாக அவதாரம் எடுத்ததே மார்க்கண் டேயர். மார்க்கண்டேய புராணத்தில் பேரின்பப் பிரவாகத்தை அடையும் வழிகள் கூறப்பட்டுள்ளன. இறைவனின் அவதாரமான மார்க்கண்டேயன் உலகியல் இன்பத்தைத் துறந்து இறை அடியே சரணம் எனத் தொழுது

DENTAL OFFICE

DENTAL IMPLANT | ROOT CANAL | WISDOM TOOTH EXTRACTION
இப்பொழுது 2 இடங்களில்
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS (Glasg) DENTAL SURGEON
3150 Eglinton Ave. E, Unit 5 Markham & Eglinton | Tel. : 416.264.3232
3351 Markham Rd. #129, Markham, Markham & Steeles | Tel. : 416.609.2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# NEW SWARNAMAHAL JEWELLERY LTD.

# நியூ சுவர்ணமஹால் நகைமாளிகை

## எமது சேவைகள்:



- பழைய பவுண் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்.
- சகல நாடுகளுக்குமான துரித பணமாற்று சேவை.
- நகை அடைவு சேவை குறைந்த வட்டி வீதம்.
- தங்க நகை சேமிப்பு திட்டம் பதிவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் **$100 இலவசம்**
- திருத்த வேலைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும் (10 நிமிடத்தில்)
- தாலிக்கு பொன்னுருக்குதல்

## அன்பளிப்பு பொருட்கள்



**மார்க்கம் / நியு டெல்கி ரைவ்**

**40 New Delhi Dr. Unit 59, Markham ON L3S 0B5**

**Tel: 905-472-5557 Cel: 647-453-4005 (Baba)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தலை விதியையே மாற்றிக் கொண்டவன் என்பதும். என்றும் 16 வயதுடையவனாக வாழ்ந்து வருவதும் நாமனைவரும் அறிந்ததே!

இந்து மதத்தின் மிகமுக்கியமான ஒரு எண்ணக் கரு 'பேரின்பம்' அல்லது 'மோட்சம்' என்பதே. நாரத புராணத்தில் இவற்றைப் பற்றிய ஒளிக்கீறுகள் வீசப்பட் டுள்ளன. முதலாவது பேரின்பத்தை அடைவதற்கான வழி நல்ல நடத்தைகளே ஆகும். நல்ல நடத்தைகள் நம்பிக்கையை உயர்த்துகின்றது. நம்பிக்கை என்பது உண்மையான அறிவின் அத்திவாரமாக அமைகின்றது. உண்மை அறிவு ஒரு உயிருக்கும் மற்றய வாழும் உயிரினங்களுக்குமிடையே எந்தவித பாகுபாடு, வேறுபாடு, பேதம் இல்லை என்னும் தன்மையை அறிந்து கொள்ளவைக்கின்றது. பேரின்பம் என்பது இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையே வேறுபாடற்ற ஒருமையை உணர்த்தி இணைக்கின்றது. நாரத புராணம் எத்தகையவர்கள் பேரின்பத்தை அல்லது மோட் சத்தை அடையலாம் என்பதனை அழுத்திக் கூறுகின்றது. எவனொருவனும் வெறுப்பு, கோபம் என்பனவற்றை உணராதவனாக, மற்றய உலகியல் பொருட்கள், மக்களில் பாசம், பற்று போன்ற இன்ப உணர்வு அற்றநிலைக்கு எடுத்துச் செல்வதனைக் காட் டுகின்றது. பகவத் கீதையும் மனுதர்மத்தைப் போதித்து இன்பம் பெறும் ஆற்றலை வளர்க்கும் நிலையைக் காட்டுகின்றது. பகவத் கீதையில் காட்டப்படும் நான்கு வர்ணத்தார் என்பது சாதியையோ சமுதாயத்தில் காணப்படும் பிரிவுகளையோ காட்டுவனவல்ல அவை இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் இடையே உள்ள இடைவெளி வேறுபாட்டை, இறை வனை அடையும் நடத்தைக் கோலங்களை வேறுபடுத்திக் காட்டுவனவாக உள்ளன. என்பது ஆய்வாளர்களின் கணிப்பு.



ஆசையை அறுப்பதற்கான வழிகளையே அனைத்து சமயங்களும் எடுத்துக் காட்டுகின் றன. இறைவனை அடைவதற்கு ஆசை இடையூறாக இருப்பது மட்டுமன்றி மனிதனின் துன்பத்திற்கு அடிப்படையாக உள்ளதும் ஆசைதான் எனப்படுகின்றது. நிர்வாண நிலை அடைவதற்குத் துறவு பூண்டு சமுதாயத்தில் இருந்து பிரிந்து சென்று வாழும் நிலையைப் பற்பல சமயங்கள் வலியுறுத் தின. இது பேரின்பத்தை நாடும் வழியாகவும் கொண்டன. ஆனால் அப்பர், சுந்தரர், ஆளடைபிள்ளை, மாணிக்க வாச கர் ஆகிய நால்வரும் சமுதாய அமைப்புக்குள் நின்று 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற நிலை யினை வலியுறுத்தி வந்துள்ளனர். சமுதாய வாழ்க்கையின் நீரோட்டத்தில் இருந்துகொண்டே அன்பு நெறி, பக்தி நெறி மூலம் இறைவனை அடையும் தன்மையை தெளிவுபடுத்தி அதன்வழி உலகியல் இன்பத்தை அனுபவகிக்கும் வழியையும் காட்டி நின்றனர் நால்வர் என்பது வெளிப்படை. 'இம்மையே தரும் சோறும் கூறையும், என்று இவ்வுலகியல் இன்பத்தையும் 'அம்மையே சிவ லோகமாளவதற்கு யாதுமையுறவில்லையே' என்று மணிவாசகர் குறிப்பிடுவதும் கருத்திற்கொள்ளப்பாலது. இதனையே வள்ளுவரும்

> 'துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
> இல்வாழ்வான் என்பான் துணை' (குறள் 42)

என்று இல்லறம் ஓம்பி இறைபதம் எய்தலாம் என்ப தனை வலியுறுத்துகின்றார். 'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை' என்று அவர் குறிப்பிடுவதன் மூலம் பிரமச்சாரிகள், துறவிகள், யோகிகள் ஆகிய மூவருக்கும் உடை, உணவு ஆகிய கொடுத்து துணையோடு சேர்ந்து வாழ்பவனே தகுந்த துணையாக இருக்கமுடியும் என்கின்றார். அவனே தன்பொருட்டன்றி பிறர்பொருட்டுப் பணியாற்றிப் புண்ணியத்தை இயற்றுகின்றான்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்னும் குறட்பா எமக்கு இல் வாழ்க்கையில் அதாவது சமூக அமைப்பில் இருந்து ஆசையை அடக்கி இன்பத்தைத் துய்க்கலாம் என்னும் விளக்கம் தரப்படுகின்றது. கேடுகெட்டுப் பொருளைத் தேடிவைத்து, கூடுவிட்டிங் காவிதான் போனபின் யாரே அனுபவிப்பார் இந்தப் பணம்' என்னும் தத்துவம் பொருளைத் தேடினால் மட்டும்போதாது, அதனால் கிடைக்கக்கூடிய இன்பத்தை அனுபவிக்கும் வழியையும் அறிந்து அதன்வழி ஒழுக வேண்டும். இல்லாதோருக்கு இருப்பவன் கொடுக்கவேண்டும், அதன் வழி இன்பத்தை அடையலாம். அன்புதான் இன்பம் என்பது நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பைச் செலுத்த வேண்டும் என்பதனை எடுத்துணர்த்து கின்றது.

இந்து மத தத்துவங்கள் பெரும்பாலானவை மறைபொருள் தத்துவங்கள். இறைவனைத் தலைவனாக வேண்டி தலைமகள் கோரிக்கை விடும் தன்மை கொண்டவை அங்க இறைவனையும் ஆன்மாவையும் கருப்பொருளாக வைத்துப் பாடப்பட்டவை. இது ஆணவம், கன்மம், மாயை என்பனவற்றில் நின்று மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனிடத்தில் அன்பு வைத்து வாழும் நிலையை முன்வைத்தால் துன்பம் அணுகாது எம்மிடத்தில் என்பது தத்துவம். இம்மையில் நாம் பெறக்கூடிய இன்பம், மறுமை யில் நாம் பெறக்கூடிய இன்பம் இரண்டையும் இப்புவி வாழ்வில் இருந்தே பெற்றுக்கொள்ளலாம் என்பது தெளிவு. அதற்கு நாம் ஆசையைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆசையே துன்பத்தின் அடிப்படை, ஆசை யைக் கட்டுப்படுத்திக் கொள்வதன்மூலம் அமைதியான வாழ்க்கை, மகிழ்வான வாழ்க்கையை நாம் அடையலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன் அட்டைப் படத்துக்குரியவர்



ஈழத்து தமிழ் மண்ணில் கிழக்கின் வாழைச்சேனை கல்குடாவின் வாழ்விடமாக கொண்ட செல்வி S. அமிர்தா சுஜா, வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து அகில இலங்கை ரீதியாக அதி கூடிய புள்ளிகளைப் பெற்று ஜனாதிபதி விருதினை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவி ஆவார். சிறு வயதிலேயே தந்தையை பிரிந்து வாழும் குழந்தை கல்வியில் கலங்கரை விளக்காக அடியெடுத்து வைத்துள்ளது குறிப்பிடதக்கதாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிதான அழகான அமோலைட் கனடிய மாணிக்கக் கற்கள்

## The Ammolite – Canada's Rarest Gemstone

சுந்தரம் இந்திரராஜா






மாணிக்கக் கற்களில் ஒன்றான அமோலைட் (Ammolite) எனப் பெயர் கொண்ட மாணிக்கக் கற்கள் கனடாவின் ஆல்வேட்டா மாகாணத்தில் உள்ள ரொக்கி (Rocky Mountains) மலைகளின் கிழக்கு பகுதி மலைச் சரிவுகளில் அண்மையில் நடாத்திய அகழ்வின் போது கண்டு பிடித்துள்ளனர்.

சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம் மற்றும் ஊதா எனப் பல துடிப்பான சேர்க்கைகளை ஒரே கல்லில் காணத்தக்க இயற்கை வழங்கிய மிகவும் அரிதான அழகான அமோலைட் மாணிக்கக் கற்கள் இவை. 1981 இல் உலக நகை கூட்டமைப்பு அதிகார சபை உத்தியோகபூர்வ ரத்தின நிலை (gemstone status)அமோலைட் மாணிக்கக் கற்களுக்கு வழங்கியுள்ளது.

காபன் என்ற மூலகத்திலிருந்து கடினமான வைரம் என்ற மாணிக்கக் கற்கள் எவ்வாறு கிடைத்ததோ அதே போன்ற ஒரு நிகழ்வால் விலை உயர்ந்த அமோலைட் மாணிக்கக் கற்கள் கிடைக்கத் தொடங்கியுள்ளன. எங்கள் நாட்டில் கிடைத்த புதையல் பற்றி அறிய எல்லோரும் ஆவலாய் இருப்பீர்கள் சுருக்கமாய் கூறுகிறேன்.

ஒரு காலத்தில் அதாவது 70 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இந்த மலை சாரல் அன்று கனடாவின் மேற்குக் கரை கடல் பாதையாக இருந்த போது பல கடல் பிராணிகள் வாழ்ந்துள்ளன. நத்தை ஓடு போன்ற மிகவும் தடிப்பான ஓடு கொண்ட இராட்சத கணவாய் தோற்றம் கொண்ட ஒரு வித கடல் பிராணிகள் இயற்கையின் சீற்றத்தால் புதையுண்டு 70 மில்லியன் வருடங்களுக்கு பின்னர் நிலஅமுக்கங்களால் ஒடுகள் மாற்றம் பெற்றுள்ளன.

அமோலைட் சுருள் வடிவ ஓடுகள் உள்ளே வாழ்ந்த இராட்சத கணவாய் போன்ற உயிரினங்களாகும். மற்ற விலங்குகள் போல், அமோலைட் சிறிய மீன் சிறிய கடல் பிராணிகளை இரையாக கொண்டது.



தங்கள் ஓடுகளுக்குள் உடலை மறைத்து வைத்து இரை அருகில் அணுகும் போது உடலை நீட்டி இரையை உறுஞ்சவல்லது.

பூமி பல தட்டுக்களாலானது (Tectonic Plates). தட்டுக்கள் அசைவு சிறிதளவாயின் பூமியில் நடுக்கங்கள் ஏற்படும். தட்டுக்களின் அசைவு கூடுதலாக இருப்பின் அசைவதற்கு இடம் போதாவிடில் ஒரு தட்டின் மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி நகரும். ஒரு காலத்தில் அதாவது 70 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இப்படியான நிகழ்வால் மேற்கு கடல்பாதையின் கீழிருந்த பசிபிக் சமுத்திரத் தட்டு கீழே நகர வடஅமெரிக்கத் தட்டு அதன் மேலாக வந்தபோது உண்டாகியது தான் கனடாவின் ஆல்வேட்டா மாகாணத்தில் உள்ள ரொக்கி (Rocky Mountains) மலைகள்.

உலகின் அபூர்வமாக அரிதாக கிடைக்கும் 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே கூர்மையான, தாடைகள் இரையை வைப்பதற்கும் அரைப்பதற்கும் இருந்தது. சில அம்மோன்கள் மூன்று அடி (ஒரு மீட்டர்) வரை வளரக் கூடியவாய் இருந்திருக்கின்றன. அமோலைட் வளர வளர புதிதாக சுருள் வடிவ ஓடு ஒன்று வளரும். வெளி புதிதான ஓட்டினுள் தான் அமோலைட் வாழும். ஆழமற்ற கடலையும் வெப்பமான நீரையும் தேடி வாழ்ந்ததாக கணக்கிட்டுள்ளார்கள்.



அமோலைட் ஒடுகள் (படிவுகள்) மலைச்சரிவு மட்டத்திலிருந்து 15 மீற்றர் அல்லது 50அடி தொடக்கம் 50 மீற்றர் அல்லது 150 அடி வரையிலில் உள்ள ஆழக் குழிகளிருந்து எடுக்கப்படுகின்றன. படிவுகளிருந்து எடுக்கப் பட்ட கடல் பிராணியின் ஓட்டினுள் அடைபட்டி ருக்கும் மண் கற்கள் கவனமாக நீக்கப்பட்டு வெடிப்புகள்

நெருக்கமாக காணப்படும் பகுதிகள் நீக்கப்பட்டு தடிப்பாக இருக்கும் கோதின் பகுதி மாத்திரம் முதலில் தரப்படுத்தப்பட்டு பின்னர் தான் ஆபரணங்களில் பதிக்கக் கூடியதான அளவுக்கு வெட்டுதல் படிந்துள்ள அழுக்களை தீட்டி நீக்குதல் இயற்கையாக அதிலிருந்து வரும் அழகு வர்ணங்களை வெளிக் கொண்டு வருதல் போன்றவையை கணக்கில் கொண்டால் குழிகளிருந்து வெட்டியெடுக்கப்பட்ட அமோலைட் (Ammolite) சுமார் 50வீதமான பகுதிகள் தான் நகைகளுள் பதிக்க ஏற்றவையாக உள்ளன. அமோலைட் (Ammolite) எனப் பெயர் கொண்ட மாணிக்கக் கற்கள் விலை உயர்வாக விற்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம். 1981 தொடக்கம் 2004 வரை பதப்படுத்தல் தரப்படுத்தல் விற்பனை உரிமை வெளிநாட்டில் உள்ள ஒரு கொம்பனி தான் (Korite International) வைத்திருந்தது. இதனால் அமோலைட் (Ammolite) பதித்த ஆபரணங்கள் வெளிநாடுகளில் மாத்திரம் விற்பனையாகி வந்தன.



2004 ஆம் ஆண்டில் ஆல்வேட்டா மாகாணத்திலும் மற்றும் 2007 ல் லெத்பிட்ஜ் நகரத்திலும் (City of Lethbridge) உத்தியோகபூர்வ ரத்தின நிலை (gemstone status) அமோலைட் மாணிக்கக் கற்களுக்கு வழங்கப்பட்டது. இப்போது இங்கும் சில நகைக் கடைகளில் விற்பனைக்கு வந்துள்ளது. கனடாவில் கிடைத்து வரும் அமோலைட் படிவுகள் இன்னும் 15-20 வருடங்களில் முடிவுக்கு வந்து விடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆல்வேட்டா மாகாணத்தில் எங்கள் நாட்டிற்க்கு தேவையான எண்ணை வளமும் உலகின் அபூர்வமாக கிடைக்கும் விலை உயர்ந்த அமோலைட் மாணிக்கக் கற்களின் படிவுகளும் கிடைத்திருப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்வோம்.

**சென்ற தளிர் இதழில் உலகின் மிகப் பெரிய நீர்க்கிராமம் கட்டுரையினை எழுதியவரும் இவரே...**

**சுந்தரம் இந்திரராஜா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமைப்போம்! சுவைப்போம்!

## ஹக்கா மஸ்ரூம்

காளானைக் கொண்டு ஆரோக்கியமான மற்றும் வித்தியாசமான சுவையில் ஒரு சைடு டிஷ் செய்து சுவையுங்கள். இந்த டிஷ்ஷின் பெயர் ஹக்கா மஸ்ரூம். சரி, இப்போது அந்த ஹக்கா மஸ்ரூமை எப்படி செய்வதென்று பார்ப்போமா?. அதை செய்து சுவைத்து பாருங்கள், ஆஹா... என்ன அருமையான டிஷ்...

**தேவையான பொருட்கள்:** காளான் - 2 கப் (நறுக்கியது) வெங்காயத்தூள் - 1/2 கப் (பொடியாக நறுக்கியது) சோள மாவு - 1 டேபிள் ஸ்பூன், சோயா சாஸ் - 2 1/2 டேபிள் ஸ்பூன், மிளகாய் தூள் - 1/4 டீஸ்பூன், பச்சை மிளகாய் - 1 (பொடியாக நறுக்கியது), பூண்டு - 4 பற்கள் (பொடியாக நறுக்கியது), எண்ணெய் - 1 டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு

**செய்முறை:** முதலில் ஒரு கிண்ணத்தில் 2 டேபிள்ஸ்பூன் தண்ணீரை எடுத்துக் கொண்டு, அதில் சோள மாவு சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின்னர் அதில் சோயா சாஸ் சேர்த்து கலந்து, தனியாக வைத்துக் கொள்ளவும். பின்பு ஒரு நான்ஸ்டிக் பேனை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பச்சை மிளகாய், பூண்டு சேர்த்து வதக்கி, பின் காளான் மற்றும் உப்பு சேர்த்து 4-5 நிமிடம் நன்கு வதக்கி விட வேண்டும். பிறகு அதில் சோள மாவு கலவையை சேர்த்து தொடர்ந்து கிளறி விட வேண்டும். காளான் சோள மாவுடன் சேர்ந்து நன்கு வெந்ததும், அதில் வெங்காயத் தூள், மிளகாய் தூள் சேர்த்து ஒருமுறை கிளறி விட்டால், ஹக்கா மஸ்ரூம் ரெடி!





## சில்லி சீஸ் டோஸ்ட்

மாலையில் பள்ளி முடிந்து வீட்டிற்கு பசியோடு வரும் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சமையலின் மூலம் பசியை போக்க, சில்லி சீஸ் டோஸ்ட் செய்து கொடுங்கள். இது வித்தியாசமான சுவையில் இருப்பதோடு, குழந்தைகள் விரும்பி சாப்பிடும் வண்ணம் இருக்கும். சரி, இப்போது அந்த சில்லி சீஸ் டோஸ்ட் எப்படி செய்வதென்று பார்ப்போம். அதைப் செய்து சுவைத்துப் பாருங்கள்.

**தேவையான பொருட்கள்:** பிரட் - 2 துண்டுகள், சீஸ் - 3 டேபிள் ஸ்பூன் (துருவியது), பச்சை மிளகாய் - 2 (பொடியாக நறுக்கியது), பச்சை குடைமிளகாய் - 2 டேபிள் ஸ்பூன் (பொடியாக நறுக்கியது), மிளகுத் தூள் - 1/2 டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு

**செய்முறை:** முதலில் ஒரு பௌலில் பச்சை மிளகாய், குடைமிளகாய், துருவிய சீஸ், மிளகுத் தூள், உப்பு சேர்த்து நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின் பிரட் துண்டுகளை தோசைக்கல்லில் போட்டு பொன்னிறமாக டோஸ்ட் செய்து கொள்ள வேண்டும். பின்பு பிரட் துண்டுகளின் ஒரு பக்கத்தின் மேல் அந்த கலவையை பரப்பி, மீண்டும் தோசைக் கல்லில் வைத்து சீஸ் உருகும் வரை வேக விடவும். இப்போது சுவையான சில்லி சீஸ் டோஸ்ட் ரெடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரல்கள்



**டாக்டர். போல் யோசேப்**

இதென்ன தலைப்பே ஒரு மாதிரியாக இருக்கிறது என்று நீங்கள் வியப்பது புரிகின்றது. இவ்வுலகில் பெரும்பாலானோர் இப்போது விரல்களைத் தான் அதிகமாக பாவிக்கின்றனர். இந்த விரல்கள் இல்லையென்றால் வாழ்க்கையே இல்லை என்று ஆகிவிட்டது.

உலகம் உன் கையில் என்ற கனவு இப்போது நனவாகி விட்டது. முன்பெல்லாம் ஒருவர் தெருவில் தனியாக கதைத்துக் கொண்டு போனார் என்றால் "பாவம் மேல கொஞ்சம் பழுது போல இருக்கு" என்போம். இப்போ... எல்லாரும் அப்படித்தான். பஸ் நிறுத்தத்தில். அங்காடிகளில். வாகனங்களில். பூங்காக்களில் என்று எங்கு பார்த்தாலும் தனியாகக் கதைக்கின்றார்கள். எங்கெங்கோ பார்த்துச் சிரிக்கின்றார்கள். எங்கெங்கோ பார்த்துச் கதைக்கின்றார்கள். மாணவர்கள். இளையவர்கள் எப்போதும் குனிந்ததலை. நிமிராமல் நாணிக் கோணியவர்கள் போல் அந்த இயந்திர விரலுக்கு மசாஜ் மன்னிக்கவும் மெசேஜ் செய்துகொண்டே இருக்கிறார்கள்.


**உலகத்தை இணைத்து உறவுகளைப்பிரித்து:-**
உலகத்தையே ஒன்றாக இணைத்து ஆனால் குடும்பத்திற்குள் பலரைத் தனித்தனியாகப் பிரித்து இடைவெளிகளை மேலும் அதிகரிக்கச் செய்யும் அற்புதமான கண்டுபிடிப்பு. ஆம் இதை இந்த நூற்றாண்டின் அதிசயம் என்று சொன்னால் பொருத்தமானது தான். செல்போன் செல்லிடத் தொலைபேசி என்று பல்வேறு பெயர்கள் இருந்தாலும் நம் எல்லோரின் வாழ்க்கையிலும் இன்றியமையாத ஒரு பொருளாக எப்போதும் நம் கைகளில் விரலோடு விரலாக ஒட்டிக் கொண்டிருப்பதால் தான் இதற்கு "விரல்கள்" என்ற பெயர் சூட்டினேன். இதன் வரலாறு மிகப் பெரியதாக இருந்தாலும் 1973-இல் தான் John.F.Mitchell மற்றும் Dr.Martin Cooper ஆகிய இருவரும் முதலில் Motorola நிறுவனத்திற்காக ஒரு கிலோ எடையுள்ள செங்கல் போன்ற வடிவிலான செல்போனை உருவாக்கினர். அதன் பின்பு கடந்த காலங்களிலே அவை பல்வேறு வடிவங்களில் உருமாற்றங்களைப் பெற்று தற்போது எப்படியுள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம்.

செல்பேசியின் தொழில்நுட்பம். அதன் பயன்பாடுகள் பற்றிச் சொல்வதை விட மனித ஆரோக்கியத்தில் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதைப்பற்றி இந்தக் கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம். செல்பேசியை எடுத்து உடனே பேசிவிடுவதால் எந்த பிரச்சனையும் வரப்போவதில்லை. ஒரு நாளில் எவ்வளவு நேரம். எத்தனை ஆண்டுகள். எப்படிப் பயன்படுத்துகிறார்கள். எத்தகைய தொலைபேசிகளினை பயன்படுத்துகிறார்கள் என்பவற்றைப் பொறுத்துத்தான் பாதிப்புகளும் இருக்கும்.

கடந்த பல ஆண்டுகளாக இதுபற்றி பல்வேறு நாடுகளிலும். பல்வேறு ஆய்வு அமைப்புகள் நடத்திய ஆய்வுகள் பொதுவாக ஒரேமாதிரியான முடிவுகளைத் தான் வெளிப்படுத்தின. ஆனால் தற்போது தான் பெரும்பாலானவர்களிடம் பயன்பாட்டிற்கு வந்துள்ளதால் வருங்காலத்தில்தான் எத்தகைய பயங்கரமான பாதிப்புக் களை உண்டாக்கப் போகிறது என்பது தெரிய வரும். அகில உலகின் ஆரோக்கியம் தொடர்பான உலக சுகாதார நிறுவனம் இதுபற்றி தொடர்ந்து உலகின் பல பாகங்களிலும் பல்வேறு நிபுணர்களைக் கொண்டு நடத்திய ஆய்வுகளின் முடிவினை வெளியிட்டுள்ளது. அதன்படி. மே 31. 2011 அன்று இறுதியாக உறுதியாக செல்பேசிகளால் மனித நலத்திற்கு தீங்கு விளைகிறது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மூளை அவிகிறது:-** இத்தகைய ஆய்வுகள் மனிதர்களில் மட்டுமல்ல ஆய்வுகூட விலங்குளிலும் உறுதி செய்யப்பட்டன என்பதும் உண்மையானது. டாக்டர் கெய்த் பிளாக் என்பவர் அமொரிக்காவின் லொஸ் ஏஞ்சலில் பிரபலமான மூளை மற்றும் நரம்பியல் நிபுணர். ஒரு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகவும் இருக்கிறார். இவர் தலைமையில் செல்பேசி பற்றி நீண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகள் நடைபெற்றது. ஒருமுறை சி.என்.என் தொலைகாட்சியில் நடைபெற்ற செல்போன் என்பது ஒரு சிறிய மைக்குரோவேவ் ஓவன் போன்றது மட்டுமல்லாமல் "It Cooks Brain" மூளையினை அவிப்பது போல என்றும் குறிப்பிட்டார். செல் போன் செயற்படுகிறது போது அதிலிருந்து வெளிப்படுவது. "Microwave Frequency of Electro Magnetic Radiation" அதாவது மின்காந்த நுண்ணலை கதர்வீச்சு மிகவும் நெருக்கமாக தலைக்கு அருகில் இருப்பதால் காலப்போக்கில் மூளையின் கலங்களைப் பாதிக்கிறது என்பது நிரூபணமாகியுள்ளது என்றார்.



குறிப்பிட்ட புற்றுநோய் தொடர்பான விடயங்களையும் தாண்டி வாகன விபத்துக்கள் பற்றிய ஆய்வுகள் என்பது ஒரு பெரிய தொடர்கதை. "ஹாவேட் பல்கலைக்கழக ஆய்வு ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறது. அமெரிக்காவில் 2.600 வீதி விபத்து மரணம் செல்பேசி பயன்படுத்திய காரணத்தால் ஓராண்டில் ஏற்படுவதாகவும் 570.000 வாகன விபத்துக்கள் செல்பேசியினால் மட்டும் ஏற்படுவதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதில் முக்கிய விடயம் என்னவென்றால் 21 சதவீதமான இறப்புகள் 16 முதல் 19 வயது வரையானவர்களில் தான் ஏற்படுகிறதாம்.

மேலும் உலக சுகாதார ஸ்தாபனம். IARC (International Agency for Research on Cancer) என்ற ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் 14 நாடுகளின் 31 விஞ்ஞானிகளுடன் நடத்திய ஆய்வில் கீழ்கண்ட முடிவுகளை உறுதி செய்துள்ளனர். Carcinogens என்ற புற்று நோய் கட்டிகளை உருவாக்கும் தன்மை கொண்ட காரணியாகவும் அவ்வாறான நுண்கதிர் வீச்சுக் கொண்டதாகவும் உள்ளது.

- மூளை மற்றும் காது நரம்பு தொடர்பான கட்டிகள் வர வாய்ப்புள்ளது.
- சிறுவர்களுக்கான இரத்தப் புற்றுநோய் வருவதற்கான தன்மைகளைக் கொண்டது.

Chromosomes என்ற நிறமூர்த்தங்களில் D.N.A புரதங்களிலும் மரபணு மாற்றங்களிற்குக் காரணமாகலாம் என்பது ஆய்வுகூட விலங்குகளில் செய்த ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகிறது. குறிப்பாக எலிகளில் மேற்கொண்ட தொடர்ச்சியான ஆராய்ச்சியில் DNA இணைப்புகளில் உடைதல் ஏற்பட்டு மரபணுக்களில் பெரிய மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு மூளை மற்றும் உடல் கலங்களிலும் கருவிலுள்ள குழந்தைகளில் பெரிய பிரச்சினைகள் எழ வாய்ப்புகளுள்ளது.

இதனால் மூளைக்கலங்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதாவது எந்த இடத்தில் அதிகம் கதிர் வீச்சு தொடர்ச்சியாய் படுகிறதோ அந்த கலங்களில் அதீத வளர்ச்சியுண்டாகி மூளைக்கட்டிகள் உருவாகலாம். இந்த ஆய்வுகள் எலிகளில் உறுதியாகியுள்ளது. மேற் சொன்ன கட்டிகள் எப்போது சாத்தியமென்றால் ஒரு நாளில் அரைமணித்தியாலம் முதல் ஒரு மணித்தியாலம். பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாக பயன்படுத்தும் போது 40% அளவில் அதிக பாதிப்புகள் உண்டாகலாம் என்பது ஆராய்ச்சிகளின் முடிவாகும். உலக சுகாதர ஸ்தாபனம் செல்பேசியினால் வரும் விளைவுகள். அது தொடர்பான ஆராய்ச்சிக்கு சுமார் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை அண்மைக் காலமாக செலவு செய்துள்ளதாம்.

**செல்பேசியால் சாலை விபத்துகள்:-** இங்கு

**சைபர் கிறைம்:-** அதுமட்டுமா Cyber Crime என்ற குற்றங்களுக்கு செல்லிடப் பேசி ஒரு முக்கிய கருவியாக இருக்கிறது. குறிப்பாக பதின்ம வயதினர். இளைஞர்கள் போன்றோர் தவறான வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்தல் Black Mail ஆட்கடத்தல். தவறான நபர்களின் தொடர்புகள். மாஃபியாக்களின் தொடர்புகள் Drug Dealer போதை மருந்து விற்பனையாளர்களுடனான தொடர்புகள். மேலும் Pornography என்ற ஆபாசமான பாலுணர்வு கிளர்ச்சிகளைத் தூண்டக்கூடிய படங்களை பரிமாறிக் கொள்வது போன்றவை பெரும்பாலும் செல்பேசிகள் வழியாகத்தான் நடைபெறுகிறது. ஆகவே இந்த செல்பேசி சைபர்கிறைம் எதிர் காலத்தில் இளைய தலைமுறையில் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தப் போகிறது என்பதை எண்ணிப் பார்க்க பயமாகத்தானிருக்கிறது.

**இதயத்தின் மின்காந்தம்:-** செல்பேசி மூலம் வெளியாகும் மின்காந்த அலை இதயத்தின் இயக்கத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பது இன்னொரு கதை. ஆம் பெரும்பாலும் சட்டையிலுள்ள இடதுபக்க பொக்கற்றில் தான் செல்பேசியை எப்போதும் வைத்திருப்பது பலரின் வழக்கம். இது மிகவும் ஆபத்தானது. இதயம் இயங்குவது ஒருவித மின்காந்த அலையெனும் மின்சாரத்தினால்தான். இதயத்தின் வலதுசோணை அறையிலுள்ள கண்ணுக்குப் புலப்படாத ஒரு மர்மப் புள்ளியிருக்கிறது. அதன் பெயர் தான் சைனோ ஏற்றியல் முடிச்சு. அதிலிருந்துதான் அந்த அற்புத மின்சாரம் உற்பத்தியாகி இதயத்தின் பல பாகங்களுக்கும் பரவி அதை இயங்கச் செய்கிறது. இதில் பிரச்சினைகள் வரும்போது தான் இதயத்தின் இயக்கத்தை சீர்செய்ய மார்புப்பகுதியில் பேஸ்மேக்கர் என்ற கருவி பொருத்தப்படுகிறது. செல்பேசியினால் இதயத்தின் இயற்கையான மின்சாரம் தடைபட்டு அதன் இயக்கத்தில் இடையூறுகளை உண்டாக்குவது. சாதாரணமாக இ.சி.ஜி Electro Cardio Gram என்ற கருவியின் மூலம் இதயத்தின் மின்சார இயக்கும் அளக்கப்படுகிறது. செல்பேசியினை இதயத்தின் அருகில் வைத்து E.C.G எடுக்கும் போது அது தாறுமாறாக செயற்படுவதை நீங்களே பரிசோதனை செய்து பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்பேசி அழைப்பு வரும் போது வீட்டிலுள்ள வானொலி. தொலைக்காட்சி போன்ற கருவிகளில் மின் காந்த அலையின் இடையூறு உண்டாவதை கறகற சத்தம் வருவதன் மூலம் அனுபவத்தில் பார்க்கிறோம் அல்லவா! ஆம் விமானங்களிலே கூட குறிப்பிட்ட நேரங்களில் அதனைப் பயன்படுத்தத் தடை உள்ளதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம். குறிப்பாக இதயத்தில் பேஸ்மேக்கர் பொருத்தியிருப்பவர்கள் செல் பேசியினை தவிர்ப்பது அவசியம். தொடர்ச்சியான செல் பேசியின் பயன்பாட்டினால் வரும் மின்காந்த கதிர்வீச்சுகள் மூளை நரம்புகளில் ஒருவித உறுத்தலை உண்டாக்குகிறது (Brain irritation) இதனால் தலையில் ஒருவித எரிச்சல். தலையிடி. ஒருபக்கம் விறைத்தது போன்ற உணர்வு. தூக்கமின்மைக் குறைபாடுகள். உறங்கி எழுந்தாலும் சரியாக உறங்கியது போல ஒரு திருப்தியின்மை. தலைச்சுற்றல் உணர்வு. ஞாபக சத்திக் குறைவு. எதிலும் ஒரு மனஒருமைப்பாடு இன்மை (Loss or Mental Atttention) இதயப் படபடப்பு தலையின் பிடரி மற்றம் கழுத்து வலி போன்ற குணங்குறிகள் பெரும்பாலோருக்கு இருப்பதாக W.H.O அதிகாரபூர்வ இணையத்தளத்தில் ஆராய்ச்சிகளின் முடிவாக பட்டியலிடப் பட்டுள்ளது.

**மரபணுச்சிதைவு:-** அது மட்டுமா அவுஸ்திரேலியாவில் 2009 ல் நடந்த ஒரு ஆராய்ச்சியில் மனிதனின் விந்துக் கலங்களை எடுத்து மேற்கொண்ட ஆய்விலும் விந்துக் கலங்களின் வீரியம் (Vitality). இயக்கும் அசையும் திறன் (Motility) பலமடங்கு குறைவடைந்ததையும். அதற்கு காரணம் விந்துக்களிலுள்ள ஒட்சிசன் வாயுவின் அளவை செல்பேசியின் கதிர்வீச்சக்கள் தடை செய்வதாகவும். மேலும் தொடர்ச்சியாக நீண்டகால ஆராய்ச்சிகளில் விந்துக்களின் DNA மரபணுக்களில் பிரிவுகள் உண்டாகி மாற்றங்கள் நடைபெறுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆம் இவையெல்லாம் கதையல்ல விஞ்ஞான ஆய்வுகளின் நிஜங்கள். உலகின் பிரபல மருத்துவ வலைத்தள பத்திரிக்கையான Surgical Neurology (Volume 72 September 2009) இல் வெளியிட்டுள்ள ஆராய்ச்சிகள் கட்டுரையில் 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியான செல்பேசி பயன்பாட்டினால் Glioma என்ற மூளைக்கட்டிகளும் மற்றும் Acoustic Neuroma என்ற மூளைக்கும் காதுக்கும் இடையில் இணைப்பினை ஏற்படுத்தியுள்ளது Vesitbulo Cochlear Nerve என்ற முக்கியமான 12 தலை நரம்புகளில் ஒன்றான இந்த நரம்பில் உண்டாகும் கட்டிகளுக்கும் காரணமாக அமைகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதிலும் குறிப்பாக சிறுவர்களின் மண்டையோடு மிகவும் லேசானதாகவும் அடர்த்தி குறைந்தும் இருப்பதால் கதிர்வீச்சு இலகுவாக ஊடுருவிச் சென்று மேற்சொன்ன பாதிப்புகள் இளவயதிலேயே வரக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

**சிலதொற்று நோய் கிருமிகளின் பொக்கிஷம்:-**
இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். American Journal of Infection Control என்ற தொற்று நோய்கள் தொடர்பான பத்திரிக்கை நடத்திய ஆய்வுகளில் மருத்துவமனைகளில் மருத்துவர்கள். ஊழியர்கள் செல் பேசிகளைப் பயன்படுத்துவதால் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு பல கிருமிகள் இலகுவாக தொற்றிக் கொள்கின்றன. இதைப் பற்றிய குறிப்புகள் Nosocomial Infection அல்லது Hospital Acquired infection என்ற தலைப்புகளில் நமது மருத்துவ பாடப்பிரிவிலேயே ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நுரையீரல் தொற்று நோய்கள். நிமோனியா போன்ற கொடிய நோய்கள் பரவுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பெரிய பிரபலமான செல்பேசிகளின் Safety Manual வழிகாட்டி குறிப்பேட்டில் பல விடயங்கள் குறிக்கப் பட்டுள்ளது. ஆனால் எவரும் அவற்றைப் படித்துப் பார்ப்பதில்லை. மேற்குறிப்பிட்ட தகவல்களால் செல் பேசியை இனிப் பயன்படுத்த வேண்டாம் என்று நான் குறிப்பிடவில்லை. மிகவும் அவசியமானதொன்றாகவுள்ள செல்பேசியினை தேவையின் போது மட்டும் பயன்படுத்தவும். மற்ற நேரங்களில் வீட்டுத் தொலைபேசியில் உங்கள் அரட்டைகளை வைத்துக் கொள்ளலாம். Blue Tooth, Ear Phone போன்ற சாதனங்களைக் கொண்டு இணைப்பை ஏற்படுத்தலாம். சிக்னல் குறைவாக இருக்கும் போது பேசுவதை தவிர்த்துக் கொள்ளவும். அதே போல சரியாக சார்ஜ் செய்து பயன்படுத்தவும் பேசும்போது செல்பேசி சூடேறிவிட்டால் மிகவும் ஆபத்தானது உடனே நிறுத்தி விடவும். உடலோடு ஒட்டியது போல சட்டை பைகளில் வைத்தல் தவிர்க்க வேண்டும் படுக்கையறையில் இரவு நேரங்களில் வைத்திருத்தல் தலையணைக்கு அருகில் வைத்துக் கொண்டு படுத்திருத்தல் போன்றவை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். வாகனங்கள் ஓட்டும் போது கண்டிப்பாக கவனத்தை திசை திருப்புவதால் விபத்துகள் உயிரிழப்புகள் ஏற்படலாம். சிறுவர்கள் குழந்தைகளிடம் பேச விளையாட கொடுக்கவே கூடாது. செல்பேசியைக் குறித்து இன்னும் பல விடயங்களை குறிப்பிட்டுக் கொண்டே போகலாம். ஆனால் அதிக பக்கங்களை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஞ்சியை எதனுடன் எப்படி சாப்பிட்டால் என்ன பலன் கிடைக்கும்...?




* இஞ்சி சாறை பாலில் கலந்து சாப்பிட வயிறு நோய்கள் தீரும். உடம்பு இளைக்கும்.

* இஞ்சி துவையல், பச்சடி வைத்து சாப்பிட மலச் சிக்கல், களைப்பு, மார்பு வலி தீரும்.

* இஞ்சியை சுட்டு உடம்பில் தோய்த்து சாப்பிட பித்த, கப நோய்கள் தீரும்.

* இஞ்சி சாறில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும்.

* இஞ்சியை புதினாவோடு சேர்த்து துவையலாக்கி சாப்பிட பித்தம், அஜீரணம், வாய் நாற்றம் தீரும். சுறு சுறுப்பு ஏற்படும்.

* இஞ்சியை, துவையலாக்கி சாப்பிட வயிற்று உப்புசம் இரைச்சல் தீரும்.

* காலையில் இஞ்சி சாறில், உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட பித்த தலைச்சுற்று, மலச்சிக்கல் தீரும். உடம்பு இளமை பெறும்.

* பத்துகிராம் இஞ்சி, பூண்டு இரண்டையும் அரைத்து, ஒருகப் வெந்நீரில் கலந்து காலை, மாலை இரண்டு நாட்கள் சாப்பிட மார்பு வலி தீரும்.

* இஞ்சி சாறோடு, தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந் நீர் குடித்துவர தொந்தி கரைந்து விடும்.

* இஞ்சி சாறில், எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட நல்ல பசி ஏற்படும்.

* இஞ்சி, மிளகு, இரண்டையும் அரைத்து சாப்பிட ஜீரணம் ஏற்படும்.

* இஞ்சியை வதக்கி, தேன் விட்டு கிளறி, நீர் விட்டு, கொதிக்க வைத்து நீரை காலை, மாலை குடித்துவர வயிற்றுப் போக்கு தீரும்.

* இஞ்சியை அரைத்து நீரில் கலந்து தெளிந்தபின், நீரை எடுத்து, துளசி இலை சாறை சேர்த்து ஒரு கரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட வாய்வுத் தொல்லை நீங்கும்.

* இஞ்சி சாறில், தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டி சாப்பிட்டு வர நோய் தடுப்பு திறன் கூடும். உற் சாகம் ஏற்படும். இளமை பெருகும்.

* இஞ்சி சாறுடன், வெங்காய சாறு கலந்து ஒரு வாரம், காலையில் ஒரு கரண்டி வீதம் குடித்துவர நீரிழிவு குறையும்.

* இஞ்சி சாறு, எலுமிச்சை சாறு, வெங்காய சாறு மூன்றையும் கலந்து ஒருவேளை அரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர ஆரம்ப கால ஆஸ்துமா, இரைப்பு, இருமல் குணமாகும்.

### இளநீர் டயட்



வாரத்துக்கு ஒருநாள் இளநீர் டயட் எடுக்க வேண்டும். வெறும் இளநீர் மற்றும் வழுக்கையை மூன்று நான்கு முறை சாப்பிட வேண்டும். இதை 20 வயதிற்கு மேற்பட்டோர் வாரம் ஒருமுறை என கடைப்பிடித்தால், இது சிறுநீரகத்தின் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும்.

### உள்ளங்கையில் எதிர்ப்பு சக்தி

நம் பாரம்பரிய மருத்துவத்தில், நரம்புகளைத் தூண்டிவிட்டு, உடலை சரி செய்வதற்கு, முக்கியமான இடம் இருந்திருக்கிறது. உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும், பிரதிபலிப்புப் புள்ளிகள் நம் உள்ளங்கையிலேயே உள்ளன. அவற்றைத் தினமும் அழுத்திவிடுவதன் மூலம், அனைத்து உறுப்புகளும் தூண்டப்பட்டு, ஆரோக்கியமாகச் செயல்படும்.



எதிர்ப்பு சக்தி குறைந்து, நோயால் சிரமப்படுவதை விட, நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த கொஞ்சம் மெனக்கெடலாமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவித்தளிர்

# பைகள்

கருப்பைக்குள் கருவாகி
பன்னீர்க் குடப்பைக்குள் வளர்ந்து
மெய்ப்பை உருவெடுத்து
பஞ்சபூதப்பைகளையும் கலந்து
உயிர்ப்பையும் மனப்பையும்
உன்னை ஆள
உறவுப்பைகளையும் சுமந்து கொண்டு
ஒரு தோற்பைக்குள்
அத்தனையும் அடக்கி
அலையும் நீ ஒரு மனிதப்பை.



பையான பொய்யான உனக்குள்
எத்தனை பைகள்
காற்றோடு காதல் கொள்ள சுவாசப்பை
குருதியை இறைக்க இதயப்பை
ஒரு சாண் வயிற்றுப் பைக்குள்ளே
பித்தப்பை சிறுநீர்ப்பை கருப்பை
எண்ணமுடியா கலங்களென்ற கலப்பைகள்
இப்படி ஒரு தொகுப்பை
நல்லதொரு படைப்பைத் தந்த
மெய்யான இறைவன் மேல்
எப்போதும் உன் நினைப்பை வைத்திரு

இரைப்பைகளை நிறைக்க
உழவனின் உழைப்பையும்
அவனது களைப்பையும் கலந்து
கலப்பையில் கையை வைத்து
மட்பைக்கு உரமூட்ட உரப்பைகள்
அறுவடையினை அள்ளிச் செல்ல சாக்குப்பைகள்
உன் வாழ்வின் எத்தனை எத்தனை பைகள்.

நிர்வாணத்தை மறைக்க துணிப்பைகள்
இத்தனைக்கும் இடையிலே
உனக்குள்ளும் எனக்குள்ளும்
சமூகத்திலும் எத்தனை குப்பைகள்
எதிர்மறை எண்ணங்கள்
உள்ளத்தின் குப்பைகள்

பணப்பையில் ஆசைவந்தால்
கொஞ்சம் தொப்பையும் வந்துவிடும்
மனக் குப்பையும் உடற்குப்பையும்
நோய்க்குப்பையும் சேர்ந்திடவே
விரைவிலேயே நிரந்தர குட்பை
சொல்லவும் நேரிடலாம்
குப்பைகளுக்கு குட்பை.

டாக்டர். போல் யோசேப்

# தமிழ் வணக்கம்

பல்லவி

செந்தமிழே வணக்கம் - எங்கள்
சித்தத்தில் இரத்தத்தில் ஊறிக் கலந்துள்ள
செந்தமிழே வணக்கம்!

சரணங்கள்

முந்திப் பிறந்துள்ள போதிலும் மூப்பின்றிச்
சுந்தர இளநலம் தொடர்ந்தென்றும்
கொழிக்கின்ற
செந்தமிழே வணக்கம்! (எங்கள் சித்தத்தில் ...)

அந்தரம் அற்றநல் அறமுறை வாழ்க்கைக்கு
மந்திரம் வையகம் முழுவதும் வழங்கிடும்
செந்தமிழே வணக்கம்!

வெந்தழல் மனத்திலும் செந்தண்மை
வளர்த்திடும்
அந்தமில் அமுதளித் தணைத்திடும் அன்னையே
செந்தமிழே வணக்கம்! (எங்கள் சித்தத்தில் ...)

சொந்த நிலங்களைக் கடந்து துணிந்துள்ள
விந்தைகொள் உலகெங்கும் வேரூன்றி
வளர்கின்ற
செந்தமிழே வணக்கம்!

நந்தலில் ஞானமே உடல்பொருள் ஆவியே
புந்தியில் சந்ததம் பூசிக்குந் தேவியே
செந்தமிழே வணக்கம்! (எங்கள்
சித்தத்தில் ...)

- வி. கந்தவனம்

# உண்மை வழி தொடர்வோம்!

தாயகத்து நினைவலைகள்
தாவி என்னைத் தழுவுகையில்
போயகலும் துயர மெல்லாம்
பொன் மனது குளிர்ந்திடுமே!

கால் பதித்த தடமெல்லாம்
காலமது மறைத்திடுமோ
வேல் பாய்ந்த உள்ளம் போல்
வெந்தனோ ஆறிடுமோ!



போர் கொண்ட பொழுதுகளை
புகை மூண்ட இருப்புகளை
நேர் நின்று எதிர்கொண்டு
நீண்ட இடர் வழிகடந்த
நம்பிக்கை இன்னும் துளிர்க்கிறது!

கூட வந்த உறவுகளின் பிரிவு
கூடியே வாழ்ந்த பாசத்தின் பரிவு
பாட மறந்த பாடல் வரிகளாய்
பண்ணிழந்து தவிக்கிறதே!

மீண்டு மொரு எழுச்சி கொண்டு
கூண்டு திறந்து பாடுவோமே!

ஆண்ட நம் வாழ்வு ஆளவே வாழ
ஆன பணி செய்வோமே ஆனந்தமாக!

எம்மினிய தாயகத்தின்
இடர்களை நாம் பகிர்வோம்!

ஓம் என்னும் தத்துவத்தின்
உண்மை வழி தொடர்வோம்!

தளிர் செழித்துக் கிளைபரப்பி
தண்மலர் மணம் வீசி
தமிழினிக்க
தாய் மொழியாள்
தமிழம்மா மனங்குளிர
தலை வணங்கி
வாழ்த்துவமே!

- இராஜி சண்முகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரம் ஒன்றின் இறப்பு




## - அண்டமும் குவாண்டமும்

ராஜ் சிவா

அண்டப் பெருவெளியில் ஒவ்வொரு நொடியும், எங்கோ ஒரு நட்சத்திரம் பிறந்து கொண்டும், இன்னு மொரு நட்சத்திரம் இறந்து கொண்டும் இருக்கின்றன. மனிதர்களின் வாழ்க்கையைப் போலவே ஒரு நட்சத் திரங்களும் பிறந்து, பின்னர் வளர்ந்து, பல காலம் வாழ்ந்து, அதன் பிறகு இறக்கின்றன. இயற்கை நடத்திக் கொண்டிருக்கும் அதிசய நிகழ்வு இது. பிறப்புகளினாலும் இறப்புகளினாலும் தன்னை ஒரு சமநிலைக்கு உட் படுத்தி வைத்துக் கொள்கிறது இயற்கை. ஒரு நட்சத்திரம் இறக்கும் போது, 'சுப்பர் நோவா' (Super Nova) என்னும் பிரம்மாண்ட நிலையை அடைந்து, திடீரென வெடித்து இறக்கிறது. இவற்றைப் பற்றியெல்லாம் ஒரு தகவல்களாகத் தெரிந்து கொள்வதோடு நின்றுவிடாமல், 'ஒரு நட்சத்தி ரம் இறக்கும் போது, அங்கே என்ன நடைபெறுகிறது?' என்ற கேள்விக்கான பதிலாகத் தெரிந்து வைத்திருப்பது அவசியம். அது தெரிந்திருக்கும் பட்சத்தில்தான், அதன் அடுத்த கட்டமாகவுள்ள கருந்துளைகள் பற்றிய முழுமையான அறிவையும் நாம் பெற்றுக் கொள்ளலாம். கருந்துளைகள் பற்றிய பல விளக்கங்களையும் நம்மால் விளங்கிக் கொள்ள முடியும். அதனால், நட்சத்திரம் ஒன்று இறக்கும் போது, அங்கு என்ன நடக்கிறது என்பதை நாம் விளக்கமாகப் பார்க்கலாம்.


ஒரு நட்சத்திரம் முக்கியமாக மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. 1. நடுவே இருக்கும் 'கோர்' (Core) என்று சொல்லப்படும் அதன் மையம், 2. கதிர்வீச்சு மண்டலம் (Radiative Zone), 3. 'ஒளிக் கோளம்' (Photosphere). இது தவிர வேறு சில பகுதிகள் இருந்தாலும், இவையே நமக்கு முக்கியமானவை. 'கோர்' என்பது ஒரு செர்ரிப் பழத்தினுள் அதன் விதை எப்படி இருக்குமோ, அப்படி நட்சத்திரத்தின் நடுவே அமைந்திருக்கும். ஒரு பழத்திற்கான அடிப்படைச் சத்துக்களையும், சக்தி களையும் ஒரு விதை எப்படி வழங்குமோ, அப்படிக் 'கோர்' என்பதும் நட்சத்திரம் எரிவதற்குரிய சக்திகளை வழங்குகிறது. 'கதிர்வீச்சு மண்டலம்' என்று சொல்லப் படும் பகுதி, கோரைச் சுற்றிக் காணப்படும் பகுதி. நட்சத்திரத்தின் எரியும் சக்தி யால் உருவாகும் கதிர்வீச் சின் ஆற்றல்கள் மேல்நோக்கிக் கடத்தப்படும் இடம் இதுதான். 'ஒளிக் கோளம்' என்றழைக்கப்படும் Photosphere என்பது, நட்சத்திரத்தின் வெளியே இருக்கும் மேற்பகுதியாகும். இங்கிருந்துதான் கதிர்வீச்சு சக்தி, ஒளியாகவும், வெப்பக் கதிர்களாகவும் மாறி விண் வெளிக்கு உமிழப்படுகிறது.

நட்சத்திரம் ஒன்று மிகப் பெரிதாக எரிந்து, வெப்பத்தை யும், வெளிச்சத்தையும் வெளிவிடும் செயல்பாட்டில் நடக்கும் அடிப்படை நிகழ்வு, ஐதரசன் ஹீலியமாக மாறுவதுதான். நட்சத்திரத்தின் கோருக்குள் ஐதரசனின் அணுக்கருக்கள் (Nucleus) ஒன்றாகச் சேர்ந்து நிறைந்தி ருக்கும். ஐதரசன் அணுக்கருவை எடுத்துக் கொண்டால், அது ஒரேயொரு புரோட்டானை மட்டுமே கொண்டிருக்கும். ஐதரசன் அணுக் கருக்கள் ஒன்றாகத் திரண்டிருக்கும் போது, அங்கே ஒரு நிகழ்வு நடைபெற ஆரம்பிக்கிறது. அந்த நிகழ்வின் பெயர் 'அணுக்கருப் பிணைப்பு' (Nuclear Fusion). மனிதனின் வரலாற்றில், அதிக சக்தியைப் பெறுவதற்கு மூலகாரணியாக அணுசக்தி விளங்குகிறது. அணுசக்தி மூலமாகவே அணு உலைகளில் தடையில்லா மின்சாரம் பெறப்படுகின்றது. அணுவின் கருக்களில் இரண்டு விதமான விளைவுகளை ஏற்படுத்துவதன் மூலம் நாம் அளவிட முடியாத சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம். அந்த விளைவுகளில் ஒன்று 'அணுக்கருப் பிணைப்பு' (Nuclear Fusion) மற்றது 'அணுக்கருப் பிளவு' (Nu-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





clear Fission). சரியாகக் கவனியுங்கள் ஒன்று 'Fusion' மற்றது 'Fission'. இரண்டு வெவ் வேறு அணுக்கருக்களை ஒன்றாகப் பிணைத்து ஒரே அணுக்கருவாக மாற்றும் செய லையே 'பியூஸன்' (Fusion) என்பார்கள். அதே நேரத்தில் ஒரு அணுக்கருவைப் பிளந்து, இரண்டு வெவ்வேறு அணுக்கருக்களாகப் பிரித்தெடுப்பது 'பிஸன்' (Fission) எனப்படும். இரண்டு அணுக்கருக்களை ஒரு அணுக்கருவா கச் சேர்க்கும்போதோ அல்லது ஒரு அணு கருவை இரண்டு அணுக்கருக்களாகப் பிரிக்கும் போதோ அளவிட முடியாத சக்தியும் சேர்ந்து வெளிவிடப்படுகிறது. இதை வாசிக் கும் நீங்கள் தமிழகத் தமிழனாக இருந்தால், அணுவில் நடக்கும் 'பியூஸன்', 'பிஸன்' ஆகிய இரண்டைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். காரணம், அணுசக்தி என்பது விரும்பியோ, விரும்பாமலோ தமிழகத் தமிழர்களின் வாழ்வுடன் ஒன்றாகக் கலந்துவிட்டது. அணு உலையில் ஏற்படும் கதிர்வீச்சினால் மக்களுக்கு ஆபத்து என்று கூறிக் கூடங்குளத்தில் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அது ஆபத்தா? இல்லையா? என்று ஆராய்வதைத் தற்போது சற்றுத் தள்ளி வைத்துவிட்டு, அணுக்கருப் பிளவின் போதும், அணுக்கருப் பிணைப்பின் போதும் என்ன நடக்கிறது என்பதை மட்டும் இப்போது நாம் அறிந்து கொள்ளலாம்.

யூரேனியம் 238 (Uranium U238) என்னும் ஒரு தனி மத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் அணுக்கருவுக்குள் 92 புரோட்டான்களும், 146 நியூட்ரான்களும் உண்டு (92+146=238). யூரேனியத்தின் அணுக்கருவுக்குள் இருக்கும் புரோட்டான்களும், நியூட்ரான்களும் 'திட அணுக்கருவிசை' (Strong Nuclear Force) என்னும் மிகப் பலமான விசையினால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப் பலமான விசையினால் ஒட்டப்பட்டிருக்கும் புரோட்டான்களையும், நியூட்ரான்களையும், நாம் ஏதோ ஒரு வழியினால் உடைப்போமேயானால், அவை ஒவ்வொன்றும் தனித்தனியாகப் பிளவுபடும். அப்போது பிரமாண்டமான சக்தி வெளிவிடப்படும்.


ஆனால் U238 ஐ அப்படி உடைப்பது மிகவும் கடினம். ஆனால் யூரேனியத்தில், 'யூரேனியம் 235' (U235) என்ற 'ஐசடோப்' (Isotop) ஒன்று உண்டு. அதாவது U235 இற்கு 92 புரோட்டான்களும், 143 நியூட்ரான்களும் இருக்கும். 3 நியூட்ரான்கள் இதில் குறைவாகக் காணப்படும். இந்த யூரேனியம் 235 இன் அணுக்கரு, யூரேனியம் 238 இன் அணுக்கருவைப் போல பலமானது அல்ல. மிகவும் பலவீனமானது. யூரேனியத்தின் ஐசடோப்பான U235 இன் அணுக் கருவை, மிகை வேகத்துடன் ஒரு நியூட்ரானால் மோதும் போது, அந்த யூரேனியம் அணுக்கரு சிதறடிக்கப்பட்டு, இரண்டாகப் பிளவுபடும். அப்படிப் பிளவுபடும் போது, புதிய தனிமங்களான பேரியமும்(Ba), கிரிப்டோனும் (Kr) உருவாகின்றன. கூடவே மூன்று நியூட்ரான்களுடன் பெரிய அளவில் சக்தியும் வெளிவரும். வெளிவிடப்பட்ட மூன்று நியூட்ரான்கள், மேலும் மூன்று U235 அணுக்கருவில் மோத, மூன்று மடங்கு சக்தியும், ஒன்பது நியூட்ரான்களும் வெளிவரும். இது சங்கிலி போலத் தொடர்ச்சியாக நடை பெற்று, மிகக்குறுகிய நேரத்தில் மிகப்பெரிய சக்தியை வெளிக் கொண்டுவருகிறது. இந்தச் சக்தி வெப்பமாக மாறி, அதன் மூலம் நீர் ஆவியாகி, அந்த நீராவி சக்கரம் ஒன்றைச் சுழற்றுவதால் மின்சாரத்தைப் பெறுகிறோம். இங்கு நடைபெற்ற நிகழ்வு 'அணுக்கருப் பிளவு' (Nuclear Fission). ஆனால் நட்சத்திரங்களின் உள்ளே நடைபெறுவது 'அணுக்கருப் பிணைப்பு' (Nuclear Fusion).


நட்சத்திரம் ஒன்று பிறக்கும் போது, ஐதரசன் அணுக் கருக்களைக் கொண்டுதான் உருவாகிறது. இந்த ஐதரசன் அணுக்கருக்கள் ஒரு கட்டத்தில் ஒன்றுடன் ஒன்று சேர ஆரம்பிக்கின்றன. ஐதரசனின் அணுக்கருவுக்குள் ஒரே யொரு புரோட்டான் மட்டுமே இருக்கும் என்று சொல்லியி ருக்கிறேன். இரண்டு ஐதரசன் அணுக்கருக்கள், அணுக்கருப் பிணைப்பின் மூலம் ஒன்று சேர்வதால், 'டுட்டேரியம்' (Duetarium) என்னும் ஐதரசனின் ஐசொடோப் உருவாகின்றது. அதாவது இரண்டு ஐதரசன் அணுக்கருக்களில் இருந்த, இரண்டு புரோட்டான்களும் ஒன்று சேர்ந்து, ஒரு நியூட்ரான் உருவாகி, ஒரு புரோட்டானையும், ஒரு




Top: Uranium-235 combines with a neutron to form an unstable intermediate, which quickly splits into barium-144 and krypton-89 plus three neutrons in the process of nuclear fission. Bottom: Deuterium and tritium combine by nuclear fusion to form helium plus a neutron.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நியூட்ரானையும் கொண்ட 'டுட்டேரியம்' என்னும் புதிய ஐசடோப் பிறக்கிறது. இதன் தொடர்ச்சியாக, 'டுட்டேரியம்' மேலுமொரு ஐதரசன் அணுக் கருவுடன், அணுக்கருப் பிணைப்பினால் ஒன்று சேர் கிறது. அப்போது, 'ட்ரிடியம்' (Tritium) என்னும் ஐதரச னின் மேலுமொரு புதிய ஐசொடோப் தோன்றுகிறது. இந்த 'ட்ரிடியம்' என்பது ஒரு புரோட்டானையும், இரண்டு நியூட்ரான்களையும் கொண்டிருக்கும். தொடர்ச்சியாக ட்ரிடியமும், டுட்டேரியமும் அணுக்கருப்பிணைப்பின் மூலம் ஒன்று சேர, ஐதரசன் இல்லாத வேறு ஒரு புதிய தனிமமான ஹீலியம் (Helium - He) உருவாகிறது. இங்கு ஹீலியம் உருவாகும் போது, ஒரு நியூட்ரான் வெளிவந்து, கூடவே பிரம்மாண்டமான சக்தியும் வெளிவிடப்படும். இவையெல்லாம் கணநேரத்தில் நடந்துவிடும். இதுவும் ஒரு சங்கிலித் தொடர் நிகழ்வாக (Chain reaction) நடை பெறுவதால், மாபெரும் சக்தி வெளிவந்து கொண்டே இருக்கும். கோர் ஒன்றிற்குள் நடக்கும் இந்தத் தொடர் விளைவினால் ஏற்படும் சக்தியின் மிகைவெப்பத்தில், கதிர் வீச்சு மண்டலத்திற்குள் கதிர்வீச்சுச் சக்தி பெருகி, நட்சத்தி ரம் வாழ்வதற்கு வழியமைத்துக் கொள்ளும். அங்கு நட்சத் திரத்தின் வெப்ப நிலை 100 பில்லியன் சதம பாகையாக இருக்கும். நட்சத்திரத்தின் கோருக்குள் எந்த அளவுக்கு ஐதரசன் அணுக்கருக்கள் இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு ஒரு நட்சத்திரம் எரிந்து கொண்டேயிருக்கும். சூரியனைப் போல இருபத்தைந்து மடங்கு பெரிதாக உள்ள நட்சத்திரமொன்றில் ஐதரசன் கிட்டத்தட்ட 700 மில்லியன் வருடங்களுக்கு எரியும். எந்த வாழ்வுக்கும் ஒரு முடிவு வந்தே தீர வேண்டுமல்லவா? நட்சத்திரங்களுக்கும் அந்த நிலை வரும்.

பல பில்லியன் ஆண்டுகள் தொடர்ச்சியாக எரிந்து கொண்டிருக்கும் நட்சத்திரத்தில் ஐதரசன் அணுக்கருக்கள் தீர்ந்து போக ஆரம்பிக்கும். அப்போது, ஐதரசன் அணுக்கருக்களுக்கு ஏற்பட்ட பியூஸன் தொடர்ந்து ஹீலியம் அணுக்கருக்களுக்குள் ஏற்பட ஆரம்பிக்கும். ஐதரசன், ஹீலியமாக மாறியது போல, ஹீலியம், கார்பனாக மாற ஆரம்பிக்கும், இது போலவே, கார்பன் ஒக்சிசனாகவும், ஒக்சிசன் சிலிக்கானாகவும், இறுதியாக சிலிக்கான் இரும்பாக மாறும். இரும்புதான் பியூஸனின் இறுதி நிலை. இரும்பு எந்த அணுப்பிணைப்புக்கும் ஆளாகாது. அதனால் ஒரு நட்சத்திரத்தின் முழுக் கோரும் இறுதியாக இரும்பு அணுக்கருக்களாக மாறும். இங்கு நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் அன்றாடம் பயன் படுத்தும் ஒரு டன் எடையுள்ள இரும்பு ஒரு மீட்டர் அகலம், ஒரு மீட்டர் நீளம், ஒரு மீட்டர் உயரமான கட்டியாக இருக்கலாம். ஆனால், ஒரு டன் எடையுள்ள இரும்பின் அணுக்கருவை மட்டும் ஒன்று சேர்த்தால், அவை ஒரு ஊசியின் முனையளவை விடச் சிறியதாகவே இருக்கும். என்ன நம்ப முடியவில்லையா? நாம் பயன்படுத்தும் இரும்பானது, இரும்பு அணுவால் (Fe) ஆனது. இரும்பு அணுவானது, அணுக்கருவையும், அதைச் சுற்றும் எலெக்ட் ரான்களையும் கொண்டது. எலெக்ட்ரானுடன் சேர்ந்த முழு அணுவையும், அணுக்கருவையும் ஒப்பிட்டால், ஒரு கிரிக்கெட் மைதானத்தையும், அந்த மைதானத்தின் நடுவே விழுந்து கிடக்கும் கிரிக்கெட் பந்தையும் ஒப்பிடு வது போல. அவ்வளவு சிறியது அணுக்கரு. ஆனால், இரும்பின் முழு நிறையும் அணுக்கருவினில்தான் இருக் கின்றது. சுற்றியிருக்கும் எலெக்ட்ரான்களுக்கு நிறை கிடையாது. இப்போது இப்படிச் சிந்தித்துப் பாருங்கள். நூறு கிரிக்கட் மைதானங்களின் மொத்த எடையும், நூறு கிரிக்கட் பந்துகளின் எடைக்குள் இருக்கின்றன என்றால், அந்தக் கிரிக்கட் பந்துகள் எவ்வளவு எடையாக இருக்க வேண்டும்? நூறு கிரிக்கட் பந்துகளை ஒன்று சேர்த்தால் வரும் சின்னப் பந்தில் அந்த நூறு மைதானங்களின் எடையே அடங்கியிருக்கின்றன. இது போலத்தான் நட்சத்தி ரத்தின் கோர் இரும்பாக மாறியதும் அதன் எடை நினைக்க முடியாத அளவு அதிகரித்துப் போயிருக்கும். இரும்பின் அணுக்கருக்கள் மட்டும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய கோளக் கட்டியாக மாறினால், அதன் எடை மில்லியன் பில்லியன் பில்லியன் டன்களாக அதிகரித்துக் காணப்படும்.

நட்சத்திரத்தின் கோருக்குள் ஐதரசன் பியூஸன் நடை பெறும் போது, கதிர்வீச்சு மண்டலத்தின் (Radiative Zone) கதிர்வீச்சினால் நட்சத்திரம் உயிர்ப்புடன் இருக்கும். ஐதரசன் தீர்ந்து போகும் போது, கதிர்வீச்சு மண்டலத்தினுள் வெற்றிடம் தோன்ற ஆரம்பிக்கும். இது தொடர்ந்து நடைபெறும் போது, நட்சத்திரத்தின் மேற்பரப்புப் பகுதியான 'ஒளிக் கோளம்' (Photo-sphere) மிகப் பெரிதாக ஊத ஆரம்பிக்கும். இப்படி நட்சத்திரம் ஊதுவதையே சுப்பர் நோவா நிலையென்கிறோம். நட்சத் திரத்தின் மேற்பரப்பு ஒரு பக்கம் பெரி தாகிக் கொண்டிருக்க, நடுப்பகுதியில் வெற்றிடம் தோன்ற, மையக் கோரின் எடை அதிகரிக்கத் தொடங்கும். கோர் முழுமையான இரும்பாக மாறியதும் ஏற்படும் எடையின் அதிகரிப்பால், ஈர்ப்பு விசையும் முடிவில்லாமல் அதிகரிக்கத் தொடங்கும். அதிக ஈர்ப்புவிசை உள்ளிழுக்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் ஏற்படும் திடீர்ச் சுருக்கத்தின் தூண்டுதல் (Trigger), நட்சத்திரத்தைப் திடீரென வெடிக்கச் செய்கிறது. இந்த நடவடிக்கைகளெல்லாம் மிகச் சிறிய காலப்பகுதியில் நடந்து விடுகின்றன. அதாவது ஒரு நொடிக்குக் குறைவான நேரத்தில் நடந்துவிடுகிறது.

ஒவ்வொரு நட்சத்திரமும் எவ்வளவு பருமனைக் கொண்டிருக்கின்றனவோ, அதைப் பொறுத்து அந்த நட்சத்திரம் இறக்கும் போது, வெவ்வேறு வகையாக வடிவங்களாக மாறுகின்றன. நட்சத்திரங்களின் பருமன், சூரியனுடன் ஒப்பிட்டே அளக்கப்படுகிறது. சூரியன் நட்சத்திரங்களில் மிகச் சிறியது. சூரியனின் பருமனுடைய ஒரு நட்சத்திரம் இறந்து போகுமானால், அது 'வெள்ளைக் குள்ளன்' (White Dwarf) என்னும் நிலையை அடையும். சூரியனை விடப் பல மடங்கு பருமனுள்ள நட்சத்திரங்கள், அவற்றின் பருமனுக்கேற்ப 'சுப்பர் நோவா' (Super Nova), 'ஹைபர் நோவா' (Hyper Nova) நிலையை அடைந்து, நியூட்ரான் நட்சத்திரங்களையும், கருந்துளைகளையும் உருவாக்கும். சூரியனைப் போல 100 மடங்கு பருமனுள்ள நட்சத்திரத்தின் மையக் கோர், மொத்தமாக இரும்பு அணுக்கருவாக மாறுகின்றது என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அதன் கோர் மட்டுமே எவ்வளவு பெரியதென்று யோசியுங்கள். அவ்வளவு பெரிய கோர் முழுவதும் இரும்பின் அணுக்கருவால் நிரம்பியிருந்தால், அது எவ்வளவு எடையுடன் இருக்கும் என்பது புரிகிறதா? மனிதனால் கற்பனையே செய்ய முடியாத பாரத்துடன் அந்த நட்சத்திரத்தின் கோர் இருக்குமல்லவா?




அதனாலேயே ஈர்ப்பு விசையிலும் முடிவற்ற நிலையை அடையத் தொடங்கும். இந்த நிலையில் வெடிக்கும் போது எல்லையற்ற ஈர்ப்பு விசையுடன் கூடிய கருந் துளை உருவாகின்றது. அந்தக் கருந்துளை தன்னுள் அனைத்தையும் உள்வாங்கி விழுங்கிக் கொள்கிறது. அதன் இழுவை விசையில், ஒளி கூட தப்ப முடியாமல் உள்ளே சென்று விடுகின்றது.


இதுவரை கண்டுபிடித்ததிலிருந்து, 'VY Canis Majoris' என்ற நட்சத்திரமே அண்டத்தில் மிகப் பெரிய நட்சத்திரமாக அறியப்படுகிறது. இது ஒரு 'சிவப்பு இராட்சச நட்சத்திரம்' (red hypergiant) ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனைப் போல 1500 மடங்கு பெரியது. இந்த நட்சத்திரம் வெடிக்குமானால், அண்டத்திலேயே பெரிய கருந்துளையொன்று இதன் மூலம் உருவாகும். நட்சத்திரங்கள் பெரிதாக இருந்தால், அவற்றின் வாழும் காலமும் குறைந்து போகும். ஒரு நட்சத்திரம் வெடித்துக் கருந்துளை உருவாவதற்கான விளக்கங்களைப் பார்த்தோம். அப்படிப் பார்க்கும் போது, 'ஐசடோப்' என்ற சொல் அடிக்கடி குறுக்கிட்டது. 'ஐசடோப்புகள் என்றால் என்ன?' என்று ஒரு கேள்வி உங்களுக்குத் அப்போது தோன்றியிருக்கலாம். அதனால் ஐசோடோப் என்றால் என்ன என்பதையும் நாம் பார்த்துவிடலாம்.




ஐதரசன் வாயுவைப் (H2) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இரண்டு ஐதரசன் அணுக்கள் (2H) ஒன்று சேர்வதால் உருவாவது ஐதரசன் வாயு. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தனிமங்களில் (Elements) அணு எண்ணிலும், அணு நிறையிலும் குறைந்தது ஐதரசன் அணுதான். பூமியில் உள்ள பொருட்கள் எல்லாம் அணுக்களால் ஆனவை என்பதை, நீங்கள் சின்னக் குழந்தையாக இருக்கும் போதே அறிந்து கொண்டிருப்பீர்கள். அணுக்கள், இலத்திரன் (Electron), நியூட்ரான் (Neutron), புரோட்டான் (Proton) ஆகியவற்றால் ஆனவை என்பதும் உங்களுக்குத் தெரியும். புரோட்டானும், நியூட்ரானும் அணுவின் கருவில் இருப்பவை. எலெக்ட்ரான் அந்த அணுக்கருவைச் சுற்றிக் கொண்டிருப்பது. எலெக்ட்ரான் எதிரேற்றமும் (-), புரோட்டான் நேரேற்றமும் (+), நியூட்ரான் ஏற்றம் ஏதும் இல்லாமல் பூச்சியமாகவும் இருக்கும். இதில் எலெக்ட்ரானுக்கு நிறை இல்லை. ஆனால் புரோட்டானுக்கும், நியூட்ரானுக்கு தலா 1 என்னும் நிறை இருக்கிறது. ஒரு அணுவின் கருவில் இருக்கும் புரோட்டான்களின் எண்ணிக்கை அந்த அணுவின் 'அணு எண்' (Atomic Number) என்றழைக்கப்படுகிறது. தனிமங்களின் அணு எண்கள் மாறுபடும் போது, அவை வெவ்வேறு தனிமங்கள் ஆகின்றன.

அதாவது ஒவ்வொரு தனிமத்துக்குமெனத் தனித்தனியாக ஒரு அணு எண் இருக்கிறது. 'அணு எண் 1' என்றால் ஐதரசன் அணு என்றும், 'அணு எண் 2' என்றால் ஹீலியம் என்றும் தனிமங்களின் அணு எண்களுக்கேற்ப மாறிக் கொண்டே போகும். இதுவரை 118 தனிமங்களைப் பூமியில் நாம் கண்டுபிடித்திருக்கிறோம். அணு எண்கள் போலவே அணு நிறையும் கணக்கிடப்படுகிறது. ஒரு அணுவின் அணுக் கருவுக்குள் இருக்கும் புரோட்டான்களையும், நியூட்ரான்களையும் ஒன்று சேர்த்தால் வருவது அந்த அணுவின் 'அணு நிறை' (Atomic Mass) எனப்படுகிறது. ஒரு தனிமத்துக்கு குறித்த எண்ணிக்கையில் புரோட்டான்கள் இருப்பது போல, குறித்த எண்ணிக்கையில் நியூட்ரான்களும் இருக்கும். அபூர்வ மான நிலையில் சில தனிமங்கள், மாறுபட்டு நியூட்ரான்களின் எண்ணிக்கையைக் கொண்டிருக்கும். உதாரணமாக, 'லிதியம்' (Lithium) என்னும் தனிமத்துக்கு 3 புரோட்டான்களும், 4 நியூட்ரான்களும் இருக்கும். அதாவது அதன் 'அணு நிறை 7' ஆகும். ஆனால் 'அணு நிறை 6' கொண்ட லிதியமும் உண்டு. அதாவது 3 புரோட்டான்களும், 3 நியூட்ரான்களும் அதில் காணப்படும். இந்த இரண்டு வெவ்வேறு அணு நிறைகளைக் கொண்ட லிதியங்களும் 'ஐசடோப்புகள்' (Isotopes) என்று சொல லப்படுகின்றன. இப்போது, ஐசோடோப்புகள் என்றால் என்னவென்று நிச்சயம் உங்களுக்குப் புரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன். சரி, புரியாவிட்டாலும் ஒன்றும் கெட்டுப் போவதில்லை. இங்கு சொல்லப்பட்டவை உங்களுக்குப் புரிந்தால் மிகவும் மகிழ்ச்சியே! ஒரு பேச்சுக்கு இவை புரியவில்லையென்றாலும் எந்தக் கவலையும் தேவையில்லை. இவை தெரியாமலே நாம் தொடரைத் தொடர்ந்து செல்லலாம்.


பிற்குறிப்பு: இது ஒரு தகவலுக்காகத்தான். Fusion க்கும் Fission க்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் இதன் மூலம் புரிந்து கொள்ளலாம். 'ஐதரசன் குண்டு' (Hydrogen Bomb) பியூஸனினால் உருவாகும் சக்தியை வெளிப்படுத்துகிறது. 'அணு குண்டு' (Atom Bomb) பிஸனினால் உருவாகும் சக்தியை வெளிப்படுத்துகிறது. இவையிரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன தெரியுமா? ஒரே அளவுள்ள ஐதரசன் குண்டு, அணு குண்டை விடஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தது. இரண்டாம் உலக மஹா யுத்தத்தில் பாவிக்கப்பட்ட மொத்தக் குண்டுகளின் சக்தி, ஒரு ஐதரசன் குண்டின் ஐந்தில் ஒரு பங்குக்கே சமன். ஒரு கிலோகிராம் ஐதரசனை, ஹீலியமாக மாற்றும் போது ஏற்படும் சக்தி, இருபதாயிரம் டன்கள்

நிலக்கரி எரிவதால் உருவாகும் சக்திக்குச் சமன். இப்போது பியூஸன் நடைபெறும் நட்சத்திரத்தின் சக்தி என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்

## ஈழவேந்தன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது













காலாண்டு தளிர் சஞ்சிகையின் யூலை மாத வெளியீடு மார்க்கம் நகரில் அமைந்திருக்கும் Pleasant Banquet Hall இல் மிக சிறப்பாக இடம் பெற்றன. இதற்கான அனுசரனையினை தமிழ் சி.என்.என் இயக்குனர் திரு.அகிலன் அவர்கள் நட்புடன் பொறுப்பேற்று இருந்தார். சஞ்சிகை யின் முதற் பிரதியினை தமிழ் பூங்கா அருள் சுப்ரமணியம் அவர்களால் திரைப்படத்துறையிலும் ஒலிபரப்புத்துறையிலும் முன்னணி வகிக்கும் ராகுலன் சனா அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட் டது. தொடர்ந்து முன்னாள் இலங்கை நாடளுமன்ற உறுப்பினரும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதியுமான ஈழவேந்தன் அவர்களுக்கு மூத்த தமிழ் பற்றாளருக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதினை தளிர் ஆசிரியர் அவர்களால் வழங்கிவைக்கப்பட்டது. மற்றும் தமிழ் மொழி போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை வீடு விற்பனை முகவரும் தளிர் சஞ்சிகையின் ஆலோசகருமான சங்கர் மாணிக்கம் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். (படங்கள்: Gdigitalphotography)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்

## போரதீவு கனடிய ஒன்றியம் ஒன்றுகூடல் - 2015
























நில வளமும் நீர் வளமும் இயற்கை எழில் கொஞ்சிடும் கதிரவன் விழித்திடும் கிழக்கின் ஈழத்திரு நாட்டின் வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழர் மரபோடும் போரரசன் வெற்றி பாடும், மட்டு /போரதீவு கனடிய மக்களின் கோடைகால ஒன்று கூடலும். களிப்பூட்டும் நிகழ்வுகளும். மண்வாசனைக்கேற்ற நாசுவை மாறாத நல்வகை உணவுகளோடும் மிக சிறப்பாக 15ம் திகதி ஆகஸ்ட் 2015 அன்று காலை 10.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணிவரை Patticoat Greek Park 1100 Whites Road Pickering இல் பல் வகை நிகழ்வுகளுடன் இனிதாக நடைபெற்றன. வந்தோரை வரவேற்பதில் இருந்து உணவு பரிமாறும் விதங்களும் தேன் தமிழின் மொழியால் அன்பு வார்த்தைகளும் அனைவரையும் ஈர்த்ததுடன் நேரம் கடந்தும் நேர்த்திறனாய் நடந்து கொண்ட ஏற்பாட்டாளர்களான கோபால், நேசன், தேவா, மனோ, கூடவே விசுவும் மற்றும் ஒழுங்க மைத்த குழுவினரும் இனிமையோடு இதமாகவே பழகியது மனிதத்தை புதுப்பித்துக்கொண்டது. கிராமத்து வாசனை புலம் பெயர்ந்தபோதும் உறவுகள் ஒன்று கூடும் போது புனிதப்பட்டுக்கொள்கின்றன. (தளிரன்) படங்கள்: மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிரில் படர்ந்த நிகழ்வுகள்

## உடல் உறுப்புக்களை தானம் செய்வதன் மூலம் இன்னும் ஒரு உயிரை வாழ வையுங்கள்











... உணவு கொடுத்தோம் உடை கொடுத்தோம் உறையுள் கொடுத்தோம் உன்மை அன்புடன் உள்ளத்தை கொடுக்க முன் வாருங்கள்..

CASSA என்றழைக்கப்படும் The Council of Agencies Serving South Asian (தென் ஆசிய மக்களுக்குச் சேவை செய்யும் முகவர்களின் ச பை) 16-08-2015 அன்று திக்கட் கிழமை மாலை 7.00மணிக்கு ஸ்காபுறோ கெனடி வீதியில் அமைந்துள்ள Dorset Park Community Hub மண்டபத்தில் ஊடகவியலாளர் மகாநாடு ஒன்றினை நடத்தியது. இதில் சபையின் இயக்குனர் திரு நீதன் சான் மகாநாட்டினை ஆரம்பித்து வைத்தார். மற்றும் தனது 20 வயதில் நுரையீரல் பாதிக்கப்பட்டு மரணத்தின் பிடியில் நின்று உடல் தானம் பெற்றசெல்வி. சில்பா ராஜீ அவர்கள் மனித உயிர்களையும் உடல் தானங்கள் பற்றியும் மேன்மைபடுத்தி கூறுகையில் அந்த நிசப்தமான நேரத்தில் ஊடகவியலாளர்களின் மனதை நெகிழ வைத்ததுடன் விம்மல்கள் உறுத்திய கண்களுடன் சற்று அனைவரும் வார்த்தைகளின்றி அன்பின் ஊற்றுக்குள் உறைந்து போயினர். தொடர்ந்து சபையின் திட்ட முகாமையாளர் சிம்யா ஹசன் உரையாற்றினார் (தளிரன்) படங்கள்: மூர்த்தி






கனடிய அண்ணாமலை
பல்கலைகழக
பத்தாண்டு நிறைவும்
பட்டமளிப்பு விழாவும்
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்

## தமிழ் இனி...


















தேன் தமிழ் சுவையாய் காதினில் இனித்திட புதிய பரிமாணத்துடன் கனடிய காற்றலைகளில் மற்றுமோர் உதயம். செந்தாமரை வாரம் தோறும் செந்தமிழ் இதழாய் வலம் வர. ஒலியும் ஒளியும் தொலைகாட்சியாய் கண்களில் பதிந்திட வந்ததோ காற்றலை தமிழ் வானொலி தமிழ் இனி... என்றும் அதன் சிறப்போ தனி... நல்லதோர் அறிவிப்பாளர்கள் குழாம் கொண்டு ஒலித்திடுது FM 105.9 இல் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம். தளிர் இங்கே..

படங்கள்: அனல எக்ஸ்பிரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்

## பாடும் மீன்களின் கோடை கால ஒன்று கூடல் - 2015


























படங்கள்: G Digital Photography

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரி... சிரி... சிரி...



"வீட்டுல ரெண்டு குக்கர் இருந்தும் ஏன் யூஸ் பண்ண மாட்டிங்கிற?"

"டாக்டர் என்ன வெய்ட் போட கூடாதுன்னு சொல்லிட்டார்ல..."



"இன்னிக்கு மழை பெய்யுமா?"

"பெய்யாது"

"அப்ப... உங்க வீட்டு குடைய இரவல் குடுங்க.."



"எனக்குத்தான் உடம்பு சரியாகிடுச்சே ஏன் என்னைய ஆஸ்பத்திரியிலேயே இன்னும் 4 நாள் இருக்க சொல்றீங்க?"

"நீ வீட்டுக்கு வந்துட்டா, உன் தங்கச்சி உங்க வீட்டுக்குப் போயிடுவாளே!"



"நம்ம மன்னருக்கு அடிக்கடி சமாதானத் தூது வருகிறதே"

"அதனாலென்ன உனக்கு?"

" 'புறா'மையா இருக்கு"



"ஒரே ஒரு போர்டு எழுதி அந்த ஓட்டல்ல புட்டு வியாபாரம் பிச்சுக்கிட்டு போக வைச்சுட்டியாம்லா... எப்படி?"

"வாசல் போர்டுல, 'கண்ணா புட்டு தின்ன ஆசையா?' ன்னு எழுதி வைச்சேன்..."



"கஷ்டப்பட்ட ஒருத்தனுக்கு உதவி செய்ததனாலயா உன்ன கைது பண்ணினாங்க?"

"ஆமாம்... பக்கத்து வீட்டுக்கு வந்த திருடன், சாமான்களை எடுத்துட்டுப் போக கஷ்டப்படுறதப் பார்த்து 2 கோணிப் பை குடுத்து உதவினது தப்பாம் "

"சைக்கிள் கடையில திருடும் போது மாட்டிக் கிட்டதா சொன்னீயே என்னாச்சு?"

"பின்னி பெடல் எடுத்துட்டாங்க..."



"இந்த நேரத்துல உன்ன யாருடி மிஸ்டு கால் குடுத்து கூப்பிடுறது?"

"வேற யாரு... ராப்பிச்சைக்காரன் தான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHAT IF **YOU COULD** CHANGE A CHILD'S LIFE - IN JUST 2 WEEKS?

What if your child no longer had to deal with the belief that they are illiterate or less intelligent than their peers?

**MAKE THEM THE CHAMPIONS THEY WERE MEANT TO BE**

AT AMAZING KIDS CANADA, WE WANT TO EDUCATE, ENLIGHTEN AND EMPOWER THOSE WITH LEARNING DIFFERENCES AND DIFFICULTIES.



**SEE HOW WE CAN HELP YOUR CHILD**

**At Amazing Kids Canada, we want to educate, enlighten and empower.**



**WE EDUCATE, ENLIGHTEN AND EMPOWER**

Children facing these problems no matter how minor it is, can feel isolated, leading them to low self esteem and depression. We hold the power to change this problem at its root, with the most advanced scientific technologies.



**ALL CHILDREN DESERVE THE BEST SHOT AT LEARNING**

The changes are permanent and positive. Within a few weeks time you can see your child achieving their full cognitive and functional potential, which many times may not be achievable through regular routine and practices. The results are Amazing.

**WWW.AMAZINGKIDSCANADA.COM**

*AmazingKidsCanada*

Educate-Enlighten-Empower

**Our Services:**

- Brain Training Programs
- Academic Tutoring for Math, English and French
- Crash Courses in Math for High School and University
- Mentoring and Counselling

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் குழப்பங்கள்

-ராஜ்சிவா


அறிவியலை, ஆன்மீகம் இடறிவிட நினைக்கும் ஒரு இடமுண்டு. "எதையும் அறிவியலால் உரு வாக்க முடியும், ஆனால் ஒரு உயிரை அறிவியலால் உருவாக்க முடியாது" என்பதுதான் அது. அறிவியலும், ஆன்மீகமும் மோதும் போது, இறுதி வாதமாக, இது முன் வைக்கப்பட்டு, விவாதம் அந்த நிலையிலேயே முடிவுக் குக் கொண்டு வரப்படும்.

. "உயிரை உருவாக்கக் கடவுளால் மட்டுமே முடியும்" என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே, இன்று வரை உலகமும் இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அறிவியல் என்றாவது ஒரு உயிரை உருவாக்கிவிட்டால், அனைத்து நம்பிக்கைகளுமே தடுமாறிவிடும். ஆனால், அப்படி யொரு நிகழ்வு மனிதனால் நிகழ்த்தப்படக் கூடாது என்பதுதான் என் விருப்பமும் கூட.

க்ளோனிங் முறையில் உயிரினங்கள் உருவாக்கப் பட்டது போல. மனிதனையும் எங்கோ ஒரு இடத்தில் க்ளோனிங் முறையில் இரகசியமாக உருவாக்கியிருப் பார்கள் என்று பலர் நம்புகிறார்கள். அந்தச் செய்தி வெளியில் கசிந்தால், பல சிக்கல்கள் உருவாகலாம் என்பதால் அதை வெளிவிடாமல் வைத்திருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். அதுபோல, ஒரு கலமுள்ள உயிரினத்தையும் மனிதன் உருவாக்கி விட்டான் என்ற வதந்தியும் உண்டு. அறிவியலின் பல கண்டுபிடிப்புகள் சாதாரண மனிதன் முன்னால் சமர்ப்பிக்கப்படாமல், இரகசியமாகவே வைக்கப்பட்டிருப்பது என்னவோ உண்மைதான். அதில் இவையும் ஒன்றாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

சரி நான் இதை ஏன் இங்கு சொல்கிறேன் தெரியுமா?

சமீபத்தில் விஞ்ஞானிகள் ஒரு புரட்சியைச் செய்திருக் கிறார்கள். அது புரட்சியா? இல்லையா? என்று இதைப் படித்தபின்னர் நீங்கள்தான் சொல்ல வேண்டும். அது வேறு ஒன்றுமில்லை, விஞ்ஞானிகள் ஒரு எலியை




'See & Through' வாக உருவாக்கியிருக்கிறார்கள். அதாவது, எலியைப் பார்க்கும் போது, அதன் உள்ளே உள்ள உறுப்புகள் அனைத்தும் வெளியே தெரிவது போல (கண்ணாடி போல) மாற்றியிருக்கிறார்கள். "Tranpar-ent' என்று சொல்வார்களே! அப்படி 'ஒளி ஊடுருவும்' தன்மையுடன் அந்த எலி காணப்படும். அதன் எலும்புகள் தவிர்ந்து, வெளித்தோல், உள்ளே இருக்கும் உறுப்புகள் அனைத்தும், கண்ணாடி போன்றே காணப்படும். நோய் களையும், அதன் காரணிகளையும் இலகுவாக இதனால் கண்டுபிடிக்க முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.


உங்கள் மனதில் தோன்றும் கேள்வி புரிகிறது. அந்த எலி உயிருடன் இல்லை. "இவை ஆராய்ச்சிக்கானது மட்டு மேயன்றி உயிர் வாழ்வதற்கானதல்ல" என்று விஞ்ஞானி கள் கூறியிருக்கிறார்கள்.

நான் கண்ணாடி முன்னால் நின்று கொண்டு, என்னை ட்ரான்ஸ்பரண்டான உடலுறுப்புகளுடன் ஒரு நிமிடம் கற் பனை செய்து பார்த்தேன். அப்போது மனதில் தோன்றிய உருவம் கொடுத்த அதிர்ச்சி, என் எதிரிக்கும் வரக்கூடாத ஒன்று. நீங்களும் கண்ணாடி முன் நின்று ஒருதரம் கற்பனை செய்து பாருங்கள். இப்போது அந்த எலியின் படங்களைப் பாருங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கம்பராமாயணம்

## ஒரு நோக்கு

**ஆக்கம்:**
**இலக்கியப் பிரியன்**



தமிழ் இலக்கியப் பரப்பிலே சங்க காலத்து எட்டுத் தொகை பத்துப்பாட்டு என்ற பதினெட்டு இலக்கியத் தொகுப்புக்களும் பதினெண் மேற்கணக்கு நூல்களும் மிகப் பழைமை வாய்ந்தவை. சங்க மருவிய காலத்தனவாக திருக்குறள், நாலடியார் முதலாகவுள்ள பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரு கின்றன. இவற்றுடன் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரு பெருங்காப்பியங்களும் சங்க மருவிய காலத்திலே தோற்றம் பெறலாயின. இவை இரண்டும் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றவையாகும். அவற்றைத் தொடர்ந்து பல்லவர் ஆட்சிக் காலத்தில் சைவ - வைஷ்ணவ - சமணப் பக்தி இலக்கியங்கள் தமி ழில் தோன்றியுள்ளன. 12 ஆழ்வார்களும், நாயன்மார் நால்வரும் தமிழில் பக்தி இலக்கியம் பாடிய பெரும் புலவர்களாவர். பல்லவர் கால வைணவப் பக்தி இலக்கி யங்கள் கம்பருக்கு இராமவதாரத்தைப் பாடுவதற்கு உந்து சக்தியாகவும் இருந்திருக்கலாம்.

தமிழகத்திற் சோழர் ஆட்சிக் காலத்திற் சமய பண்பாட்டு அடிப்படையில் மேலோங்கிக் காணப்பட்டது. சிவன் விஷ்ணு ஆலயங்களும் பரவலாகக் கட்டப்பட்டன. அக்காலத்திலே தமிழில் பேரிலக்கியங்களும் தோற்றம் பெறலாயின. அவற்றுள் சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் பெருங்காப்பியங்களும், சூளாமணி, நீலகேசி, யசோதரகாவியம், உதயண குமாரகாவியம், நாக குமாரகாவியம் என்ற ஐஞ்சிறு காப்பியங்களும் ஆக்கம் பெறலாயின. இவற்றைவிட வைஷ்ணவப் பெருங்காப்பியமாக கம்பராமாயணமும், சைவசமயப் பெருங்காப்பியமாக சேக்கிழாரது பெரிய புராணமும் தோன்றி சோழர் காலத்தைக் காப்பிய இலக்கிய காலம் எனச் சிறப்புச் செய்தன. அவற்றுள் கம்பராமாயணம், பெரிய புராணம், சீவகசிந்தாமணி என்ற பேரிலக்கியங்கள் தமிழ் இலக்கியத்திற்கு வளமும் பெருமையும் சேர்த் தன. தமிழ் இலக்கியப் பரப்பை நன்கறிந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவற்றில் மனத்தைப் பறி கொடுத்து வருமாறு பாடியமை நோக்கத்தக்கது:

> "யாமறிந்த புலவர்களில் கம்பனைப்போல்
> வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
> பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
> உண்மைவெறும் புகழ்ச்சி இல்லை" ( பாரதியார்)

மேலும், "கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" எனப் பாரதியார் கம்பனுக்கு ஏற்றம் கொடுத்துப் பாடுவதைக் கேட்கும்போது கம்ப ராமா யணத்தின் சிறப்புப் புலனாகின்றது. 'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'கம்பன் வீட்டுக் கைத்தறியும் கவி பாடும்' என்னும் ஆன்றோர் வழக்காறுகள் கம்பரின் சிறப்பைப் பெரிதும் பாராட்டுகின்றன. மேலும், கவிச்சக்கரவர்த்தி கம்பர் எனவும், "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்" எனவும் கம்பனைப் போற்றிப் புகழ்வர். ஏரெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி முதலியனவும் கம்பரால் பாடப்பட்டவையாகும்.

கம்பர் வாழ்ந்த காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், 12 ஆம் நூற்றாண்டு எனவும் கூறப்படுகிறது. அவர் 1ம் குலோதுங்க சோழன் காலத்தில் வாழ்ந்தவர் என ஆய்வாளர் குறிப்பிடுவர். இராம அவதாரத்திலும் தமிழ் இலக்கியத்திலும் ஈடுபாடுகொண்ட கம்பர் இராமாவதாரத்தைப் பாட முன்வந்தார். வால்மீகி முனி வர் வடமொழியில் பாடிய இராமாயணத்தைக் கம்பர் நன்கறிவார். இராமன் கதை பற்றிய குறிப்புக்கள் அவருக்கு முந்திய தமிழ் இலக்கியங்களிற் பெரிதும் பாடப்பட்டிருந்ததையும் கம்பர் நன்கறிவார். புற நானூறு - அகநானூறு ஆகிய சங்க இலக்கியங்களிலும் இராமாயணம் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

(அ) இராமன் இலங்கைக்குப் படைஎடுத்துப் புறப் படும் முன்னர் ஆலின்கீழிருந்து மந்திர ஆலோச னை செய்த போது அதற்கு இடையூறாக ஒலிஎழுப்பி ஆரவாரம் செய்த பறவைகளின் ஒலியை தனது கைஅசை வால் இராமன், அடக்கினான் என்ற செய்தி அகநானூற்றில் உள்ளது.
(ஆ) இராவணன் சீதையைக் கவர்ந்து ஆகாயவழியே செல்லும்போது தனது அணிகலன்களை மூட்டையாகக் கட்டி காட்டிலே வீசினாள் என்றும், அத னைக் கண்டெடுத்த வானரங்கள், அவற்றைத் தாம் அணிந்துகொள்ளத் தெரியாமல் தாறுமாறாக அணிந்து விளையாடின என்ற செய்தியும் சங்க இலக்கியததில் இடம்பெற்றுள்ளது.
(இ) தொடர்ந்து வைணவப் பக்தி இலக்கியங்களில் குலசேகரஆழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் ஆகியோர் இராமாவதாரத்தில் ஈடுபாடுடையோராக இராம அவதாரத் தைப் பல்வேறு நிலைகளிலிருந்து பாடியுள்ளனர்.

தமிழ் மக்களிடையே விஷ்ணு வழிபாடும், நாட்டுப்புற மக்களி டையே இராமகதை பெற்றிருந்த செல் வாக்கும், கம்பனுக்கு இராமன்மீது மிக்க பக்தி இருந்தமையும், இராமர் கதையைக் கம்பராமாயணம் என்னும் மாகாவியமாகப் பாடத் தூண்டியாக அமைந்தன. "காசில் கொற்றத்து இராமன் கதை.." யைப் பாடிய கம்பன் அதற்கு இராமாவதாரம் என்றே பெயர் சூட்டினார். கம்பராமாயணத்தை நன்கு படித்துச் சுவைத்த இலக்கிய விமர்சகராகிய வ.வே.சு. ஐயர் "கம்பராமாயணம் இலியட், ஏனீது, துறக்க நீக்கம், மகாபாரதம் போன்றவற்றை எல்லாம் வெல்லும் சிறப்புடையது என்பது மட்டுமன்றித் தனக்கு முதல் நூலான வால்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியம்" என்று பாராட்டி எழுதியுள்ளமையும் நோக்கத்தக்கது.

கம்பராமாயணத்தின் அமைப்பானது, பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம். என ஆறு காண்டங்களையும், 113 படலங்களையும், 10000 க்கு மேற்பட்ட விருத்தப் பாடல்களையும் கொண்டதாகும். மானுடம் பாடும் காப்பியமாகவே கம்பர் இதனைப் பாடியுள்ளார். இக்காவியத்தில் இடம்பெறும் மானுடர் அனைவரும் நயத்தக்க நாகரிகம் உடையவராகப் படைக்கப்பட்டிருக்கின்றனர். சான்றாக ஒரு பாடலை நோக்கலாம், இராமன் தனக்குப் அரச பதவி கிடைக்கிறது என்றதும் நயக்கவுமில்லை, அது கிடைக்காதபோது வெறுக்கவுமில்லை. எந்த நிலையிலும் இராமனது முகம் அன்றலர்ந்த செந்தாமரை போன்று காணப்பட்டதாக வரும் பாடலைப் படைத்தார்:

இப்பொழுது எம்மனோரர் இயம்புதற் கெளிதோ
செப்பருங் குணத்துராமன் திருமுகம் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா!



இவ்வாறாக, கம்பர் காவிய நிகழ்வுகளைத் தன் சொல் லாற்றலால் ஓவியமாகவே படைத்துள்ளார். இக்காப்பியம் கம்ப சித்திரம் எனப் புகழாரம் பெற்றது. இராமன் முடி துறந்து சீதை யோடும் தம்பி இலட்சுமணணோடும் கானகம் செல்கிறான். அக்காட்சியை பின்வரும் பாடலில் ஓவிய வடி வமாகப் பாடியிருப்பது இரச னைக்குரியதாகும்.

'வெய்யோன் ஒளிதன் மேனியின் விரிசோதியின் மறைய

பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்

மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ

ஐயோ இவன்வடிவு என்பதோர் அழியா அழகுடையான்.'

வால்மீகியும் கம்பரும் இராம கதையைப் பாடிய போதிலும் இருவர் படைப்புக்களிலும் வேறுபாடுகளும் தனித்துவமும் சிறந்து காணப்படுகின்றன. வால்மீகி இராமாயணத்தில் இராமனும் சீதையும் அரச குடும்பத்தினராகப் படைக்கபட்டுள்ளனர். ஆனால் கம்பர் அவர்களைத் தெய்வங்களாகவே படைத்துள்ளார். இதனால், கம்பராமாயணம் தோன்றிய பின்னர் இராம வழிபாடு இந்தியா முழுவதும் பெருகியது என்பர். தமிழர் பண்பாட்டுக்கு அமைவாக கதை நிகழ்வுகளைக் கம்பர் படைத்திருக்கும் மாண்பே தனித்துவமானது. தமிழ் மொழியின் செழுமையையும் தமிழ்ப் பண்பாட்டின் பெருமையையும் மானுடத்தின் சிறப்புக்களையும் பேசும் பெரும் காப்பியம் கம்பராமாயணம் என்று கூறுவது மிகப் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான பகுதி



## பூந்தளிர்

**அன்புத்தம்பி தங்கைகளே இது உங்களுக்கான பகுதி பூந்தளிர்.**

இதில் சிறுகதை சொற்க்களம் நுன்னறிவு உலக பிரசித்தி பெற்றோர். உலக சுவைமிகு தகவல்கள். சிறுவர் நிகழ்வுகள் பிறந்தநாள் புகைப்படங்கள் என்பன மூன்று மாதங்களுக்கொருமுறை வெளிவரும். தளிர் சஞ்சிகையில் நீங்களும் பங்குபற்றலாம்.

'அ' தமிழிலே முதல் எழுத்து. 'அம்மா', 'அப்பா' உங்களது முதல் தெய்வங்கள். அவர்கள் உங்கள் மீதும், நீங்கள் அவர்கள் மீதும் வைத்திருப்பது 'அன்பு'. அது தான் வாழ்க்கையின் முதற்படி. அத்துடன் எங்களை படைத்து, காத்து, அழிப்பவர் கடவுள். அவர் எங்கள் எல்லோர் மீதும் அன்பு செலுத்தி வருவதனால் 'அன்பு தான் கடவுள்' என்று அறிஞர்கள் கூறி வைத்துள்ளார்கள். உங்கள் உள்ளத்தில் அன்பு இருக்கும் வரை ஆண்டவனும் உங்களோடு துணையாக இருந்து பாதுகாப்பார். உங்களைப் போலவே அன்புள்ளம் கொண்ட தாத்தா அப்துல் கலாம். இந்தியாவிலே ராமேஸ்வரம் என்ற இடத்தில் சாதாரண மீனவக் குடும்பத்திலே பிறந்தவர். தனது ஆவலினாலும், ஆற்றலினாலும் உயர்கல்வி கற்று ஒரு விஞ்ஞானி ஆனார். தன்னைப் போலவே சகல மாணவர்களும் அறிவாளிகளாக வர வேண்டும் என ஆசைப்பட்டார். அதனால் அடிக்கடி மாணவர்களை சந்தித்து அறிவுரை கூறி வந்தார். இறுதியாக அண்மையில் அவர் மரணம் அடையும் போதும் மாணவர்கள் மத்தியிலேயே உரையாற்றிக் கொண்டிருந்தார். இந்தியாவிலே அதி உயர்ந்த பதவியான ஜனாதிபதி பதவியையும் வகித்த பெருமைக்குரியவர் அப்துல் கலாம் அவர்கள். தமிழரான அவர் அப்பதவியை வகித்தமை தமிழர்களாகிய எங்கள் அனைவருக்குமே பெருமையாகும். அகில உலக மக்கள் அனைவரும் இன்று அவருக்கு தங்களது அஞ்சலியை செலுத்தி உள்ளார்கள். இவர் இஸ்லாமிய சமூகத்தில் பிறந்த போதும் சைவ சமயத்தவர்களைப் போன்று சைவ உணவையே விரும்பி சாப்பிட்டு வந்தார். சைவ உணவு தான் மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வினை வழங்கும் என இன்று வைத்திய நிபுணர்களும் ஆலோசனை கூறி வருகின்றனர். அன்புள்ள மருமக்களே, நீங்களும் அறிஞர் அப்துல் கலாம் அவர்களைப் போலவே அன்புள்ளவர்களாகவும், அறிவுள்ளவர்களாகவும் வளர்ந்து வீட்டுக்கும், நாட்டுக்கும் நல்ல சேவைகளை செய்ய வேண்டும். அப்துல் கலாம் அவர்கள் கூறியபடி 'ஒரு நாள் நிச்சயம் விடியும் - அது உன்னால் மட்டுமே முடியும்'








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா

## நகை அடைவு மாடம்



# AMMA PAWN BROKER

## ரொரன்ரோவில் குறைந்த வட்டி
## தங்கநகை அடைவு மாடம்

- ரொரன்ரோவில் வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
- உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
- நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
- 5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம் அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்

**2%** முதல்

GOVT. LICENSED

அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்






$5000 per month $100 only no other charges



scan me

உங்கள் பழைய நகைகளை அதி உயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

Scarborough
416-757-0034 | 416-994-3861

Downtown
416-921-0034

105A-2425 Eglinton Ave E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
(சங்கர் அன்கோ ஸ்தாபனத்துக்கு அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத் துளிர்கள்...!

## பறவைகள்



பெயர் - ஹரிணி பரணிதரன் (Harini)
வயது: 10
வகுப்பு: 4

பறவைகளை வாங்கிக் கூட்டில் அடைத்து வளர்ப்பதை விட, ஒரு மரத்தை நடுங்கள். பறவைகளே அதில் நன்றாக கூடுகட்டி வாழ்ந்து கொள்ளும். சுதந்திரமாகப் பாடிப் பறந்து ஓடித் திரிந்து வாழும் பறவைகளை கூட்டில் அடைத்து கவலை அடைய வைப்பது பாவம் இல்லையா?

சில பறவைகளின் பெயர்கள் : மயில், குயில், கிளி, காகம், ஆந்தை, கோழி, புறா, பருந்து, மைனா, வான்கோழி, தீக்கோழி, செண்பகம் கொக்கு, வாத்து, அன்னம், சிட்டுக்குருவி, நாரை, மரங்கொத்தி.

## விடுகதை

1. கடல் இருக்கும் ஆனால் தண்ணீர் இருக்காது. எங்கே?

2. பற்கள் பல உண்டு கடிக்கத் தெரியாது - அது என்ன?

3. அடித்தால் விலகாது அணைத்தால் நிற்காது. - அது என்ன?

4. நீரிலே பூத்த பூ தலையிலே சூடாத பூ - அது என்ன?

5. தண்ணீரில் நீந்தி வரும் தரையில் தாண்டிவரும் - அது என்ன?

விடைகள்: 1. உலக வரைபடம். 2. சீப்பு 3. தண்ணீர் 4. உப்பு 5. தவளை

## தமிழ்மொழி



பெயர் - பிரவீன் விஜித பாஸ்கர்
வயது: 9
வகுப்பு: 5

நாம் குழந்தை பருவம் முதல் பேசி வரும் தமிழ்மொழி எமது தாய்மொழி. தமிழ்மொழி ஓர் இனிமையான மொழி. தமிழ் என்பதற்கு அன்பு, பக்தி, இனிமை எனப் பொருள் உண்டு. உலகில் உள்ள மூத்த மொழிகளிலே தமிழும் ஒன்றாகும். தமிழைத் தமிழ்த்தாய் என்று அன்போடும், பணிவோடும் வணங்குவர். தமிழ் இசைத்தமிழ் இயற்றமிழ் நாடகத்தமிழ் என மூன்று வகைப்படும். பல ஆயிரம் வருடங்களிற்கு முன்பே பல இலக்கிய நூல்கள் தமிழ்மொழியில் எழுந்துள்ளன. தமிழ் எங்கள் உயிர் போன்றது. தமிழ் மக்களாகிய நாம் எங்கே வாழ்ந்தாலும் தமிழைக் கற்க வேண்டும். எமது வீடுகளில் தமிழிலேயே பேச வேண்டும். பழமையும் பெருமையும் கொண்ட தமிழ் மொழியின் சிறப்புக்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டும்.

## தைத்திருநாள்



பெயர் - சஞ்ஜை சுரேஷ்குமார்
வயது: 10, வகுப்பு: 5

தமிழரின் நன்றி செலுத்தும் நன்னாள். தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். முதல் நாள் சூரியப் பொங்கல் எனப்படுகிறது. அந்நாளில் உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்துகின்றனர். பயிர்கள் வளர மழையும் வெயிலும் தேவையாகும் அவற்றைத் தருபவன் சூரியனே! சூரியப் பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கலாகும். இந்நாளில் தனக்கு உதவிய விலங்கினங்களுக்கு உழவன் நன்றி செலுத்துகிறான். நன்றி செலுத்தும் பண்பு தமிழனுக்கு மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்துள்ளது என்பதற்கு தைப்பொங்கல் சான்றாக அமைந்துள்ளது.



பெயர் - பிரசா பிரபாகரன்
வயது: 13
வகுப்பு: 3

## கல்வி



பெயர் - கஜமுகி ஞானேஸ்வரன்
வயது: 12 வகுப்பு: 7


'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக'.

கல்வி என்றால் என்ன? கல்வி என்றால் எமது அறிவை வளர்ப்பது. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு கல்வி மிகவும் அவசியமானது. உலகத்தில் வெற்றி பெற்ற அனைவரும் கல்வி கற்றவர்கள். கல்வியால்தான் இந்த உலகம் ஒற்றுமையாக, ஒன்றாக இருக்கிறது. இவ்வுலகத்தின் கண்டுபிடிப்புகள் எல்லாமே கல்வியாளர்களால்தான் நமக்கு கிடைத்துள்ளன. பணத்தால் எதையும் வாங்க முடியும். ஆனால் கல்வியை வாங்க முடியாது. கல்வி ஒருபோதும் தீமையை தராது. எப்போதும் நன்மையைத்தான் தரும். நாம் வாழும் கனடா நாட்டில் கல்வி மிகவும் அவசியமானது. எனவே கல்வியை கடைப்பிடித்து நாம் எல்லோரும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத் துளிர்கள்...!



## இந்த நூற்றாண்டின் இணையற்ற ஒரு தமிழன்!!

35 ஆண்டு காலம் நூலகராக அரசு பணியாற்றி தன் சம்பளம் முழுதும் அநாதை குழந்தைகளுக்கு வழங்கி விட்டு தன் தேவைகளுக்காக மாலை நேரங்களில் ஒரு உணவு விடுதியில் பணியாற்றிய மாபெரும் மனித நேயர் திரு.கல்யாண சுந்தரம்.! அரசு ஓய்வு ஊதியமாக கிடைத்த பத்து லட்சம் ரூபாவையும் ஏழைகளுக்கு வழங்கிய மாமனிதன்..!! தன் இறப்புக்கு பின் உடல் மற்றும் கண்களை திருநெல் வேலி மருத்துவ கல்லூரிக்கு தானம் செய்ய முன் வந்த மனிதர்.! உலகிலேயே தன் வாழ்நாள் வருமானம் முழுதும் தானமாக வழங்கிய ஒரே மனிதன் என்ற பெயர் பெற்ற வர்.! இந்திய அரசின் சிறந்த நூலகர் பரிசு பெற்றவர்.! இந்த மாமனிதர் ஒரு தமிழர் என்பதில் பெருமிதம் கொள்வோம்.! இவரின் சேவை மனப்பான்மையை ஒரு முன்னுதாரணமாக அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகி றோம்.!





## யார் இவர்?

86ம் பக்கத்தினை பார்க்கவும்.

**Dr. Sathy**
**Tel. : 416-747-7700**



**ALBION & FINCH DENTAL CENTRE**
**1620 Albion Road Etobicoke On. M9V 4R4**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத் துளிர்கள்...!



பெயர் - ஜெனிஷா புஷ்பாகரன்
வகுப்பு: 8,
வயது: 13

## கடைச்சங்க நூல்கள்

பத்துப்பாட்டு எட்டுத்தொகை
பதினெண்கீழ்க்கணக்கு

இவற்றுள் 36 நூல்கள் உள்ளன. பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்கள் பண்டைய காலத்து மன்னரின் வீரம் ஆட்சி சிறப்பு கொடை மக்களின் வாழ்க்கை நிலை பண்பாடு போன்றவற்றைப் பற்றி கூறுகின்றது. பதிணென்கீழ்க் கணக்கு அறநெறி இலக்கியங்களை உள்ளடக்கியது. உலகப் பொது மறையான திருக்குறள் பதினென் கீழ்க்கணக்கினுள் அடங்கும்.

### ஐம்பெரும் காப்பியம்

சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
மணிமேகலை - சீர்த்தலைச்சாத்தினார்
குண்டலகேசி - நாதகுத்தினார்
சீவகசிந்தாமணி - திருத்தக்கதேவர்
வளையாபதி - எழுதியவர் பெயர் அறியப்படவில்லை



பெயர் - கபிசன் பரராஜசிங்கம்
வயது: 10
வகுப்பு: 6

## வீரமா முனிவர்

வீரமா முனிவர்; இத்தாலியில் பிறந்து ரோமாபுரியில் கல்வி பயின்றார். யேசு சபையில் சேர்ந்து குருப்பட்டம் பெற்றபின் தனது அகவை முப்பதில் சமய சேவை செய்வதற்காக 1710ல் மதுரை வந்தார். இவர் சைவ மதத் துறவிகளைப் போல உடை உடுத்தி சைவ உணவு உண்டு வாழ்ந்தார். இவர் இலத்தீன், பிரஞ்சு, இத்தாலி, எபிரேய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். இவர் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தமிழில் செய்யுளிலும் உரைநடையிலும் நூல் எழுதும் வல்லமை பெற்றார். தனது பெயரை தைரியநாதன் என முதலில் மாற்றி பின்னர் அதீத தமிழ்பற்றின் காரணமாக வீரமாமுனிவர் என்ற பெயரைச் சூடிக் கொண்டார். சமயத்தொண்டு செய்ய வந்த வீரமாமுனிவர் ஆற்றிய தமிழ் தொண்டின் பெருமையை, அவர் ஆக்கிய செய்யுள் நூல்களும், உரை நடை நூல்களும், கத்தோலிக்க நூல்களும் பறை சாற்று கின்றன. வீரமாமுனிவர் பல நூல்களை எழுதினார். அவர் தமிழ்ப்பற்றை எடுத்துச்சொல்ல வார்த்தைகளே கிடையாது.



பெயர் - நிதுஷா பரராஜசிங்கம்
வயது: 13
வகுப்பு: 8

## அன்பு

'அன்பிற்கும் உண்டோ
அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்'.


என்று திருவள்ளுவர் கூறியது நாம் அனைவரும் அறிந்ததே. அன்பு உலகத்தில் வாழும் அனைத்து உயிரினங்களிடமும் காணப்படும் ஓர் விடயம். எவ்வளவுதான் கெட்ட எண்ணம் உள்ளவராக இருந்தாலும் ஆழ்மனதில் அன்பு இல்லாமலா இருக்கும்? போர், சண்டை, வெறுப்பு, நிறைந்த இக்காலத்தில், அன்பிற்கு முக்கியத்துவம் நாம் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காவிட்டால், இவ்வுலகம் ஒற்றுமையின்றி, போர்க்களமாய் காணப்படும். நாம் எமது குடும்பம், நண்பர்கள், ஆசிரியர்கள், உறவினர் எல்லோரின் மீதிலும் அன்பு செலுத்த நாம் முயல வேண்டும். தண்ணீர் இன்றி நாம் உயிர் வாழ முடியாதது போல அன்பு இல்லாமல் நாம் மகிழ்ச்சியான வாழ்வை வாழ முடியாது. அன்பு என்ற உணர்வு உலகத்தில் எல்லோரிடமும் இருந்தால் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். எனவே நாம் அன்பு உள்ளவர்களாக, அன்பு செலுத்துபவர்களாக வாழ்வோம்.!




பெயர் - மாதுமை நடராஜா
வயது: 11
ஆண்டு: 6

நல்லதைப் பாருங்கள்! நல்லதைக் கேளுங்கள்!! நல்லதைப் பேசுங்கள்!!! மகாத்மா காந்தியின் மேசையில் எப்போதும் மூன்று பொம்மை குரங்குகள் இருக்கும். அதில் ஒன்று கண்ணைப் பொத்திக் கொண்டு இருக்கும். ஒன்று காதைப் பொத்திக் கொண்டு இருக்கும் ஒன்று வாயைப் பொத்திக் கொண்டு இருக்கும். அவை எமக்கு என்ன சொல்கின்றன தெரியுமா? தீயதைப் பாராதே! தீயதைப் பேசாதே!! தீயதைக் கேட்காதே!!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்தளிர் விண்ணப்ப படிவம்

பூந்தளிர்களுக்கான பகுதி.. அன்புத்தம்பி தங்கைகளே இது உங்கள் பக்கம், பூந்தளிர் பகுதியில் உங்கள் பெயர்களுடன் புகைப்படங்களும் இடம்பெறவேண்டுமாயின், உங்கள் முகவரி மின் அஞ்சல் கல்வி பயிலும் பாடசாலை, தரம், என்பவற்றைத் தமிழில் எழுதி உங்களது புகைப் படத்துடன் எமது பூந்தளிர் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

பூந்தளிர் விண்ணப்பப் படிவம்

பெயர் ...............................................................................................

வகுப்பு தரம் ......................................................................................

பாடசாலை ..........................................................................................

தொலை பேசி இல ................................................................................

இதனை பூர்த்தி செய்து எமது மின் அஞ்சலுக்கோ அல்லது முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.



பெயர் - தக்சன் விமல்ராஜ்
வயது: 11, வகுப்பு: 6

தளிர் அங்கத்தவர்

## போட்டி இல. 7

அன்பின் தம்பி தங்கைகளே! வணக்கம். தளிர் தரும் 7வது சொல்லாக்கப் போட்டி. கடந்த தளிரில் 16 எழுத்துக் களை கொண்டு சொற்களை எழுதி அனுப்பினீர்கள், பலரும் முயன்று பல சொற்க்களைக் கண்டுபிடித்து எழுதியிருந்தீர்கள். உங்கள் முயற்சிக்கு எங்கள் வாழ்த்துக்கள். இம்முறையும் 16 எழுத்துக்களைக்கொண்டு சொற்களை ஆக்கப் போகிறீர்கள் நீங்கள் யாருடைய உதவியுடனும் சொற்களை ஆக்கலாம். ஆனால் நீங்கள் எழுதி அனுப்பும் சொற்களின் பொருளை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். தளிரில் பூந்தளிராகிய உங்களின் மொழி அறிவைக் கூட்டும் நோக்குடன்தான் இப்போட்டி நடத்தப்படுகிறது. நீங்கள் எழுதி அனுப்பும் அதிகூடிய சொற்களின் அடிப்படையிலேயே போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| த | ழ் | ர | ப |
| அ | ம் | ர் | ங் |
| க | இ | ட | ச |
| கு | தி | கா | மி |

**************************

அன்பு தம்பி தங்கையர்களே நாம் மேலே கூட்டினுள் தந்திருக்கும் எழுத்துக்களைக் கொண்டு சொற்களை அமைத்து எதிர்வரும் கார்த்திகை மாதம் (November) 10ம் திகதிக்கு முன் எமது மின் அஞ்சல் thalir.thalir@yahoo.ca அனுப்பி வைக்கப் படவேண்டும் அல்லது எமது முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

### போட்டி இல 6ல் தெரிவான போட்டியாளர்கள்

உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுக்கும் வகையில் கடந்த பூந்தளிரில் நாம் கொடுத்த சொற்களத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கூடுதலான சொற்க்களை உருவாக்கிய தம்பி தங்கைகளில் இம்முறையும் மூன்று பேர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். சொற்களத்தளிரில் போட்டி இல 6ல் பங்கு பற்றி பரிசில் பெறும் தம்பி தங்கையர்களின் பெயர்கள் பின்வருமாறு முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**முதலாவது இடத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்**

**செல்வி. கரிகாலன் தேவகி,**
7ம் ஆண்டு **Scarborough**

**இரண்டாவது இடத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்**

**செல்வி. பிரபாகரன் வைதேகி**
5ம் ஆண்டு **Scarborough**

**மூன்றாவது இடத்திற்க்காக தெரிவு செய்யப்பட்டவர்**

**கோகுல சர்மா கவிநயன்**
7ம் ஆண்டு **Mississauga**

பூந்தளிருக்கான சொற்களப்போட்டியில் வெற்றி பெற்றோர் பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொண்டு தளிர் சான்றிதழ் களையும் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான பரிசில்களை பிரபல வீடு விற்பனை முகவர் சங்கர் மாணிக்கம் அவர்களால் வழங்கி வைக்கப்படும். நீங்கள் அழைக்க வேண்டிய பூந்தளிர் தொலைபேசி இல:

**647 657 0910**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளிர் தரும் துவைத் துளிர்கள்

# தனிமரம் தோப்பாகாது... தமிழ் பழமொழி ஆனால் தோப்பே தனி மரமானது எப்படி...?

பலவித மரங்கள் ஒன்றாகக் கூட்டமாக, ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் செழித்துப் பூத்துக் குலுங்கி வளர்ந் திருப்பதைச் 'சோலை' என்பார்கள். 'சோலை' என்று சொன்னதும் பசுமையாக, நிழல்தரும் ஏதோவொரு இடம் பட்டென உங்கள் ஞாபகத்துக்கு வந்தே தீரும். நம்மூர்களில் மாஞ்சோலைகள் நிறைந்திருந்ததை இப்போது என்னால் நினைவுக்குக் கொண்டுவர முடிகிறது.



எங்களூரில் மாஞ்சோலைகள் நிறைந் திருப்பது போல, பிறேசிலில் 'கஜூ' (Cashew) மரங்கள் சோலைகளாக வளர்ந்தி ருக்கும். கஜூ விதைகளை விரும்பி உண்ணா தவர்களே உலகில் இல்லையெனலாம். உலகில் எந்த மரத்தின் கனிகளை எடுத்துக் கொண்டாலும், அவற்றின் விதைகள் கனி களுக்குள்ளேயே ஒளிந்து காணப்படும். ஆனால் விதிவிலக்காக, கஜூமரத்தின் கனியின் விதை மட்டும் அதற்கு வெளியே கனியுடன் ஒட்டியபடி காணப் படும். அப்படிப்பட்ட ஒரு கஜூ மரத்தின் சுவாரஸ்யம்தான் சுவைத் தளிராக வருகிறது...?

மேடைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் (Shows) பல கலைஞர்கள் பங்குபற்றுவார்கள். பலர் பங்குபற்று வதுதான் ஒரு நிகழ்ச்சிக்குச் சிறப்பும்கூட. ஆனால் விதிவிலக்காகச் சில நிகழ்ச்சிகள் ஒரேயொரு தனி மனித னால் மட்டும் நடத்தப்படும். அதை 'One man show' என் பார்கள். பல மரங்கள் ஒரு பெரு நிலப்பரப்பில் சேர்ந்து வளர்ந்திருப்பதைச் சோலை என்பார்கள் ஆனால் விதிவிலக் காக 'One man சோலை' ஒன்றும் உலகத்தில் இருக்கிறது. ஆமாம், ஒரேயொரு மரம், பலமரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருப்பது போலச் செறிவாகவும், செழிப்பாகவும், ஒரு உதை பந்தாட்ட மைதானத்தையும் விட அதிகமான நிலப்பரப்பில் வளர்ந்திருக்கிறது. தூரத்திலிருந்தோ, மேலிருந்தோ பார்க்கும் போது நூற்றுக்கணக்கான பெருமரங்கள் அடர்ந்து வளர்ந்திருப்பதைப் போலக் காட்சி தரும். அது ஒரேயொரு மரச் சோலையென்பதை யாரும் நம்ப மாட்டார்கள். அல்லது ஒரேயொரு மரத்தோப்பு.




பிறேசில் (Brazil) நாட்டில் பிராங்கி (Pirangi) என்னுமிடத்தில் உள்ள கஜூ மர மொன்றுதான் இப்படித் தனிமரச் சோலை யாக வளர்ந்திருக்கிறது. வழமையாகப் பூமி க்கு நிலைக்குத்தாகத்தான் கஜூ மரங்கள் வளரும். இந்த மரமும் அப்படித்தான் பெரு த்து வளர்ந்தது. பின்னர் என்ன நினைத்ததோ தெரியவில்லை, பூமிக்குக் கிடையான நிலை யில் தன் கிளைகளைப் பரப்பி வளரவிடச் செய்ய ஆரம்பித்துவிட்டது. 188ம் ஆண்டு லூயிஸ் இனாசியோ என்னும் மனிதர் நட்டுவைத்த இந்தக் கஜூ மரம், வளர ஆரம்பித்து, இன்றும் இப்போதும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இன்று அது 8000 சதுர மீட்டர் பரப் பளவில் வளர்ந்திருக்கிறது. அதாவது 70க்கும் மேற்பட்ட சராசரி கஜூ மரங்கள் வளர்ந்திருக்க வேண்டிய இடத்தில் ஒரேயொரு தனிமரம்.

இந்த ஒற்றை மரச் சோலையைச் சுற்றிப் பலர் குடி யிருக்கின்றனர். சொல்லப் போனால், அதுவொரு சுற்றுலாப் பயணிகளுக்கான இடமும் ஆகிவிட்டது. பெரும்பான்மையான மக்கள் தினமும் அந்த மரத்தைப் பார்வையிட வருகிறார்கள். அதனால் சுற்றுலாவாசி களை மையமாக வைத்து வியாபாரம் செய்யும் மக்கள், அந்த மரம் இருக்குமிடத்தைச் சுற்றியே வாழ்கின்றனர். அவர்களையெல்லாம் வீட்டைவிட்டு எழும்பிச் செல்லும் படி அரசு வலியுறுத்துகிறது. காரணம், அந்த மரம் இப் போதும் அகலமாகக் கிளைபரப்பி வளர்ந்து கொண்டே யிருக்கிறதாம். அதன் வளர்ச்சியைத் தடுக்காமல், மேலும் வளர அனுமதிப்பதற்காகவே இதை வலியுறுத்துகின்றது அரசு. மக்கள் குடியிருப்பதால், தற்சமயம் கிளைகளை வெட்டி விட்டுக் கொண்டே இருக்கின்றனராம். ஒரு தனிமரம் இந்த அளவுக்குப் பெரியதாக வளர்ந்தி ருப்பது உலக அதிசயத்தில் ஒன்றுதான். அத்துடன், ஒற்று மையாய் வாழ்வதுதான் பலம் என்பதைக் குறிப்பதற்காகத் தமிழில் இருக்கும் மிக அருமையான மூத்தோர் வாக்கு 'தனிமரம் தோப்பாகாது' என்பதாகும். ஆனால், அந்த வாக்கை இந்தத் தனிமரத் தோப்புப் பொய்யாக்கிவிட்டது. 'விதிவிலக்குகள் எப்போதும் விதிகளாகிவிடாது' என்ற வாக்கும் நம்மிடையே உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்துங்கள்: 1.4 மில்லியன் கையெழுத்து ஐ.நாவிடம் கையளிப்பு!

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் சிறிலங்காவை பாரப்படுத்துமாறு ஐ.நாவைக் கோரும் 1.4 மில்லியன் கையெழுத்து ஐ.நாவிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கையளித்தது. ஜெனீவா ஐ.நா மனித உரிமைச் சபை ஆணையாளர் அலுவலகம், ஐ.நா விசாரணைக்குழு, சிறிலங்கா தொடர்பிலான அமெரிக்க பிரேரணைக் குழு மற்றும் முப்பதுக்கும் மேற்பட்ட அனைத்துலக நாடுகளிடம் மில்லியன் கையெழுத்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 15ம் நாள் தொடங்கப்பட்ட இக்கையெழுத்து இயக்கத்தில் உலகப்பரப்பெங்கும் உள்ள தமிழ் மக்கள் இணையம் மூலமாகவும் நேரடியாகவும் கையெப்பமிட்டிருந்தனர். ஐ.நா மனித உரிமைச்சபை யில் சிறிலங்கா தொடர்பில் உள்நாடும் வெளிநாடும் இணைந்த தான கலப்பு விசாரணை நீதிமன்றம் அமைப்பது குறித்து வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்பதிவாக (Data CD) வடிவில் மில்லியன் ஒப்பங்கள் உள்ளடக்கப்பட்டு, ஜெனீவா ஐ.நா மனித உரிமைச்சபைக் கூட்டத்தொடரில் பங்கெடுத்துள்ள நா.க. தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இதனை ஒப்படைத்துள்ளனர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபாஷ் சந்திர போஸ் மரணம் தொடர்பான ஆவணங்கள் பகிரங்கமாக வெளியிடப்படும்



நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 1945-ல் விமான விபத்தில் இறந்தது தொடர்பான சர்ச்சை நீடித்து வருகிறது. அவர் விமான விபத்தில் இறக்கவில்லை என்று உறவினர்களும் அவரது ஆதரவாளர்களும் கருதுகின்றனர். இதில் மறைந்திருக்கும் மர்மத்தை அவிழ்க்க நேதாஜி தொடர்பாக மத்திய அரசிடம் உள்ள ஆவணங்கள் பகிரங்கமாக வெளியிடப்படும் என பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்திருந்தார். அதன் அடிப்படையில் மேற்கு வங்க அரசு தன்னிடம் இருந்த 64 ஆவணங்களை வெளியிட்டது. மத்திய அரசும் தனது ஆவணங்களை வெளியிட வேண்டும் என்று அம் மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி கேட்டுக்கொண்டார். மத்திய நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு மேற்கு வங்க அரசு சில ரகசிய ஆவணங்களை வெளியிட்டிருப்பதை வரவேற்று நேதாஜி பற்றி தெரிந்து கொள்ள மக்களுக்கு உரிமை உள்ளது என்பது தமது தனிப் பட்ட கருத்து என தெரிவித்தார். 1945ம் ஆண்டு தைவானில் நேரிட்ட விமான விபத்தில், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அவரது ஆதரவாளர்கள், ரஷ்யாவின் சைபீரியா பகுதியில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாக தெரிவித்து வருகின்றனர்.



மேலும் இதுதொடர்பாக மத்திய அரசிடம் ஆவணங்கள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதையடுத்து, நேதாஜி தொடர்பாக மத்திய அரசிடம் இருக்கும் ரகசிய ஆவணங்களை வெளியிடக்கோரி, மத்திய தகவல் ஆணையத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆவணங்களை வெளியிட்டால், வெளிநாடுகளுடனான இந்தியாவின் நட்புறவு பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இது தொடர்பாக நேதாஜியின் குடும்பத்தினர் இங்கிலாந்து அரசிடம் முறையிட்டுள்ளனர். நேதாஜி தொடர்பான கோப்புகளை வெளியிடும் விஷயத்தில் மத்திய அரசு மிகுந்த கவனத்துடன் செயல்படும். அதே சமயம் மத்திய அரசு ஆவணங்களை எப்போது வெளியிடும் என்பதை உரிய முறையில் சிந்தித்து முடிவெடுக்கும் என்றும் வெங்கையா நாயுடு கூறினார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Protect More.
**Save More.**

Insure your 🏠 + 🚗 and SAVE*

# Take Two Advantage

**Combine your home and auto and save up to 45%**



## Suren Navaratnarajah


Allstate Insurance Agency - Scarborough East

**416.520.6916**

snavaratnarajah@allstate.ca

Allstate.
You're in good hands.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org